அறைவு 04 இயம் 26 January 30 to Feb 05, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

உலகில்
இன அழிப்பிற்கு
உள்ளாகிய இனங்கள்
1. நிலைமாறுகால நீதி
2. நல்லிணக்கம்
3. நிரந்தர சமாதானம்
ஆகிய
பழமுறைகளிலேயே
சமாதானத்தை
எட்டியுள்ளன.




# திருமலை வதை முகாம்

## வதைசெய்யப்பட்ட 11 பேரும் யார்??

**தி**ருகோணமலையில் இயங்கி வந்த வதைமுகாமில் பதினொருபேர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து அவர்கள் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த 26ம் திகதி கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் நீதிபதி ஜிஹான் பிலிபிட்டியவின் முன்வைக்கப்பட்ட குறித்த வழக்கு விசாரணையின் போதே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இத்தகவலை வெளியிட்டுள்ளனர். விசாரணையின் போது குறித்த வதைமுகாமில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாகக் குற்றப்புலனாய்வின் நுண்ணாய்விற்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

திருகோணமலைக் கடற்படைக் கட்டளைப் பீடத்தின் கீழ் இயங்கிவரும் கடல்வள விஞ்ஞானக் கற்கைப் பீடத்தின் சூழலுக்குள் கண்டுபிடிக்கப்பட்ட வதைமுகாமான "கன்சைட்" வதைமுகாமிலிருந்தே இந்த மனித எச்சங்கள் கண்டு

17

## பெப்ரவரி 04

# கரிநாள்

## காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் அமைப்புக்கள் தீர்மானம்

**ஸ்ரீ**லங்காவின் சுதந்திர தினத்தைக் கரிநாளாக அனுட்டிக்கவும் பகிஸ்கரிப்புக்களை மேற்கொள்ளவும் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறீலங்காவின் 68வது சுதந்திர தினமாகிய பெப்ரவரி 4 அன்று, வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் சமநேரத்தில் கறுப்பு பட்டியணிந்து காலையிலிருந்து மாலை வரை அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும், நாடு முழுக்கவும் சிறைச்சாலைகளுக்குள் உள்ள தமிழ் அரசியல் கைதிகளும் சமநேரத்தில் அடையாள உண்ணாவிரதப்....

போராட்டத்தை 17



## உடற்பாகங்கள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டன

### சாட்சியமொன்றை அழிக்கக் கொல்லப்பட்டாரா??



பட உதவி – நிக்கி தொம்சன்

**மீ**ள்குடியேற்றப்பட்ட சம்பூரில் கொல்லப்பட்ட ஆறுவயதுச் சிறுவனான குகதாஸ் தர்சனின் உடற்பாகங்கள் மேலதிகப் பரிசோதனைக்காகக் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆரம்பக்கட்ட பிரேதப் பரிசோதனைகளை மேற்கொண்ட திருகோணமலை பொது வைத்தியாலையின் இரசாயனப் பகுப்பாய்வு மருத்துவ ஆலோசகர் மருத்துவர் எஸ். ராஜபக்ச மற்றும் 17



# 292 பேரைத் தவிர "வேறு யாரும் இல்லை"

## சனல் 4 ஊடகத்திற்கு மீண்டும் உறுதிப்படுத்தினார் நல்லாட்சியின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க



**" தடைமுகாம்கள் எவையும் இல்லை. வடக்கிலோ தெற்கிலோ அவ்வாறான எவையும் இல்லை என்பதை நான் தெளிவாகக் கூறுகின்றேன்.**

**அரசிற்குத் தெரிந்தவகையில் 292 பேர் மட்டுமே தடுப்பில் உள்ளனர். அவர்கள் மட்டுமே. அவ்வளவும்தான். வேறு யாரும் இல்லை"**

என சனல் நாலு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய பொங்கல் விழாவினை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்த போது முதற் தடவையாக ஸ்ரீலங்கா அரசின் பிரதமமந்திரியான ரணில் இக்கருத்தினைத் தெரிவித்திருந்ததை அடுத்து அக்கருத்தை மேலும் வலியுறுத்தும் முகமாக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கடத்தப்பட்டுக் காணாமற் போனவர்கள், போர்க் களத்தில் கைதான போர்க்கைதிகள், மன்னிப்பு வழங்கப்படும் என்ற உறுதிமொழியை நம்பி யுத்த முடிவில் சரணடைந்தவர்கள்,..... 17

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# ஸ்கொட்லாந்தின் சமஸ்டி??

ஐக்கியராச்சியத்திலுள்ள தனியொரு தேசமான இலண்டனில் தற்போது தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களான சமபந்தனும், சித்தார்த்தனும், அக்கட்சியின் பேச்சாளரான சுமந்திரனும் ஐக்கிய இராச்சியத்தின் மற்றொரு தேசமான ஸ்கொட்லாந்தில் நிலவும் சமஸ்டி ஆட்சி முறை பற்றிப் படித்து வருவதற்காகவே அங்கு சென்றுள்ளதாக அவர்களைத் தவிர்ந்த ஏனைய பலராலும் பரப்பபப்பட்டுள்ளது.

இத்தகவல் சம்பந்தமான உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது விட்டாலும் ஐக்கியராச்சியத்தில் நிலவும் சமஸ்டி தொடர்பாகவும் அம்முறை ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களுக்கான சமஸ்டி முறைக்கு எவ்வகையில் உதவும் என்பதையும் தமிழ் மக்கள் அறிந்துகொண்டிருத்தல் சாலச் சிறந்தது.

ஐக்கியராச்சியமானது நான்கு தேசங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு ஐக்கிய அரசு. அவ்வைக்கிய அரசினுள் இலண்டன், வேல்ஸ், வடஅயர்லாந்து, ஸ்கொட்லாந்து ஆகிய நான்கு தேசங்கள் தமது சுயநிர்ணய உரிமையுடன் ஒன்றித்து இருக்கின்றன.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ளது ஒற்றையாட்சி முறையாக இருந்தாலும் அவ்வொற்றையாட்சி முறையானது ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி முறையின் அடித்தளத்திற்கு நேர் எதிரான பண்பைக் கொண்டு காணப்படுகின்றது.

இதனை மிகத் தெளிவாக திரு. குமாரவடிவேல் குருபரன் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

" இந்த நாட்டின் தலை சிறந்த அரசியலமைப்பு சட்ட வல்லுனர்களில் ஒருவரான மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வாளரும் ஸ்காட்லாண்டின் எடின்பரோ பல்கலைக்கழக (Edinburgh University) விரிவுரையாளருமான கலாநிதி. அசங்க வெலிகல (Dr. Asanga Welikala) அவர்கள் ஐக்கிய இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருக்கும் அரசியல் கருத்தியல் வேறுபாடு காரணமாக இவை இரண்டினதும் ஒற்றையாட்சி முறைகளை ஒப்பிடக் கூடாது என்கிறார்.(the United Kingdom is not a model we can regard as a reference point for Sri Lankan debates on the unitary state as a constitutional proposition, due to fundamental differences in theory, praxis, and discourse.) என்று தெட்டத் தெளிவாக சொல்கிறார். இதற்கு காரணம் இலங்கையில் ஒற்றயாட்சியானது சிங்கள பௌத்த பெருந்தேசியவாத சிந்தனையின் அடிப்படையாக இருப்பதால் ஆகும். ஆனால் ஐக்கிய இராச்சியத்தின் ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் பின்னால் பெரிதளவில் அப்படியான ஒற்றையாட்சி தொடர்பான பெருந் தேசியவாத சிந்தனை மரபு இல்லை (அல்லது குறைவு) என்கிறார். ஸ்காட்லாண்ட் தனி நாடாக ஆவது தொடர்பில் அவர்கள் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை உள்ளவர்கள் என்பதனை அனைத்து பிரதான கட்சிகளும் ஒப்புக் கொண்டிருந்தமை அவர்களின் ஒற்றையாட்சி முறைமை பெயரளவிலானது என்பதை சுட்டிக் காட்டுகின்றது. மாறாக இலங்கையில் ஒற்றையாட்சி என்பது அதிகாரங்களை சிங்கள பௌத்த தேசத்துடன் தனித்துவமாக வைத்திருத்தல் என்று விளங்கப்படுகின்றது"

மேற்கூறப்பட்ட விளக்கத்தின் பின்னணியில் ஸ்கொட்லாந்தின் சமஸ்டி முறை தமிழத் தேசிய இனத்திற்குப் பொருந்த வேண்டுமாக இருந்தால் சிங்களப் பெருந்தேசியவாதச் சிந்தனையில் இருந்து அரசியல் அமைப்பானது விட்டு விலகிச் செல்தல் வேண்டும்.

அதேவேளை ஸ்கொட்லாந்தில் முற்றுமுழுதான சமஸ்டி அமைப்பு முறை வலுவில் இல்லை என்பதை வோசிங்டன் போஸ்ட என்ற அமெரிக்கப் பத்திரிகையின் அண்மைய செய்தியொன்று எமக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

இந்த நிலைகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டால் ஸ்கொட்லாந்தின் சமஸ்டிமுறை என்றுமே தமிழ்த் தேசத்திற்கானதொரு தீர்வுப் பொறிமுறைக்கு மாற்றாகக் கொள்ளப்படக்கூடிய சாத்தியங்கள் இல்லைஎன்றே கொள்ள முடிகின்றது.

ஆனால் அங்கு நிலவுகின்ற சமஸ்டி முறையைத் தவிர்த்து, தனித்தேசமாக ஸ்கொட்லாந்து எவ்வாறு தன்னையும் தனது ஸ்கொட்டிஸ் இன மக்களின் இருப்பையும் பேணிப்பாதுகாக்கத் தக்கவகையில் பிரயோகத்திலுள்ள அரசியல் அமைப்பின் பகுதிகள் எவை என்பதைப்பற்றி ஆராய்வது, ஸ்ரீலங்காவினால் முன்மொழியப்படவுள்ள அரசியல் அமைப்பில் தமிழ்த் தரப்பால் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகத் தெளிவைத்தரப் பயன்படலாம்.

இங்கு கவனிக்கவேண்டிய மிகமுக்கிய் விடயம் யாதெனில் புதிய அரசியலமைப்பை முன்மொழியப் போவதைக்காட்டி மார்ச் மாத ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளில் தனது தரப்பைப் பலப்படுத்தவே ஸ்ரீலங்கா அரசு முனையும். அம்முயற்சியினை தமிழர் தரப்பு தனக்குச் சாதகமாக எவ்வாறு மாற்றிக்கொள்ளும் என்பது தான்.

## கிண்ணியாவிற்கு புதிய வலயக் கல்விப் பணிப்பாளர்-ஏஎம் அஹமட்



கிண்ணியா வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக ஏ.எம். அகமட் லெப்பை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் செவ்வாக்கிழமை (26) கடமைப் பொறுப்புக்களை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த இவர், அட்டாளச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரியுரையாளர், கம்பளை ஸாஹிரா கல்லூரி அதிபர், கல்வியமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர், அக்கறைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்துக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

அண்மையில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு -வினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அதற்கான அனுமதியை கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்ரின் பெனான்டோ வழங்கி-யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## லீட்ஸ் - யு.எஸ்.எய்ட் உதவிகள்



இறக்கக்கண்டியில் உள்ள தேர்வுசெய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குச்சவெளி பிரதேச இளந்தளிர் மாற்றுத் திறனாளிகளுக்கு யூ எஸ் எய்ட் நிதி உதவியில் லீட்ஸ் நிறுவனம் அவ் வுதவியை வழங்கியுள்ளது. ஏழு மாற்றுத் - திறனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பிற்காக ரூபா பத்தாயிரம் லீட்ஸ் நிறுவனத்தின் மாற்றுத்திறனாளிகள் திட்ட அதிகாரி குமணன் வழங்கப்பட்டுள்ளன.

## தைப்பூசப் பொங்கல் - சிவன் கோவிலில் சிறப்பு நிகழ்வுகள்

திருகோணமலை விஸ்வநாதசுவாமி (சிவன்கோவில்) ஆலய அறநெறி பாடசாலையின் பொங்கல் விழாவும் தைப்பூச நிகழ்வும் 31.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் திருஞானசம்பந்தர் வீதியில் உள்ள மகேஸ்வரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு விஸ்வநாத-சுவாமி ஆலய அறங்காவலர் சபை தலைவர் க.செல்வராஜா அவர்கள் தலைமை தாங்கு-வதுடன் ஆசியுரையை ஆலய பிரதம சிவஸ்ரீ சு.மணி கிருஸ்ணகுமார் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

சிறப்புரைகளை சு.ஐங்கரன் திறன் அபிவிருத்தி உத்தியோ - கத்தர் மற்றும் லக்குமிதேவி சிறிதரன், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் சரோஜினி-தேவி சிவஞானம் சைவப்புலவர் அவர்களும் நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரியம்மை நோய் உலகில் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்ட பின்னரும் அந்நோயை உண்டாக்கும் வைரசை அமெரிக்கா இன்னும் பாதுகாத்து வருகிறது. இதற்கு காரணம் உயிர்ப்பல்வகைமையைக் காப்பதற்காகவாம் என விளக்கமும் சொல்கிறது.

## கிழக்கில் 45 வயது ஏன்? அன்வர் கேள்வி



கிழக்கு மாகாண சபையினுடைய முதலாவது கூட்டத் தொடரில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நாட்டில் ஏனைய மாகாண சபைகள் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும்போது கடைப் - பிடிக்கப்படும் உச்ச வயதெல்லையானது 45 ஆக காணப்படுகின்றது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் இந்த வயதெல்லையை 35 ஆக வரையறுப்பது ஏன் என கேள்வி எழுப்பினார்.

மேலும் வடக்கு மற்றும் வட மத்திய மாகாண சபை 45 வயது வரையுள்ள பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும் போது கிழக்கில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்-[illegible] களுக்கான வயதெல்லையை 35 ஆக வரையறுத்திருப்பது அநீதியாகும் எனவும் சபையில் பிரஸ்தாபித்தார்.

இவ் விடயத்திற்குப் பதிலளித்து பேசிய மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி கிழக்கு மாகாண சபையினால் அமைக்கப் -பட்டுள்ள உப குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி தீரக்கமான முடிவொன்றை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பதிலளித்து பேசினார்.

## - 150 கைதிகளுக்குப் பயிற்சி -

சனவரி 25 தொடக்கம் 30ஆம் திகதி வரை அனுட்டிக்கப்பட்ட உடற்பயிற்சி வாரத்தில், திருகோணமலை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்ற உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளில் விளக்கமறியல் கைதிகள் மற்றும் சிறைக்கைதிகள் நூற்றியைம்பது பேர் பங்குபற்றியதாக திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் யூ.ஜி.டபிள்யூ தென்னக்கோன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப்பிரச்சினையை தீர்க்கக் கோரி ஆர்ப்பாட்டம்

அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் கரும்புச் செய்கையில் ஈடுபடும் காணி உரிமையாளர்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு கோரி இரண்டாம் கட்ட ஆர்ப்பாட்டத்துடன் உண்ணாவிரதமும் இன்று சனிக்கிழமை ஹிங்குரான நகரத்தில் இடம்பெறவுள்ளதாக ஆலங்குளம் விவசாயிகள் அமைப்பின் செயலாளர் யூ.கே.சம்சுதீன், கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

கடந்த மாதம் 10ஆம் திகதி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு முன்பாக குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஆர்ப்பாட்டம் நடத்திய பின்னர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் இது தொடர்பில் மகஜர் கையளித்திருந்தும் இதுவரை காலமும் இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது.

இந்நிலையிலேயே, இரண்டாம் கட்ட ஆர்ப்பாட்டத்துடன் உண்ணாவிரதத்தையும் நடத்துவதற்கு திட்டமிட்டுலுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதில் "அம்பாறை மாவட்ட ஒன்றிணைந்த விவசாயிகள் பாதுகாப்பு அமைப்பு" எனும் பெயரில் ஆலங்குளம், தீகவாவி, நுரைச்சோலை, நீத்தை, இறக்காமம், கல்முனை, கல்மடுவ போன்ற பிரதேசங்களிலுள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் இப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நகரம்

# நுண்போசனைக் குறைபாட்டை தடுக்க
## திட்டம் அமுலில்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தென்னை மரங்களில் பரவலாகக் காணப்படும் நுண்போ'னைக் குறைபாட்டை கட்டுப்படுத்துவதற்கான சோடியம் டெட்ரா போறேட் என்ற இரசாயனப் பதார்த்தத்தை தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையின் மட்டக்களப்பு பிராந்திய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென அப்பிராந்திய முகாமையாளர் திருமதி பிறேமினி ரவிராஜ் தெரிவித்தார்.

நோய்த் தாக்கத்துக்குட்பட்ட தென்னை மரத்துக்கு மாட்டெருவுடன் சோடியம் டெட்ரா போறேட்டை கலந்து படிப்படியாக பிரயோகிப்பதன் மூலம் முற்றாக கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர் கூறினார். பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் தென்னை பயிர்ச்செய்கைச் சபைகளின் பிராந்திய அலுவலக வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் இன்று வியாழக்கிழமை கள விஜயம் மேற்கொண்டனர்.

இந்த நோய்த் தாக்கம் பற்றி தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் கிரான் தெங்கு அபிவிருத்தி பிரிவில் நடைபெற்றது. நுண்போஷனைக் குறைபாடு என்பது தென்னை மரங்கள் காய்க்காமையே ஆகும். கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்போ'னைக் குறைபாடு காரணமாக பல தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கிராமப்புறங்களிலேயே இந்நோய்த் தாக்கம் அதிகளவில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

# ஊடக அனுமதி அட்டை வழங்குவதில் தாமதம்

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் மாகாண ஊடகவியலாளர்களுக்கான ஊடக அனுமதி அட்டையை வழங்குவதில் இவ்வருடம் தாமதம் நிலவி வருவதாக பிராந்திய ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி ஊடக அனுமதி அட்டை கடந்த காலங்களில் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் உரிய நேரத்துக்கு பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் இந்த வருடம் 2016 புதுவருடம் தொடங்கி 26 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் ஊடக அனுமதி அட்டை பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தனர். இத்தாமதம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதோடு புதிய வருடத்துக்கான ஊடக அனுமதி அட்டையை உடன் வழங்குமாறும் பிராந்திய ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சட்டவிரோதமாக ஆற்றுமண் அகழ்வு

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக ஆற்று மண் ஏற்றிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு, 10,000 ரூபாய் அபராதம் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதவானும், நீதவான் நீதிமன்ற நீதவானுமாகிய திருமதி.நளினி கந்தசாமி, நேற்று வெள்ளிக்கிழமை விதித்துள்ளார்.

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் குறித்த நபர், கடந்த வியாழக் கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த நபரை, அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதவானும் நீதவான் நீதிமன்ற நீதவானுமாகிய திருமதி நளினி கந்தசாமி முன்னிலையில் நேற்று ஆஜர்செய்த போது அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

# கஞ்சா வைத்திருந்தமைக்கு அபராதம்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் காவல்துறையினரால் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரில் ஒருவருக்கு 10,000 ரூபாயும் ஏனைய இருவருக்கும் தலா 7,500 'ரூபாயும் அபராதம் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதவானும் நீதவான் நீதிமன்ற நீதவானுமாகிய திருமதி நளினி கந்தசாமி, அவர்கள் விதித்துள்ளார்.

மலைமுரசு MALAIMURASU

# மட்டக்களப்பு செய்திகள்

நகரம்...

# வேலையற்ற பட்டதாரிகள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் இன்று கவனயீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு, காந்தி பூங்கா முன்றலில் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தமக்கான வேலை வாய்ப்பை விரைவில் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை வலியுறுத்தும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

நகரம்...

# சிவநேசதுரை சந்திரகாந்தனின் விளக்கமறியல் நீடிப்பு



கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 27.01.2016 அன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து எதிர்வரும் 10ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பிலான விசாரணைகளுக்காக கடந்த ஒக்டோபர் மாதம் 11ல் இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காலம் போதாமையால் நீட்டிக்கமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனம்காணும் ஆய்வுகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்ற முடியாத காரணத்தினால் அதன் கால எல்லையை நீடித்துத் தருமாறு மட்டக்களப்பு மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பில் அந்த சங்கத்தினால் வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆளணி பற்றாக்குறை காரணமாக மேற்குறித்த சேவையை குறித்த தினத்தில் நிறைவேற்ற முடியாத காரணத்தினால் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். எனவே உத்தியோகத்தர்களின் சிரமத்தை கருத்தில்கொண்டு காலத்தை நீடிக்குமாறு அதில் கோரப்பட்டுள்ளது.

# நல்லாட்சி அரசாங்கத்தில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை

நல்லாட்சி அரசாங்கத்தில் முஸ்லிம்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லையென கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார். இது தொடர்பில் இன்று வியாழக்கிழமை அவர் விடுத்துள்ள அறிக்கையில், "இந்த நாட்டிலுள்ள மூவினச் சமூகங்களும் இணைந்து நல்லாட்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், தற்போது நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி செய்கின்றது.

இந்த நல்லாட்சியில் எங்களின் நீண்டகாலப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த நல்லாட்சிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் சமூகமும் பாரிய பங்களிப்புச் செய்தது.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமலுள்ளன. விசேடமாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவின் எல்லை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இது நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. அவ்வாறே கிரான் பிரதேச செயலக எல்லையும் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. நல்லாட்சியில் நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் காணப்படும் காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தலைமைகளும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் கலந்துரையாடி, இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வர வேண்டும். இந்தப் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால், சந்தேகத்துக்கும் தப்பான அபிப்பிராயங்களுக்கும் இட்டுச்செல்லும். அதற்கு இடமளியாமல் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## புதிய அரசியல் யாப்பு தமிழர்களுக்கான தீர்வாக அமையாது

நியூயோர்க் டைம்ஸ்

கொழும்பு

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு நீதிபதிகளையோ அல்லது நிபுணர்களையோ அழைக்க அவசியம் இல்லை என ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பீ.பி.சி சிங்கள சேவையில் இடம் பெற்ற நேர் காணலின் போதே அவர் இதனை குறிப்பிட்டார். உள்நாட்டு பொறிமுறையின் அடிப்படையிலே மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டு விசாரணை இடம் பெறும். அரசியலமைப்பு சீர்திருத்திற்கு அமைய அது முன் எடுக்கப்படும். வெளிநாட்டு நீதிபதிகளை கொண்டு வந்து அந்த செயற்பாடுகளை முன் எடுக்க யோசிக்கவும் இல்லை. அதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கவும் போவதில்லை.

நாட்டின் நீதித்துறையின் மீது தமக்கு நம்பிக்கையுள்ளது. அதுபோல ஏனைய விசாரணை பிரிவுகளிலுள்ள அதிகாரிகள் மீதும் தமக்கு நம்பிக்கையுள்ளது. இதன்காரணமாக நாட்டு பிரச்சினையை நாட்டுக்குள்ளேயே தீர்த்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு முரணாகியது பிரதமர் ரணிலின் உரை



தனியார் ஊடகங்களின் சிலவும், ஊடகவியலாளர்கள் சிலரும் இலங்கையில் இனவாதத்தை மீண்டும் கொழுந்துவிட்டெறியச் செய்யும் வகையில் செய்திகளை வழங்குவதாக கடந்த வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்திருந்தார். அத்துடன் கலகொட அத்தே ஞானசார தேரர் ஹோமாகமை நீதிமன்றத்தில் மேற்கொண்ட அடாவடி குறித்து எந்தவொரு ஊடகமும் நேர்மையாக செய்தி வெளியிடவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறான நிலையில் இனவாத நோக்குடன் செய்தி வெளியிடும் ஊடகவியலாளர்களை இரத்த வெறி கொண்ட அரக்கர்களாகவே கருத வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டி-யிருந்தார்.

இதுகுறித்து தற்போது கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆளாளுக்கு கண்டனம் தெரிவிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்கு கடுமையான அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தெரிவித்துள்ள டலஸ் அழஹப்பெரும, இது குறித்து சர்வதேச சமூகம் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்த அரசாங்கம் கொண்டுவரவுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு எதிரான வகையில் பிரதமரின் உரை அமைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஆலோசனைகள்

புதிய அரசியலமைப்பு தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசியலமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக மக்கள் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் குழு தெரிவித்துள்ளது.

மத குருமார்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே அவரிடம் சென்று கருத்து பெறுவதற்கு அந்தக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்ட மக்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்-கைகள் அண்மையில் நிறைவு பெற்றுள்ளதுடன், ஏனைய மாவட்ட மக்களின் கருத்துக்களை பெறும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அந்த குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானிய கப்பல் இலங்கையில்

பிரித்தானியாவின் போர்க் கப்பலான எச்எம்எஸ் டிபெண்டர் சுழற்ச்சி பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது. இந்து சமுத்திரத்தில் தமது பணிகளை மேற்கொள்ளும் முகமாக எரிபொருளை நிரப்பும் நோக்குடன் இந்தக்கப்பல் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிரித்தானிய போர்க்கப்பலான ஆர்என் இலங்கைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் வருகை தந்தது. இந்தநிலையில் இலங்கையுடன் உறவை பலப்படுத்திக் கொள்ளவே எச்எம்எஸ் டிபெண்டர் இலங்கைக்கு வந்துள்ளதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகரம் தெரிவித்து-ள்ளது. இதில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள், கரையோர கண்காணிப்பு ஹெலிகொப்டர்கள் என்பன பொருத்தப்பட்டுள்ளன.

## ஐ.நாவில் அமெரிக்கா வலியுறுத்தும்



இலங்கையில் காணாமல் போனவர்கள் விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாகாப்புப் பேரவையில் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. உத்தியோகப்பற்றற்ற ரீதியில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான அமெரிக்காவின் வதிவிடப் பிரதிநிதி சமந்தா பவர் இது விடயம் பற்றி குறிப்பிட்டுள்ளார். அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் மற்றும் காணாமல் போனவர்கள் விவகாரம் தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இலங்கை மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் பெருமளவில் காணாமல் போதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். காணமல்போதல்கள் தங்களது வாழக்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை காணாமல்போனவர்களின் உறவினர்கள் வெளிப்படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையிலும் மெக்ஸிக்கோவிலும் காணாமல்போதல் சம்பவங்கள் தொடர்பில் நம்பகமான தரவுத் தளங்கள் எதுவும் கிடையாது எனவும், தகவல்கள் உரிய முறையில் திரட்டப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் சந்திப்பு

### மகிந்த தரப்பிற்கு சாதகமாகியுள்ளது

கொழும்பு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெறவிருந்த ஊடக சந்திப்பொன்று கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்காக கம்பஹா மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் கட்சியின் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கலந்துரையாடலின் முடிவில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் அனைவரும் தாங்கள் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிரிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கும் வகையில் ஊடக சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் வந்திருந்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மைத்திரிக்கு எதிராக கலகக்குரல் எழுப்பி, கடுமையாக விமர்சித்துள்ளதுடன் வெளிப்படையாக மஹிந்தவுக்கான ஆதரவையும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அன்றைய தின ஊடக சந்திப்பு ரத்து செய்யப்பட்டதுடன், சந்திரிக்கா, மஹிந்த, மைத்திரி இணைந்து தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுக்கவுள்ளதாக நேற்று ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மயிரிழையில் விபத்து தவிர்ப்பு

காலி - கிங்தொட புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு புகையிரதங்கள் ஒரே புகையிரத பாதையில் பயணம் செய்தது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த எக்ஸ்பிரஸ் புகையிரதம் சமிஞ்சைகளை கவனிக்காது பயணித்ததால் மாத்தறையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த ரஜரட புகையிரத்துடன் மோதவிருந்த பாரிய விபத்தொன்று நேற்று சாரதிகளின் திறமை காரணமாக மயிரிழையில் தவிர்க்கப்பட்டு-ள்ளது. சம்பவம் தொடர்பாக கண்டி புகையிரதத்தின் சாரதி, உதவி சாரதி மற்றும் கடவை காவலாளி, உதவி கடவை காவலாளி ஆகியோர் பணிநீக்கம் செய்யப்பட்டு-ள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.




## இடமாற்றத்தினால் சந்தேகம்!!

தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைபு வெளியீடு யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இருந்து மாற்றப் பட்டுள்ளது. எனினும் திட்டமிட்டபடி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரசியல் தீர்வு திட்ட வரைபு வெளியீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியீட்டுக்கான அழைப்பிதழ்கள் அனைத்தும் அனுப்பப்பட்டு, சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டநிலையில் வெளியீட்டுக்கு ஒரு நாள் இருக்கும் முன்னர் இடம்மாற்றப்பட்டமை பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அரசியல் அழுத்தம் காரணமாகவே இறுதி நேரத்தில் இடம் வழங்க பல்கலைக்கழக நிர்வாகம் மறுத்ததாக உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இடப்பற்றாக்குறை ஏற்படும் என்பதனாலேயே தீர்வுத் திட்ட வரைபு வெளியீட்டின் இடம் மாற்றப்பட்டதாக பேரவையை சார்ந்தவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## குடியுரிமையை பறிக்கும் சட்டம் குறித்து விவாதம்

பிரான்ஸ்

பிரான்ஸ் தலைநகரான பரிசில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல்களில் 130 பேர் பலியான நிலையில் அந்நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே தீர்மானித்தார்.

அதில் ஒருகட்டமாக, இரட்டை குடியுரிமையுடன் பிரான்சில் வசித்து, தீவிரவாத வழக்குகளில் தண்டனை பெற்றவர்களின் குடியுரிமையை ரத்து செய்யும் வகையில் புதிய சட்டத்தை கொண்டுவர அரசு முடிவு செய்தது. இந்த சட்ட-மூலம் மீது பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுவரும் நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் நீதி அமைச்சர் கிறிஸ்டியானே டவுபிரா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அவரது இராஜினாமா ஏற்றுக் கொள்ளப் பட்டு புதிய அமைச்சராக ஜீன் ஜாக்குவெஸ் உர்வோஆஸ் பதவி ஏற்றுள்ளார்.



## தொடரும் நடவடிக்கைகளால் அமெரிக்கா சந்தேகம்

வட கொரியா



செய்மதிப் படங்களின் ஊடாக கிடைத்த தகவல்களை வைத்து றொக்கெட்டொன்றை ஏவுவதற்கு, வடகொரியா தயாராகி வருகிறதா-வென்ற சந்தேகத்தை, அமெரிக்க அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். செய்மதி ஏவும் இடமென வடகொரியா விவரிக்கின்ற இடமொன்றில், காணப்படும் அதிகளவிலான போக்குவரத்தும் அப்பகுதி-க்குள், ஏவுகணை தொடர்பாக உபகரணங்-களும், எரிபொருட் களும் காணப்படுவதாக, அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். தமது கண்காணிப்பு தொடரும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சிரியாவில் தொடரும் நிச்சயமற்ற சூழல்

ஜெனிவாவில் நடைபெறவுள்ள சிரியாவுக்கான அமைதி பேச்சுக்களை நடைமுறைப்படுத்துவதில் கூட நிச்சயமற்ற சூழல் நிலவியுள்ளது. அதிபர் அஸ்ஸத்துக்கு எதிரான பல குழுக்கள் பேச்சுக்களுக்காக ஜெனிவாவுக்கு பயணித்துள்ளதாக, மூத்த எதிரணி தலைவர் ஹஸ்ஸத் அப்த் அல் அஸீன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மீதான குண்டு தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்ற ஒப்பந்தம் எட்டப்படும் வரை இந்த பேச்சுக்களிலிருந்து விலகி இருக்கப்போவதாக சில எதிர்கட்சி குழுக்கள் முன்னதாக எச்சரித்திருந்தனர்.

இந்த பேச்சுக்கள் தோல்வியில் முடிய இடம்தரக்கூடாது என ஐநா தூதர் ஸ்ட.'.ப்பான் டெ மிஸ்துரா சிரிய மக்களுக்கு ஒரு ஒளிப்பதிவு மூலம் தெரிவித்துள்ளார்.

## டிபென்டரின் உற்பத்தி நிறுத்தம்

68 வருடங்களாக **டிபென்டர்** ரக வாகனம் உலகம் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாகனங்களின் உற்பத்திகளை நேற்று முதல் நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறுதி டிபென்டர் வாகனத்தை பொருத்தும் பணிகள் நேற்று இடம் பெற்றதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. இருப்பினும் அதற்கான காரணம் தெரிவிக்கப்பட-வில்லை.

1948ம் ஆண்டிலேயே டிபென்டர் வாகனம் முதலில் அறிமுகப்படுத்தப்-பட்டது. அதனை தொடர்ந்து அந்த வகை வாகனங்களில் எட்டாயிரம் டிபென்டர் ரக வாகனங்கள் சந்தைக்கு அனுப்பப்பட்ட நிலையில் அவை அனைத்தும் விரைவில் விற்பனையாகியுமை அதன் விசேடம்சமாகும்.

தற்போதைய நிலையில் இரண்டு மில்லியன் டிபென்டர் ரக வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு உலகளாவிய ரீதியில் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




## பொது மக்களைத் தாக்கியது சவுதி!!

ஜேர்மன்

பாதுகாப்புச் சபையின் வருடாந்த அறிக்கையில், சவூதி தலைமையிலான கூட்டணி, யேமனிலுள்ள பொதுமக்கள் மீது இலக்கு வைத்ததாகத் தெரிவித்ததாகத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை, அக்கூட்டணியின் சில தாக்குதல்கள், மனிதத்துக்கு எதிரான குற்றமாக அமையக்கூடுமெனத் தெரிவித்துள்ளது.

சவூதி தொடர்பான அறிக்கையில், கூட்டணியின் 119 தாக்குதல்கள் ஆவணப்படுத்தப்பட்டு, அவை, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மீறல் தொடர்பிலானவை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில், பொதுமக்கள் மீதான தாக்குதல், பரந்தளவிலும் கட்டமைப்புரீதியிலும் இடம்பெற்றதாகத் தெரிவித்துள்ள அவ்வறிக்கை, அதன் காரணமாக, அத்தாக்குதல்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்களாக அமையுமெனத் தெரிவித்துள்ளது. சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக, விசாரணை-களை மேற்கொள்ளுமாறு, குறித்த அறிக்கையைத் தயாரித்த நிபுணர்கள் குழு, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையைக் கேட்டுக் கொண்டுள்ளது.



இதன் காரணமாக, சவூதிக்கான ஆயுத விற்பனையை நிறுத்துமாறும், ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கோரிக்கை விடுத்துவரும் நிலையிலேயே, இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை இந்த அறிக்கையில், ஹூதி போராளிகளும் அவர்களது தோழமைக் குழுக்களும், பொதுமக்கள் மீது தாக்குதல்களை

## நான் தீவிரவாதி அல்ல – நம்புங்கள்

பிரித்தானியா

லண்டனைச் சேர்ந்த முனா ஆதான்(18). அவர் ஒரு அட்டையில் நான் ஒரு முஸ்லீம் தீவிரவாதி அல்ல. என்னை நம்பினால் கட்டிப்பிடியுங்கள் என்று எழுதி அந்த மத்திய லண்டனில் உள்ள ஒரு பொது இடத்தில் நின்றுள்ளார்.

அந்த வழியாக சென்றவர்கள் பலர் ஆதானின் அட்டையை பார்த்துவிட்டு அவளை கட்டிப்பிடித்துள்ளனர்.

இது குறித்து ஆதான் கூறுகையில், எப்பொழுது பார்த்தாலும் முஸ்லீம்கள் பற்றி கெட்ட செய்திகள் தான் வரும். அதனால் தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன் என் பரிசோதனை வெற்றி அடைந்துள்ளது. மனிதநேயம் சாகவில்லை என்றார்.



## 80,000 வரையானோர் திருப்பப்படும் அபாயம்

சுவீடன்

சுவீடனை, கடந்த வருடம் (2015) வந்தடைந்த அகதிகள், புகலிடக் கோரிக்கையாளர்களில், புகலிடக் கோரிக்கை விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டோரில், 80,000 வரையானோரை வெளியேற்றும் சமிக்ஞையை சுவீடனின் உள்விவகார அமைச்சர் அன்டேர்ஸ் இச்மன் தெரிவித்துள்ளார். தவிர, அகதி-களுக்கு பொறுப்பான காவல்துறை யினரையும் அதிகாரிகளையும் அகதிகளை வெளியேற்றும் நடவடிக்கையை ஒழுங்கமைக்கு-மாறு அரசாங்கம் வினவியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வழமையாக வெளியேற்றப் படுபவர்கள், வர்த்தக விமானங் களிலேயே வெளியேற்றப்படுகின்ற நிலையில், மேற்படி பாரிய எண்ணிக்கை காரணமாக, இதற் கென சிறப்பாக அமர்த்தப்பட்ட விமானங்களில் வெளியேற்றப்பட வுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். 9.8 மில்லியன் குடித்தொகையைக் கொண்டுள்ள சுவீடன், தனது, குடித்தொகையின் வீதத்திற்கு அதிகமாக அகதிகளை உள்ளெடுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்றாகும்.

## கருக்கலைப்புக்கு அனுமதி

பிரேசில்

சீகா வைரஸ் பாதிப்பினால் பிறக்கும் குழந்தைகளின் தலை சிறியதாக உள்ளமை காரணமாக பிரேசிலில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு கருக்கலைப்பு உரிமையை பெற்றுத்தருமாறு, அந்த நாட்டின் விசேட நீதிமன்றத்தில் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இது வரையில் குறித்த வைரஸ் பிரேசில் உட்பட்ட 21 நாடுகளுக்கு பரவியுள்ள நிலையில், 3 அல்லது 4 மில்லியன் தொகையினர் பாதிப்படைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தாயகச் செய்திகள்

## காணாமல் போனோர் விடுவிப்பு

### தேரருக்கு ஆபத்தாகும் - பொது பலசேனா அறிவிப்பு



அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் செயலாளரும், காணாமற்போனோரை தேடிக் கண்டறிவதற்கான குழுவின் தலைவருமான சு.மகேந்திரன், தமிழ் அரசியல் கைதிகளால் ஞானசார தேரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவது இல்லை என தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குறித்த அமைப்பு கடந்த வியாழக்கிழமை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இந்நிலையில் ஞானசார தேரருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுவதாக பொதுபல சேனா அமைப்பின் பேச்சாளர் கருத்து வெளியிட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது எனவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு கிழக்கில் கரிநாளாகும் 68வது ஸ்ரீலங்காவின் சுதந்திர தினம்



யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஏழு வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் சூழலில் சிறீலங்கா அரசாங்கமானது, 'ஆட்கடத்தல் மற்றும் தடுத்துவைத்தல்' சம்பவங்கள் தொடர்பில் 'பொறுப்புக்கூறல் மற்றும் பரிகாரநீதி' வழங்கல் செயல்பாட்டு முன்னெடுப்புகளை இன்றுவரையும் இதயசுத்தியுடன் மேற்கொள்ளாத நிலைமைகளை கண்டித்தும் - வலியுறுத்தியும், சிறீலங்காவின் 68வது சுதந்திர தினமாகிய பெப்ரவரி 4 அன்று, வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் சமநேரத்தில் கறுப்பு பட்டியணிந்து காலையிலிருந்து மாலை வரை அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும், நாடு முழுக்கவும் சிறைச்சாலைகளுக்குள் உள்ள தமிழ் அரசியல் கைதிகளும் சமநேரத்தில் அடையாள உண்ணாவிரதப்போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் சங்கங்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கூடிக் கலந்தாலோசித்து குறித்த முடிவை அறிவித்துள்ளன.

இந்த நாட்டில் இரகசிய முகாம்கள் காணப்பட்டிருப்பதற்கான மறுதலிக்க முடியாத வகையிலான ஆதாரங்கள் உள்ளதாகவும், ஐக்கியநாடுகள் சபையின் நிபுணர் குழுவும் - கண்காணிப்புக்குழுவும், இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகளும் இதனை உறுதிசெய்துள்ள இக்காலகட்டத்தில் தமக்கு துரிதமானதும், நீதியானதுமான பதிலை, பொறுப்புக்கூறலை தெரிவிக்குமாறும், குறித்த இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு 'சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டுக்கொண்டிருந்தோர், படுகொலை செய்யப்பட்டோர், அவர்களில் எஞ்சிப்பிழைத்திருப்போர்' பற்றிய தமது உறவுகளின் பெயர் விவரங்கள் இதயசுத்தியுடன் நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தி, தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஊடாக ஜனாதிபதி மைத்திபால சிறிசேன அவர்களுக்கு கையொப்பமிட்டு மகஜர் ஒன்றையும் சங்கங்கள் கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைத்துள்ளன.

## மாணவர்களுக்கு போதைப் பொருள் விற்றவர் கைது

பாடசாலை மாணவர்களுக்கு புகையிலை மற்றும் சிகரெட் என்பவற்றை விற்பனை செய்த தேநீர்க் கடை உரிமையாளரை, கடந்த வியாழக்கிழமை கைதுசெய்துள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு காவல்துறையினர் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் நாவலர் வீதி பகுதியில் உள்ள சைவ உணவகத்தில் பாடசாலை மாணவர்களுக்கு சிகரெட் விற்பதாக கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சிவில் உடையில் சென்ற காவல்துறையினர் தேநீர் கடையின் பின்பக்கம் சென்று பார்த்த போது, பாடசாலை மாணவர்கள் சிகரெட் புகைப்பிடிப்பதனைக் கண்டுள்ளனர். இது தொடர்பில் அக்கடை உரிமையாளருக்கும் பாடசாலை மாணவன் ஒருவனுக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

## யாழில் இராணுவ ஆட்சி நடைபெறவில்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்




அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய அனைவருக்கும் பூரண சுதந்திரம் உண்டு என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார். வடக்கில் இராணுவ ஆட்சி நிலவுவதாக சனல்4 ஊடகம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவித்தபோது, வடக்கில் இராணுவ ஆட்சி நிலவி வருவதாகவும், சோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தி வரும் சனல்-4 ஊடகம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து அவ்வாறான நிலைமை இருக்கின்றதா என்பதனை கண்காணிக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம். பெரும் எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் வடக்கிற்கு பயணம் செய்கின்றனர். நயினாதீவிற்கு பயணம் செய்வது தொடர்பில் எவ்வித தடையும் கிடையாது என தெரிவித்துள்ளார்.

## பௌத்த விகாரை நிர்மாணிக்க பௌத்த மாணவர் ஒன்றியம் கோரிக்கை??

யாழ்ப்பாணம்




யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் பௌத்த விகாரை அமைக்கப்படவேண்டும் எனக் கோரி துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. "யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு முன்பாக எங்களுக்கு பௌத்த விகாரை வேண்டும். யாழ். பல்கலைக்கழக பௌத்த மாணவர் ஒன்றியம் இலங்கை" என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் கலைப்பீடத்துக்கு அருகில் உள்ள மரங்களில் கடந்த புதன்கிழமை காணப்பட்டுள்ளன. கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் கல்வி கற்கின்ற போதிலும் இதுவரையில் இத்தகைய கோரிக்கை எதுவும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எந்தவொரு மாணவர் அமைப்பும் முன் வைக்கவில்லையென பல்கலைக்கழக உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வெறும் 14 ஏக்கரே விடுவிப்பு

வவுனியா

வடக்கில் மொத்தமாக 71,000 ஏக்கர் நிலத்தை இலங்கை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அத்துடன் வவுனியா மாவட்டத்தில் 23,777 ஏக்கர் காணி இராணுவத்தின் அபகரிப்பில் உள்ளதாகவும் அதனை எவரும் கண்டுகொள்வதில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். இவற்றில் விவசாய நிலங்கள், தொழிற்புலங்கள், பொதுமக்களின் காணிகள், அரச காணிகள், பொதுமக்கள் அலுவலகங்கள் எனப் பலவும் அடங்குகின்றன.

இதேவேளை இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில் புதிய அரசு 23,777 ஏக்கர் நிலத்தில் வெறும் 14 ஏக்கரை மாத்திரமே வவுனியா மாவட்டத்தில் விடுவித்துள்ளது.

## தொடரும் போராட்டம்

இராமேஸ்வர மீனவர்களால் நேற்று வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாக போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. நான்கு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் இடம்பெற்றுவருகின்றது. நாகையில் நடைபெறும் நிலக்கரி இறக்கும் கப்பல் மற்றும் துறைமுகத்தை முற்றுகையிட்டு இடம்பெறும் போராட்டத்தில் இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை, தஞ்சை, திருவாரூர் மற்றும் காரைக்கால் பகுதி மீன்வர்கள் கலந்துகொள்கின்றனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். போராட்டம் இடம்பெற்றுவரும் நிலையில், 6 மாவட்டங்களைச் சேர்ந்த 4,600ற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் காரையில் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## கத்தி முனையில் கொள்ளை

நவாலி தெற்கு மானிப்பாய் பகுதியை சேர்ந்த சம்போ ராஜேந்திரம் என்பவரது வீட்டில் கத்தி முனையில் கொள்ளை இடம்பெற்றுள்ளது. பத்து பவுனுக்கும் அதிகமான நகைகளும் 3 இலட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பின்புற ஜன்னல் கம்பிகளை வெட்டி வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள், கத்தியை காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி இக்கொள்ளை மேற்கொண்டுள்ளதாகவும் இக்கொள்ளையின்போது வீட்டில் இருந்த குறித்த நபருக்கு கட்டை ஒன்றால் தாக்கியுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். குறித்த கொள்ளை சம்பவம் தொடர்பாக மோப்ப நாய்களுடைய உதவியுடன் தேடுதலை ஆரம்பித்துள்ளதாகவும் விரைவில் குற்றவாளியை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மானிப்பாய் காவல்துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

## மூடப்படுகின்றன சில மதுபான சாலைகள்

யாழ்ப்பாணத்தில் சட்டவிதிமுறைகளுக்கு மாறான வகையில் இயங்கும் சில மதுபான சாலைகளை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

இதில் முதற்கட்டமாக ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் உள்ள மதுபான சாலைகளை அகற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மதுவரித்திணைக்கள உயர் அதிகாரிகள் குறித்த முறைப்பாடுகளைப் பெற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடாமணியே வா வா...

"செண்பகமே சித்திரமே செங்கதிரே
செல்லக்கிளியே சின்னவளே செல்ல
பண்பகமே பாசமலரே பாக்கியவதி
பார்புகழ் பைந்தமிழ் செல்வியே
தண்பகமே தாமரையே தவமலரே
தரணிதனில் புகழ்பூத்த தாட்சாயினி
இன்பகமே எனதருமை இன்பவல்லி
என்னருகே வா..வா.."

"மல்லிகையே மாதரசே மணிவிளக்கே
மாசறு மரகதமே மாமணியே
மெல்லிசையே மின்விளக்கே மேகவல்லி
மின்மினியாய் ஒளிவீசும் ,மீனாட்சி
நல்லிசையே நாயகியே நாமகளே
நல்மகளே நாத நர்த்தகியே
சொல்லிசையே சுந்தரமே சுகந்தமே
சூடாமணியே வா..வா.."

- ஜெ.ஜெ.ஸ்ரீ -

## செய்யலாமா??

நோயினை மருந்து கொல்லும்!
நோய் முற்றிப் பழுத்திட்டாலோ
நோய் கொல்லும் மருந்தை! எந்த
நோயையும் மருந்து கொல்லா!

நோய் நாடி முதலும் நாடி
நோயினைத் தணிக்கத் தக்க
வாய்நாடி வாய்ப்பச் செய்யும் (948)
வள்ளுவம் கூடத் தோற்கும்!

"இடம் நோய்க்குக் கொடுத்திடாதே"
என்று தான் அவ்வை சொன்னார்!
ஊடம்புள்ளும் வெளியும் தூய்மை
உடைத்தாயின் நோய் வராதாம்!

என்ன நாம் செயலாம்? மேலை
இருமுறை கழுவிக்கொண்டு
உன்னத எண்ணத்தாலே
உளந்தூய்மை செய்யலாமா?

– தாமரைத்தீவான் –
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

## ஒளிராதோ?

பண்டையில் "கிண்ணியாத் துறை"யினுக்கோர் நல்ல
"பாலம்" அமைத்திடல் வேண்டுமென்றே
எண்ணம் இருந்ததால் பாராளுமன்றத்தில்
எத்தனையோ முறை ஒப்புவித்தார்!

அன்றைய ஆட்சியின் உறுப்பினர், மந்திரி
ஆனவர் எல்லோர்தம் உள்ளத்திலும்
உன்னத ஆசைகள் உருப்பெறவில்லையே
உருண்டது ஆண்டுகள் பற்பலவாம்

எண்ணக் கனவுகள் மெய்ப்படு வண்ணமாய்
எழில்மிகு பாலமும் வந்ததுதான்
இன்னும் இலங்கையில் இது போலும் நீளமாய்
இல்லையாம் பாலங்கள் சொல்லுகிறார்.

புயலெனும் வேகத்தில் புறப்படும் ஊர்திகள்
போக்குவரத்துக்கள் கங்குல், பகல்
வியத்தகு வகையிலே நடந்திடும் ஆயினும்
விபத்துக்கள் சாலையில் நடக்கவில்லை

கண்டி, கொழும்பெலாம் கண்டுநாம் மீளலாம்
காலைபோய் மாலையும் வந்திடலாம்
உண்மையில் அன்று நாம் "கல்முனை" போய்வர
ஓரிரு நாட்கள் சென்றிடலாம்

இந்த வசதிகள் இருப்பதால் பயணிகள்
இன்பமாய் எங்குமே போய் வரலாம்
விந்தை இரவினில் கிண்ணியாப் பாலத்தின்
வீதிவிளக்குகள் எரிவதில்லை

"நகரசபை"யுடன் மின்சார சபைக்குமோர்
நடைமுறைச் சிக்கலும் உள்ளமையால்
பகர்ந்திடும் பாலத்தில் இரவினில் மின்னொளி
பரவிடா நிலையினால் இருள் மயமே

இப்பாலம் ஒளிபெறச் செய்யும் முயற்சியில்.
"இம்ரான் மஃறூப்பு "எம்பி" யுடன்
அப்துல்லா மஃறூப்பும் ஆர்வம் எடுத்திடின்
அடுத்தநாள் "ஒளிராதோ மின்விளக்கு?"

அ.கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு

## மாறாதிருப்பதென்னவோ

மு. யாழவன்

காலத்தின் அசைவில்
கரைந்து போகின்றன. ஒவ்வொன்றாக..
மின்னஞ்சல்
தொலைநகல்
குறுந்தகவலென
ஒன்றின் பின் ஒன்றாக வந்ததும்
காணாமல் போயிற்று கடிதங்கள்
நெல்லறுக்கும் இயந்திரம் வந்தபின்னர்
கதிரறுக்கும் கத்திகளை காணவில்லை!
உரலும், உலக்கையும்
எப்படி காணாமல் போனது?
மிக்ஸியையும், கிரைண்டரையும்
விசாரிக்காமல் தூக்கி உள்ளே போடவேண்டும்
மாட்டுவண்டி எப்படி
மறைந்து போனதென
உழவு இயந்திரத்திடம்
உள்ளக விசாரணை தொடங்கட்டும்
விறகடுப்புக்கு நேர்ந்த
வில்லங்கம் யாதென
காஸ் அடுப்புக்கள் மட்டுமே அறியும்.
போர்க்கைதிகள் பற்றி
கோத்தபாய வாய் திறக்காமல்
இருப்பதைப்போலத்தான்
மின்விசிறிகளும் மௌனம் காக்கின்றன.
எங்கேயடா பனையோலை விசிறிகள்?
அரசியல் கைதிகள் எவரும் இல்லையெனச்
சொன்ன
ரணிலோடு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்
தார்ச்சாலைகளை.
செம்மண் வீதிகள் பற்றி
தனக்கெதுவும் தெரியாதாம்.
நெக்ரோவும், ஒரேஞ்பார்லியும்
ஆதிக்கம் செலுத்த
"சன்சில்"க்காய் மாறியிருக்கிறது
செவ்விளநீர்!
இடியப்பச்சிக்கல் வந்திருக்கிறது
இடியப்பத்திற்கு
"நூடில்ஸ் இரண்டு நிமிடங்களில்"
விளம்பரத்தைப் பார்த்து
வியர்த்துப்போய்க்கிடக்கிறது.
சலவை இயந்திரங்கள்
சலவைக்கற்களை சமாதிக் கற்களாக்கிவிட்டன.
சுதந்திரதினத்தன்று விடுதலையாகும்
சிறுகுற்றக் கைதிகள் போல
மின்சாரம் தடைப்பட்ட நேரங்களில்
வெளிச்சத்திற்கு வருகின்றன
லாந்தரும், குப்பிவிளக்கும்
தாயைப்பழித்தாலும்
தண்ணீரைப் பழிக்காதே என்றாய்,
தமிழா!
நிலத்தடி நீர் கூட
மாறியிருக்கிறது
மாசு நீராக!
மாறாமல் இருப்பது தாயன்பு மட்டும்தான்
அம்மா!
இன்றுனக்கு பிறந்த நாள்.

# இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)




### பளமோட்டைச் சாசனம்

இடத்தின் பெயர், ஆலயம் என்பவற்றிற்கு அடுத்தப்படியாக முக்கியத்துவம் பெறுவது தானம் அளித்த நங்கை சானியின் சமூகநிலை. கணவன் இறந்த பின்னால் அவன் நினைவாகத் தானமளித்த இப்பெண் விஜயராஜேஸ்வரத்திற்கு அளித்த தான விபரம் வருமாறு. ஆறு களஞ்சு பொன்முடி, சந்தி விளக்கொன்றினை எரிப்பதற்காக ஒரு காசு, நந்தவனம் வைத்திருப்பதற்கு எட்டுக்காசு, இவற்றுக்கு ஏற்படும் அழிவுசேர்வுகளை ஈடுசெய்வதற்கு என ஒரு காசு, தேவரடியார் எழுவரைத் தலை இலட்சினையிட்டு பராமரிப்பதற்கென்று இருபத்திமூன்று காசு என்பவற்றை ஆலயத்திற்கு தானமான வழங்கினாள் என இச்சாசனம் உறுதிப்படுத்து-கிறது. மேற்கூறிய தான விபரங்கள் நங்கை சானியின் பொருளாதார நிலையினை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

விளக்கெரித்தல், நந்தவனங்களைப் பராமரித்தல் போன்ற ஆலயக் கடமைகளுக்கு அப்பால் தேவரடியார்கள் தொடர்பிலும் நங்கை சானியால் தானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தேவரடியார்கள் அல்லது தேவதாசிகள் முறைமை சோழராட்சியின் நீட்சியாக இங்கு நோக்கப்படுகிறது. கோயில் திருப்பணிக்காக தங்களை முழுமையாக அர்பணித்துக் கொண்டவர்கள் தேவரடியார்கள்.

பக்தி இலக்கியம் மேலோங்கி இருந்த ஆறாம் நூற்றாண்டளவில் இவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தாலும் இராஜராஜ சோழனின் ஆட்சிக்காலத்திலேயே தேவரடியார்கள் முறைமை நிறுவனமயப்படுத்தப்பட்டது. தேவரடியார்கள் கோவில் ஊழியர்களாக்கப்பட்டார்கள், ஒரு விதமான அடிமைமுறை அவர்கள் மேல் திணிக்கப்பட்டது. இராஜராஜன் தஞ்சைப் பெரியகோவிலை நிர்மானித்த காலத்தில் அங்கு பணிபுரிவதற்கென 400 தளிசேரி பெண்களைக் கொண்டுவந்து நியமித்தான்.

பல குலங்களில் இருந்தும் தாமாக தம்மை இறைவனுக்கு அற்பணித்துக் கொண்ட பெண்களும், தொடர்ச்சியாக சோழர்களால் மேற்கொள்ளப்பட்ட போர்களில் போர்க்கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களும், வறுமை காரணமாக தாமாகவோ அல்லது செல்வந்தர்களால் விலை கொடுத்து வாங்கப்பட்ட பின்னர் ஆலயங்களுக்கு விற்கப்பட்டவர்களும் தேவரடியார்களில் அடங்கி இருந்தனர்.

சோழர்காலத்தில் தேவரடியார்களுக்கு இலச்சினை இடும் பழக்கம் இருந்திருக்கிறது. சைவக்கோவில்களில் பணியாற்றும் தேவரடியார்களுக்கு சூல இலச்சனையும், வைணவக் கோவில்களில் பணியாற்றும் தேவரடியார்களுக்கு சக்கர இலச்சனையும் இடப்பட்டது.

இந்தப் பின்னணியிலேயே நங்கை சானியால் கந்தளாயில் இருந்த விஜயராஜேஸ்வர-த்திற்கு தேவரடியார் எழுவரைத் தலை இலச்சனையிட்டு பராமரிப்பதற்கு வழங்கப்பட்ட தானத்தினைப் புரிந்துகொள்ள முடியும். இவையனைத்தையும் தானமாக வழங்கிய அப்பெண் இந்த அறக்கட்டளைகளை பரிபாலனம் செய்யும் பொறுப்பினை விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காறன் எனும் படைப்பிரிவிடம் ஒப்படைத்த செய்தியை கல்வெட்டின் இறுதி வாசகங்கள் ஆதாரப்படுத்துகின்றன.

சோழப்பேரரசின் ஆதிக்க விரிவாக்கத்-திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது அவர்களது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட திறமையும், தேர்ச்சியும் பெற்ற நிலையான படையணிகள். அவற்றில் முக்கியமான பிரிவுகளில் ஒன்று வேளைக்காறப் படையணி.

அதில் வலங்கை, இடங்கை முதலான பதினாங்கு பிரிவுகள் இருந்தது. சோழராட்சி இலங்கையில் முற்றுப்பெற்ற பின்னரும் இவர்கள் பெரும் வலிமையுடன் அதிகாரம் மிக்கவர்களாக சிங்கள மன்னர்களிடம் சேவகம் செய்தனர்.

இவர்கள் சேவைமானியமாக நிலங்களைப் பெற்றிருந்தனர். இவ்வாறான படைப்பிரிவுகளில் ஒன்றான விக்கிரம சாலமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காறர் என்னும் படைப்பிரிவிடமே நங்கை சானி மேற்கூறிய தானங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பினை ஒப்படைத்திருந்தார். இச்செய்தி மூலம் அந்த பிராமணப்பெண் செல்வ வழத்துடன் , அரசியல் செல்வாக்கும் கொண்டவளாக இருந்தாள் என்பது புலனாகிறது.

தொடரும்.. .. ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏசுவார்கள் எரிப்பார்கள் – உண்மையை எழுது உண்மையாகவே எழுது

## சுகிர்தராஜனின் 10ம் ஆண்டு நினைவேந்தல்

**க**ல்முனையில் நடைபெற்ற மறைந்த ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 10வது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு தினக்குரல் வார இதழின் ஆசிரியர் பாரதி அவர்கள் ஆற்றிய உரை.....



கிழக்கிலங்கையில் மிகவும் ஆபத்தான ஒரு காலத்தில் துணிச்சலாக ஊடகப்பணியை மேற்கொண்டு, தன்னுடைய உயிரை அதற்கு விலையாகக் கொடுத்த சுகிர்தராஜனை நினைவு கூர்ந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்காக கிழக்கு மாகாண ஊடகவியலாளர் சம்மேளனம், ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழு, யாழ் ஊடக மையம் ஆகியவற்றுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தென்னிலங்கையிலிருந்தும் முக்கியமான சிங்கள ஊடகவியலாளர்கள் சிலர் இந்த நிகழ்வுக்கு வந்திருக்கின்றார்கள். இன, மொழி என்பதற்கு அப்பால் ஊடகவியலாளர்களின் குரல்வளை நெரிக்கப்படும் போது அனைத்துத் தரப்பினருமே ஒன்றாகத் திரள்வார்கள் என்பதன் மற்றொரு வெளிப்பாடுதான் இது. இந்த நிலை இனியும் தொடவேண்டும். இதற்கான பிணைப்பை இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கடந்த காலங்களிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் நெருக்கடிகளை எதிர்கொண்ட போது சிங்கள ஊடகவியலாளர்கள் எமக்காகக் குரல் கொடுத்திருக்கின்றார்கள். இந்த ஆரோக்கியமான நிலை தொடர வேண்டும்.

தமிழ் இலக்கியத்துறையைப் போலவே தமிழ் ஊடகத்துறையிலும், ஆற்றலும், துணிச்சலும் மிக்க படைப்பாளிகள் பலரை கிழக்கிலங்கை உருவாக்கி தமிழுலகுக்கு வழங்கியிருக்கின்றது. அந்த வகையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஊடகவியலாளர் வரிசையில் சுகிர்தராஜன் பெயரைத் தவிர்த்துவிட முடியாது. தராகி என அறியப்படும் த.சிவராம், ஜி.நடேசன் போன்ற பத்திரிகையாளர்களும் கிழக்கிலங்கையிலிருந்து உருவாக்கப்-பட்டவர்கள் தான். நடேசனின் சொந்த இடமாக கிழக்கு மாகாணம் இல்லாத போதிலும் நீண்டகாலமாக அவர் கிழக்கு மாகாணத்திலேயே வாழ்ந்தவர். கிழக்கு மாகாண மக்களுக்காக எழுதியவர். இறுதியில் நடுவீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். சிவராம் கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்த மூன்று பத்திரிகையாளர்களுமே தாம் சார்ந்த சமூகத்துக்காக, அந்த சமூகத்துக்கு நடைபெற்ற கொடுமைகளை அம்பலப்படுத்த வேண்டும் எனச் செயற்பட்டமைக்காக தமது உயிர்களையே பலியாகக் கொடுத்தவர்கள்.

உங்களுக்குத் தெரியும், சிவராம் மற்றும் நடேசனின் படுகொலைகளைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பணியாற்றிய பல ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவர்களுடைய உயிர்களுக்கு கடுமையான அச்சுறுத்தல் இருந்தது. அனுபவமும், ஆற்றலும் வாய்ந்த பல தமிழ் ஊடகவியலாளர்கள் திடீரென வெளியேறியபோது பாரிய வெற்றிடம் ஒன்று கிழக்கிலங்கையில் ஏற்பட்டது. கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகள், அந்த மாகாணத்துக்குள்ள தேவைகள் பெருமளவுக்கு வெளிப்படுத்தப்படாமலிருந்தமைக்கு அல்லது போதிய கவனத்தைப் பெற்றுக்கொள்ளாமைக்கு அதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

வட மாகாணத்தைப் போலவே கிழக்கு மாகாணமும் நில ஆக்கிரமிப்பு, படையினரின் அத்துமீறல்கள், மீள்குடியேற்றத்தில் உள்ள நெருக்கடிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. இருந்தபோதிலும், அவை தொடர்பான செய்திகள் பெருமளவுக்கு வெளிப்படுத்தப் படுவதில்லை. இந்த இடத்தில் கிழக்கிலங்கையிலுள்ள ஊடகவியலாளர்களின் பணி முக்கியமானதாக இருக்க வேண்டும்.

இன்று எம்மால் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்ற முடிகின்றது. அரசாங்கத்தையோ அல்லது அதன் படைகளையோ விமர்சிக்க முடிகின்றது. ஆனால், கடுமையான கட்டுப்பாடுகளும் அடக்குமுறையும் தலைவிரி-த்தாடிய ஒரு காலகட்டத்தில்தான் சுகிர்தராஜன் தன்னுடைய ஊடகத்துறை வாழ்க்கையில் துணிச்சலான ஒரு காரியத்தைச் செய்தார்.

திருகோணமலை கடற்கரையில் 5 மாணவர்கள் மிகவும் பரிதாபகரமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் திருமலையை மட்டுமன்றி முழு இலங்கையையும் அதிர வைத்தது. மாணவர்க-ளிடமிருந்த கைக்குண்டு வெடித்ததால்தான் மாணவர்கள் மரணமடைந்ததாக அரச தரப்பு அப்போது கூறியது. உண்மையை வெளிப்படுத்த வேண்டிய ஆபத்தான பொறுப்பு பத்திரிகையாளர்களுக்குள்ளது. இது ஒரு சமூகம் சார்ந்த பொறுப்பு. ஊடகவியலாளர்களை ஒரு காவல்நாய் அதாவது Watch dog என்று சொல்வார்கள். வெறுமனே செய்திகளை வெளிடுவதை விட, புகைப்பட ஆதாரத்துடன் அதனை வெளியிடுவதே அதன் நம்பகத் தன்மையை அதிகரிக்கும். திருமலை வைத்தியசாலை பிரேத அறைக்குச் சென்ற சுகிர்தராஜன், 5 மாணவர்களும் மிக அருகில் வைத்து தலையில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் புகைப்படங்களை வெளியிட்டார்.


இந்தப் புகைப்படங்கள் உலகத்தை அதிரவைத்து. உண்மையையும் அம்பலப்படுத்தியது. மாணவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்ற அதிர்விலிருந்து மக்கள் மீள்வதற்கு முன்னதாகவே அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. இந்த உண்மைகளை அம்பலப்படுத்திய சுகிர்தராஜனும் கொல்லப்பட்டார். தான் சார்ந்த சமூகத்துக்காக, அந்த சமூகத்துக்கு நடைபெற்ற ஒரு கொடூரத்தை அம்பலப்படுத்தியதற்காக தன்னுடைய உயிரையே அவர் விலையாகக் கொடுத்தார். சமூகப்பொறுப்புடன் செயற்படும் ஊடகவியலாளர்கள் எந்தளவுக்கு ஆபத்தான சூழ்நிலையில் செயற்பட்டார்கள் என்பதற்கு சுகிர்தராஜனின் மரணம் ஒரு சிறந்த உதாரணம். இவ்வாறானவர்கள் நினைவுகூரப்பட வேண்டும். அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள் என்பதில் கேள்விக்கு இடமில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்கும் சர்வதேச அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகள் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று ஆய்வு ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள். இலங்கையில் ஊடக சுதந்திரம், ஊடகவியலாளர்களுடைய பாதுகாப்பு எவ்வாறுள்ளது என்பதையிட்டு அவர்கள் விரிவான ஆய்வை மேற்கொண்டிருந்தார்கள். அதன்போது இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் எம்மையும் சந்தித்தார்கள். எம்மைப்போன்ற பல அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து தகவல்களைப் பெற்றுக்கொண்டார்கள். இதன் இறுதியில் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், உலகில் ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணியில் உள்ளது எனத் தெரி-விக்கப்பட்டிருந்தது. உண்மைதான். அவ்வாறான ஆபத்தான சூழ்நிலைக்குள் இருந்துகொண்டுதான் நாம் ஒரு காலத்தில் பணியாற்றியிருக்-கின்றோம். இதில் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் மட்டுமன்றி சிங்கள ஊடகவியலாளர்-களும் பலியெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆட்சிமாற்றத்துடன் இந்த நிலை பெருமளவுக்கு மாற்றமடைந்துவிட்டது என்பது உண்மைதான். ஆனால், இந்த இடத்தில் நாம் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியவர்-களாகவுள்ளோம். கடந்த காலத்தில் கொல்லப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்கள் கொலை தொடர்பில் ,விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் என்னெலியகொட ஆகிய ஊடகவியலாளர்கள் கொல்லப்-பட்டதன் பின்னணி விசாரணைக்குள்ளாக்-கப்பட்டிருக்கின்றது. இதில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதனை நாம் வரவேற்கின்றோம்.

கொலைகளின் பின்னணியில் செயற்பட்டவர்கள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. நிமலராஜன், சிவராம், நடேசன், சுகிர்தராஜன் உட்பட பல ஊடகவியலாளர்கள் கடந்த காலங்களில் கொல்லப்பட்டிருக்-கின்றார்கள். இந்தக்கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எவருமே சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவி-ல்லை. கடந்த காலங்களில் நம்பகத் தன்மையான விசாரணை ஒன்று நடத்தப்படும் என்பதில் நாம் நம்பிக்கை வைத்திருக்கவுமில்லை.

இப்போது உருவாக்கப்பட்டுள்ள நல்லாட்சியில் இந்தக் கொலைகள் தொடர்பிலான விசாரணைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்திருக்-கின்றோம். இந்தக் கொலைகளுடன்




சம்பந்தப்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையில், முழு அளவிலான சுதந்திரத்தை ஊடகவியலாளர்களால் அனுபவிக்க முடியாது என்பதே எமது கருத்து. அதேவேளையில் அச்சம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிய ஊடகவியலாளர்களை எவ்வாறு திருப்பி அழைப்பது? சுகிர்தராஜன், நடேசனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் எந்த நம்பிக்கையுடன் நாடு திரும்புவார்கள்? அதனால், ஊடக சுதந்திரமும், ஊடகவியலாளர்களுடைய பாதுகாப்பும் உண்மையாகவே உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால், தமிழ் ஊடகவியலாளர்களுடைய படுகொலை-களுடன் சம்பந்தப்பட்டவர்களும் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நிலைப்பாடு.

ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி ஊடக நிறுவனங்களில் பணியாற்றிய பலர் கூட கொல்லப்பட்டிருக்கின்றார்கள். உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. அந்த நேரம் கடமையிலிருந்த பணியாளர்கள் கொல்லப்-பட்டிருக்கின்றார்கள். சன்டே லீடர், மகாராஜா நிறுவனம், சுடரொளி பத்திரிகை அலுவலகம் என்பனவும் தாக்குதலுக்குள்ளாகின. இவற்றின் சூத்திரதாரிகளை ஏன் சட்டத்தின் முன்பாக நிறுத்தவில்லை? இது தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அல்லது இது குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தனியான விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சார்பில் முன்வைக்கவிருக்கின்றோம்.

www.thaayman.com

ஊடகவியலாளர்களுக்கு சமூகப் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுவது அதனால்தான். ஜனநாயகச் செயற்பாட்டிலும், அபிவிருத்திப் பணியிலும் ஊடகத்துறையின் பங்கு பிரதானமானது.

கடந்த மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த போரும், அதன்பின்னர் தொடர்ந்த கெடுபிடிகளும் சமூகத்தில் மட்டுமன்றி ஊடகத்துறையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் ஊடகத்துறையால் சுயாதீனமாகச் செயற்பட முடியவில்லை. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி ஊடகத்துறை பெருமளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டதாக, பக்கச் சார்பான செய்திகளைத் தருவதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஊடகவியலாளர்கள் மக்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்த வேண்டும். இதன்மூலம் தம்மைச்சுற்றி என்ன நடைபெறுகின்றது என்பதை பொது மக்களால் சரியாக அறிந்துகொள்ள முடியும்.

தாம் வெளியிடும் தகவலுக்கான நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்கு தேவையான ஆதாரங்களை தேடி எடுத்து வெளியிடுவதும் ஊடகவியலாளர்களின் பணியில் முக்கியமானது. ஊடகவியலாளர்களின் பிரதான சமூகப் பொறுப்பும் பணியும் இதுதான். அதனால்தான் ஒரு சமூகத்தில் ஊடகத்துறையின் பங்கு பிரதானமாக இருக்கின்றது. இவ்வாறான சமூகப்பொறுப்பை நிறைவேற்ற முற்படும் போது எந்தளவுக்கு ஆபத்தை ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்பதற்கு சுகிர்தராஜனின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம்.

யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது யோகர் சுவாமிகள் சொன்ன ஒரு வாசகத்தை இங்கு நினைவுகூருவது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கின்றேன்.

"ஏசுவார்கள் எரிப்பார்கள், உண்மையை எழுது உண்மையாகவே எழுது" என யோகர் சுவாமிகள் அப்போது சொன்னார்கள்.

சமூகப்பொறுப்புடன் செயற்படும் ஒரு பத்திரிகையாளனுக்கு எதிர்ப்புக்கள் உருவாவது இயல்பானதே. அத்தகைய எதிர்ப்புக்களே பத்திரிகையாளன் சரியான திசையில் பயணிக்கிறான் என்பதை உறுதிப்படுத்துவதாகவும். ஊடகத்தின் செயல்பாடுகள் சமூகத்தில் பெரும் மாற்றங்களை உண்டாக்கும். அதனை உணர்ந்து ஊடகவியலாளர்கள் செயல்பட்டாலே சமூகம் சரியான பாதையில் பயணிக்கும்.

பெரும்பாலான ஊடகங்கள் சமூகத்தின் அடித்தட்டு மக்களின் பிரச்சனைகளை பிரதிப்பலிப்பதில்லை என்றும், பெரும் பகுதி விளம்பரங்களை அரசிடம் இருந்தும், வணிக நிறுவனங்களிடம் இருந்தும் பெறுவதால் அவர்கள் செய்யும் தவறுகளை பற்றி பெருமளவில் பத்திரிக்கைகள் பேசுவதில்லை எனவும் ஊடகங்கள் மீது ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இந்தக் குற்றச்சாட்டை ஒரேயடியாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது, மறுதலித்துவிடவும் முடியாது. அச்சுறுத்தல்களிலிருந்து ஊடகவியலாளர்கள் விடுபட்டு சுயாதீன-மாகச் செயற்படும் போதுதான் ஒரு உயிர்த்துடிப்பு மிக்க ஜனநாயகத்தை நாம் ஏற்படுத்த முடியும் என கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 89

# அன்பை சம்பாதித்தல்

(வி.என்.சந்திரகாந்தி)



சம்பாதித்தல் என்பது எமது முயற்சியால் நாம் பெற முயலும் பணம் பொருள் அல்லது உணர்வுகளுக்கான எத்தனமாகும். இவ்உலகில் எமக்கு பல தேவைகள் இருக்கின்றன. பணம், பொருள், ஆடை அணிகலன்கள் என அவற்றை பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம் அவற்றை நாம் எமது இடைவிடாத முயற்சியால் சம்பாதித்துக் கொள்ள முடியும். ஆனால் அன்பு பாசம், காதல், பக்தி என்கின்ற மன உணர்வுகளை நாம் சம்பாதிக்க வேண்டுமாயின் மற்றவர்களுடனான நல்லுறவை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். எம்மை பிறர் பெரும்தன்மையுடையவராக கணிக்க வேண்டுமாயின் நாம் அன்பு முன்னிட்ட மன உணர்வுகளை மற்றவர் மீது செலுத்த தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த மானிட பிறவியை நாம் எடுத்ததன் பலனும் அதுவேயாகும்!

இந்த பிரபஞ்சத்தில் உள்ள அண்டசராசரங்களும் ஒரு சுற்றுபாதையிலேயே பயணித்துக்கொண்டிருக்கின்றன. அதே போன்றதே அன்பும். அது கூட சுழல்வற்கென்றே செல்வது. நாம் செலுத்தும் அன்பு பிறரது மனதை தொடுவதுடன் நின்றுவிடுவதில்லை. அவர்களது மனதில் ஒரு பதிவை உண்டு பண்ணிவிட்டு தனது சுற்றுப்பாதையில் எம்மை வசீகரிக்க வருகின்றது. இதுவே நாம் சம்பாதிக்கும் பணம் பொருள்களுக்கும் அன்பு பாசத்திற்குமிடையேயான வித்தியாசமாகும். பணமோ பொருளோ எம்முடன் வந்தால் நாம் அதனை இறுக பற்றிக்கொள்வோம். வேறு யாருக்காவது ஈந்தால் அவர்களும் அவ்வண்ணமே.! சில சமயங்களில் முயற்சி எடுத்தாலும் திரும்ப பெறமுடியாது.

அன்பு என்கின்ற மகாசக்தியே எம்மையும் எமது உறவுகளையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. இறைவன் அன்பு வடிவானவன். நாமும் அவனது அம்சமே. அன்பு இல்லாமல் நாம் இல்லை. எமது உறவுகள் எம்மை பிரிந்து இருந்தாலும், எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அன்பானது எம்மை அவர்களுடன் பிணைத்து வைத்திருக்கின்றது. நாம் மற்றவர்கள் மீது அன்பு செலுத்தும்போது அது அன்பு செலுத்தப்படுவதை மட்டும் உணர்த்துவதில்லை. அது எமக்கும் அமைதியையும் உள்ளார்ந்த மகிழ்ச்சியையும் உண்டுபண்ணுகின்றது. பிறர் மீது அன்பு செலுத்தும்போது அது அவர்களுடனான எமது உறவை பலப்படுத்துவதுடன் அவர்களது ஒத்தாசையையும் பெற்றுத்தருகின்றது.

அன்பின் வலிமை அதிகம் வெளிப்படுவது. தாய் பிள்ளையிடம் என்றுதான் கூறவேண்டும். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் என்று கூறுவார்கள் தாய் பிள்ளைக்கிடையேயான அன்பு சாதாரணமானதல்ல. தனது பிள்ளைக்காக ஒரு தாய் உயிரையும் கொடுக்க தயங்க மாட்டாள் அது ஒரு பாசப்பிணைப்பாகும் ஒரு குழந்தை ஒரு தாய் மீது செலுத்துவதும் அந்த பாச உணர்வே. அன்புக்கும் பாசத்திற்கும் ஏங்காத எந்த ஜீவனும் உலகில் இல்லை.

அடுத்து அன்பின் உயர்ந்த உள்ளுணர்வுதான் பக்தியாகும். அன்பைக்காட்டிலும் புத்திசாலித்தனம் எதுவும் இல்லை என்று கூறுவார்கள். அது இறைவனுடனான பத்திமார்க்கத்தில் நன்கு புலப்படுவதாகும். சம்மந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் ஆகியோர் பக்தியில் உருகி உருகி எமக்கு தேவார திருவாசகங்களை தந்திருக்கின்றார்கள். அவர்கள் பெற்ற இன்பத்தை நாமும் பெறவேண்டும் என்ற நல்லநோக்கில் அவர்கள் அவ்வாறு அருளியுள்ளார்கள். மாணிக்கவாசகரின் திருவாசகம் எம்மை பக்தி மார்க்கத்தில் செலுத்தி இறைவனின் பாதாரவிந்தங்களுக்கே இட்டுச்செல்லவல்லது. "தோடுடைய செவியன் விடையேறியோர்" என்ற சம்மந்தரின் தேவாரத்தை பக்தி பூண்டு உச்சரிக்காதவர் யார்? எமது முன்னையோர் எமக்கு காட்டிய பக்தி என்னும் நல்லறத்தை எண்ணிப் பாருங்கள்...

அன்பின் பரிணாமங்களை எண்ணிப் பார்க்கையில் மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. தூய்மையான மனித காதல் கூட பக்திக்கு இணையானதேயாகும். ஆண் பெண் காதலுக்கு அப்படி ஒரு புனித தன்மை இருக்கின்றது. ஒரு பெண் மீது ஆணும், ஒரு ஆண் மீது பெண்ணும் பாராட்டும் உண்மையான காதலை எந்த ஒரு சக்தியாலும் பிரிக்க முடியாது. பொய்யா மொழி புலவர் தனது நூலில் அறத்துபால் பொருட்பால் இரண்டினையும் தொடர்ந்து காமத்துபால் பற்றி கூறுகின்றார். காதல் பற்றி அவர்கூறுகையில் உடம்போடு உயிருக்குள்ள நட்பு போன்றதே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான காதலென்று விதந்துரைக்கின்றார். காதல் என்பது தராதரத்தையோ, அழகையோ, நிறத்தையோ பார்த்து மலர்வதல்ல. அது ஆண் பெண் இருபாலரது மன ஒன்றுபடலில் முகிழ்ப்பது. உண்மையான காதல் திருமணத்தில் உறுதியாகி சாவிறுதிவரை நீடிக்கும். கணவனுக்கும் மனைவிக்குமிடையேயான மன ஐக்கியத்தை சாதி சமய வேறுபாடுகளாலோ வேறு எந்த காரணியாலோ தகர்க்க முடியாது.

அன்பிற்கு பெருமை சேர்க்கும் மற்றொரு உறவுமுறைதான் நட்பு ஆகும். கிறிஷ்ணரதும் குசேலரதும் நட்பின் பெருமையை உலகமே அறியும். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே - இடுக்கண் களைவதாம் நட்பு" என்று வள்ளுவரும் கூறினார். எமக்கு ஒரு ஆபத்து நேர்ந்தால் எமது உறவினரை காட்டிலும் வேகமாக வந்து உதவக்கூடியவர்கள் எமது நண்பர்கள்தான். நாம் செய்யும் தவறுகளை பொறுப்புடன் எமக்கு சுட்டிக்காட்டுபவரும் அவரே. நட்பு காரணமாக பலர் சமூகத்தில் உயர்நிலைக்கு வந்துள்ளார்கள். நாம் ஒரு புதிய ஊருக்கோ வெளிநாட்டுக்கோ செல்வதானால் எமக்கு அங்கு உதவிகள் புரிந்து வழிகாட்ட கூடியவர் நண்பர்கள் தான். பல பராயங்களில் நாம் வெவ்வேறு நண்பர்களை சந்தித்துப்பழகி பின்னர் பிரிந்து சென்றிருப்போம். ஆனாலும் அந்த நட்பு எம்மை எந்த பராயத்திலும் தேடிவரும் இயல்பு கொண்டது. நாம் அறிந்துகொள்ளாதபடி எமக்கெதிராக சதி செய்பவரை கண்டறிந்து எம்மை காப்பாற்ற கூடியவர்கள் நண்பர்களே. நற்பண்புள்ள நண்பர்களை தேடி பெறவேண்டும். நல்ல நூல்களை தேடிப்படிப்பதால் புது புது கருத்துக்களை அறிய முடிவதுபோல நல்ல நண்பனின் அன்பு அவனுடன் பழகும் தோறும் அதிகரிக்கும். உண்மையான நட்பு அன்பின் அடித்தளத்தில் உருவாகின்றது. பாசம், காதல், நட்பு ஆகியவை அன்பை அடிப்படையாக கொண்டவையே. பிறர் மீது அன்பு செலுத்துவதால் அவர்கள் ஆறுதல் பெறுகின்றார்கள். அதே சமயம் நாமும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் கொள்கின்றோம். நாம் செலுத்தும் அன்பால் நாம் இலாபம் பெறுவதை காட்டிலும் அது எமக்கு திரும்பும்போது நாம் அதிக இலாபம் பெறுகின்றோம். அதுவே அன்பின் சிறப்பாகும்.

எந்த நாகரீகம் அடைந்த சமுதாயத்தை எடுத்துப்பார்த்தாலும் அங்கு அன்பு, பாசம், பக்தி ஆகிய உள்ளுணர்வுகள் சிறப்புற்று இருப்பதை அவதானிக்க முடியும். ஒருவர் மற்றவர்மேல் செலுத்தும் அன்பு சமூகத்தில் ஐக்கியத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணுகின்றது. அதே போன்று நாட்டுக்கு நல்ல பாதுகாப்பரணாகவும் அமைகின்றது.



நாம் பிறர் மீது அன்பு பூண்டு அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் பெற உதவி செய்தால் எமக்கு வேண்டிய அனைத்துமே வேறு முயற்சி இன்றி எமக்கு கிட்டும் அது தெய்வ நியதியேயாகும்.

அதே போன்று வாழ்கையில் மேன்மையுறுவதற்கு அடிப்படையாக அமையக்கூடியது பிறர் மேல் நாம் செலுத்தும் அன்பும் மரியாதையும் தான். பெரியோர்களின் ஆசி எமக்கு கிட்டவேண்டுமாயின் நாம் அன்பு பூண்டு அனைவருக்கும் உதவியும் தொண்டும் செய்ய வேண்டும்.

நாம் அன்பு பாராட்டும் சிலர் மன அழுத்தத்தால் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். தமது வாழ்கையில் உண்டான பாதிப்புக்களால் மற்றவர்களுடன் முகம் கொடுத்து இயல்பாக பேசிப்பழக முடியாத நிலையில் உள்ளார்கள். நாம் அவர்களுடன் அன்பாக நடக்கவேண்டும். அன்பால் எதனைத்தான் சாதிக்க முடியாது.

அன்பு பிறருக்கு மட்டுமல்ல எமது ஆரோக்கியத்திற்கும் உறுதுணையாக இருக்கின்றது. இளமையை பேண உதவுகின்றது. நாம் அன்பு செலுத்துவதற்கு எவரையும் தேடி அலைய வேண்டியதில்லை. உலகில் ஏழைகள், மாற்றுத்திறனுடையோர், அனாதைகள் என்று ஏராளம் பேருக்கு பல தேவைகள் உண்டு. அவர்கள் பிறரது கையையே எதிபார்த்திருக்கின்றார்கள். அவர்களுடன் எமக்கு எந்த உறவுமுறையும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடன் அன்பால் இணைந்து கொண்டு உதவிகள் செய்யலாம். அது எமது வாழ்க்கையில் நிறைவையும் மகிழ்ச்சியையும் அள்ளித்தரும். மூன்று நேர உணவை நாம் தினமும் வயிறார உண்கின்றோம். ஒரு வேளை உணவிற்கே நாதியற்று பலர் பட்டினியால் வாடுகின்றார்கள். எமது ஒரு நேர உணவை ஒரு ஏழைக்கு வழங்குவதால் நாம் ஒன்றும் வாடிவிடப் போவதில்லை. எம்மால் அன்பு செலுத்தப்படும் போது அவர்களும் மனதைரியம் பெறுகின்றார்கள் என்பதை மனதில் கொள்வோம்.

எம்மிடம் நிறைய செல்வம் இருக்கலாம் ஆனால் நாம் அதை அனுபவிக்க பலன் இருக்க வேண்டும். அந்த பலன் எமக்கு கிட்டவேண்டுமாயின் நாம் ஏழைகளுக்கு உதவி செய்வதொன்றே வழி!

# பாசமும் அளவுடன் இருத்தல் நன்று

(தன்யா)




திருகோணமலை பாலையூற்றில் உள்ள ஓர் பிரதேசத்தில் இடம்பெற்ற ஓர் சம்பவம்........

ஷங்கர் ஒரு கிறுக்கன். அவனுக்கு திருமணமாகாதா!! என ஏங்கிக் கொண்டிருந்த ஷங்கரின் பெற்றோருக்கு பழம் நழுவி பாலில் விழுந்ததைப் போல் இருந்தது. ஏனெனில் அவள் ஒரு தேவதை போன்றவள். மிகவும் நல்லவளும் கூட.

சஞ்சயனால் நடப்பவற்றை உணர்ந்து கொள்ளக் கூட முடியவில்லை. ஓரிரு நாள் பிதற்றிக் கொண்டு திரிந்த அவன் மறுநாள்...

மறுநாளிலிருந்து அவளை அவதானிக்கத் தொடங்கியிருந்தான்.

அவள் அவளாக இல்லை. வேறு யாரோவாக ஆகியிருந்தாள். அவளிடம் தான் ரசித்த எந்தவொரு குறும்புப் பழக்கமும் இல்லாது போயிருந்தது. எந்நேரமும் மலர்ந்த தாமரையாக மலர்ச்சியாக காணப்படும் அவள் ஏதோ பதினைந்து நாட்கள் காய்ச்சலில் கிடந்தவர்கள் போல தென்பட்டாள். இதில் ஏதோ இருக்கின்றது என்பதை உணர்ந்த அவன் அவளை மீட்பதற்கான வழிகளை தேடினான்.

திடீரென்று ஒருநாள் அவள் நடந்து போன பாதையில் குறுக்காக தனது மோட்டார் வண்டியை நிறுத்தினான். சட்டென அவளை இழுத்து பைக்கில் ஏற்றியவாறு பறந்தான். மெல்ல தனது பக்கவாட்டு கண்ணாடியை திருப்பி அவள் முகம் பார்த்தான். அவளின் மூக்கு சிவந்து கோபம் தலைக்கேறியது. சிறிது நேரத்தில் கண்கொண்டு காண முடியாத பயங்கர உருவாக மாறினாள்.

திடுக்குற்ற அவன்... நிதானம் இழந்தான். வேறு குரலில் பேசத் தொடங்கினாள். "வண்டியை நிறுத்து" என கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பயத்தின் மிகுதியால் வண்டியை இன்னமும் முறுக்கினான். . நிறுத்துடா என்றாள். மீண்டும் ஒரு தடவை கண்ணாடியை பார்க்க அவனிடத்தில் இருந்த அனைத்து பலத்தையும் திரட்டி கண்ணாடியை பார்த்தான். நீண்ட நாக்கு, கூரிய பெரிய பற்களுடன் கரும்புகை ஒன்று தன் கழுத்தை நோக்கி வந்தது.

அதன் பின் முகத்தில் நீர் பட்டதால் திடுக்கிட்டு எழுந்தான். தேடினான் புகையை. தன்னை சுற்றி ஒரு பத்து பேர் நின்றிருந்தனர். சற்று தொலைவில் பெரு மூச்சிரைத்தவாறு தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டிருந்தாள் ஷெரோம்.

நடந்ததை புரிந்து கொண்ட அவன் அவளது தந்தையை அணுகி விடயத்தை கூற முற்பட்டான். ஆனால் அவரோ எங்கே தனது மகளின் திருமணத்தை இவன் குழப்பிவிடுவானோ என அஞ்சி அவனை உதாசீனம் செய்தான்.

அன்று அவன் ஒருவாறு அவளது தாயாரிடம் நடந்தவற்றை தெளிவுபடுத்தியிருந்தான்.

வீட்டில் தந்தை மகளை அழைத்து, ஷெரோம்.. தங்கள் இருவரது திருமணத்தையும் நடாத்துவதற்கு வணக்கத்திற்குரிய தந்தையிடம் சென்று திகதி கேட்டு வரலாம் என்னுடன் வா என அழைத்தார். அன்று தான் அவளது விஸ்வரூபம் தந்தைக்கு விளங்கியது. மிக அமைதியான அவள் திடீரென பாய்ந்து வந்து அரை ஒன்று விட்டாள். ஐந்து விரல்களும் அவர் கன்னத்தை பதம் பார்த்தது.

தன் ஆடைகளை தானே கிழித்துக் கொண்டாள். தன் கதையை கூறி தனக்கும் ஷங்கருக்கும் திருமணம் செய்து வைக்குமாறும், அவனுடன் தான் ஒருநாளேனும் வாழவேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்தாள்.

நீ உயிருடன் இருந்தால் எனக்குத் தான் கஷ்டம் என கூறியவாறு தந்தையை நோக்கி பாய்ந்தாள். அதற்கிடையில் தாய் வீட்டினுள் வர... ஓடிச்சென்று தாயை கட்டி அணைத்தவாறு தந்தை தன்னை பலாத்காரம் செய்ய வந்ததாக புகார் உரைத்தாள். இறுகக் கட்டிக் கொண்டாள். தாயாருக்கு மூச்சுத் திணறியது அவளது கூரிய பற்கள் தாயாரின் கழுத்தை கடிக்கத் தெடங்கியிருந்தது.

சஞ்சயன் சரியான நேரத்தில் வீட்டிற்கு வணக்கத்திற்குரிய தந்தையை அழைத்து வந்தான். பின் தாயையும், தந்தையையும் வெளியே அழைத்துச் சென்றான். அவ்வுடலுக்குள் புகுந்த அந்த ஆவி வெளி செல்ல மறுத்தது. அவ்வாவி தன்னை நோகப்படுத்துவதாக எண்ணி ஷெரோமின் உடலை பலத்த காயங்களுக்குள்ளாக்கி பின் அவ்வுடல் துறந்து சென்றது.

அவளை தன் மார்போடு அணைத்துக் கொண்டான் சஞ்சயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## "கெத்து"

நடிகர்: உதயநிதி
நடிகை: எமி ஜாக்சன்
இசை: ஹாரிஸ் ஜெயராஜ்
ஒளிப்பதிவு: சுகுமார்
இயக்குனர்: திருகுமரன்

விக்ராந்த் ஒரு ஸ்னைப்பர் (Sniper). பணத்திற்காக ஒரு விஞ்ஞானியை கொலை செய்யும் பணி இவருக்கு வருகிறது. இதற்காக இவர் குமிளி பகுதிக்கு செல்கிறார்.

குமிளியில் நூலகம் வைத்திருக்கும் உதயநிதிக்கும், எமி ஜாக்சனுக்கும் பழக்கம் ஏற்படுகிறது. தனியார் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக வேண்டும் என்று நோக்கத்தில் இருக்கும் எமி ஜாக்சனுக்கு, உதயநிதி உதவி செய்கிறார். இதனால், உதயநிதி மீது எமி ஜாக்சனுக்கு காதல் ஏற்படுகிறது. ஆனால், உதயநிதியோ எமி ஜாக்சன் மீது ஈர்ப்பு இல்லாமல் இருந்து வருகிறார்.

உதயநிதியின் அப்பாவான சத்யராஜ் ஒரு பி.டி. மாஸ்டர். இவர் வேலை பார்க்கும் பள்ளிக்கு அருகே ஒரு டாஸ்மாக் உள்ளது. இதனால் மாணவர்களுக்கு சங்கடங்கள் ஏற்படுகிறது. இதனை கண்டித்து டாஸ்மாக் நடத்திவரும் மைம் கோபி மீது வழக்கு தொடர்கிறார்.

இதனால் கோபமடையும் மைம் கோபி சத்யராஜுக்கு தொந்தரவு செய்கிறார். ஒரு கட்டத்தில் .மூட சொன்ன டாஸ்மாக்கில் வைத்து சத்யராஜை வில்லன் ஆட்கள் அடிக்க வரும்போது சாதுவாக இருந்த

உதயநிதி ஆக்ஷன் அவதாரம் எடுத்து, சத்யராஜ் கண்முன்னே அவர்களை அடித்து நொறுக்கிறார். மறுநாள் மைம் கோபி குமளியில்



ஒரு நீர்விழ்ச்சியில் மர்மமான முறையில் இறந்து கிடக்கிறார். அவர் கையில் சத்யராஜின் மோதிரம் கிடைக்க போலீஸ் அவரை கைது செய்கிறது. இறுதியில், சத்யராஜ் குற்றமற்றவர் என்று உதயநிதி நிரூபித்தாரா? மைம் கோபியை கொலை செய்தது யார்? விக்ராந்த் விஞ்ஞானியை கொலை செய்தாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

தனக்கு மாற்றம் தேவை என்பதை நன்கு உணர்ந்து உதயநிதி சோலோவாக ஆக்ஷன் காட்சிகளில் பட்டையை கிளப்பியுள்ளார். குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சிகளில் சிரமப்பட்டு சண்டை போடுவது அவர் முகத்திலே தெரிகிறது. புக் திருடியாக வரும் எமி ஜாக்சன், உதயநிதி மீது காதல் கொள்வது என சிறப்பாக நடித்திருக்கிறார்.

படத்தில் சத்தியராஜ் தன்பங்கை சிறப்பாக செய்திருக்கிறார். கச்சிதமான அப்பா! கனகச்சிதமான விளையாட்டு மாஸ்டர் என்று சத்தியராஜை டைரக்டர் சரியாக பயன்படுத்தி இருக்கிறார். தன் பார்வையாலே மிரட்டுகிறார். உண்மையான கெத்தே இவர் தான், படத்திற்கு இவர் தான் மிக பெரிய பலம்.

சுகுமாரின் ஒளிப்பதிவு படத்திற்கு பக்க பலமாக அமைந்திருக்கிறது. இவரின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்திருக்கிறது. ஹாரிஸ் ஜெயராஜின் இசையில் பாடல்கள் சூப்பர் ஹிட்.

வித்தியாசமான கதைக்களம் கொண்டு இயக்கியிருக்கிறார் இயக்குனர் திருகுமரன். திரைக்கதையில் கூடுதல் விறுவிறுப்பை ஏற்படுத்தியிருந்தால் கூடுதலாக ரசித்திருக்கலாம்.

மொத்தத்தில் கெத்து மாஸ்.

## திரை விமர்சனம் கதகளி



நடிகர்: விஷால்
நடிகை: கேத்ரீன் தெரசா
இசை: ஹிப் ஹாப் தமிழா ஆதி
ஒளிப்பதிவு: பாலசுப்ரமணியம்
இயக்கம்: பாண்டிராஜ்

## முரகதாஸ் சினிமா பயணத்தில் இதுதான் முதன் முறையா?

முரகதாஸ் தெலுங்கு சினிமாவின் பிரின்ஸ் மகேஷ் பாபுவை வைத்து ஒரு புதிய படம் இயக்க இருப்பது நாம் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.இப்படத்தின் படப்பிடிப்புகள் ஏப்ரல் 14ம் தேதியில் இருந்து தொடங்க இருக்கிறது, அதோடு படத்தை தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் எடுக்கின்றனர். இந்நிலையில் இப்படம் ரூ. 85 கோடி செலவில் எடுக்க இருப்பதாக கூறப்படுகிறது.ஏ.ஆர். முருகதாஸ் படங்களில் இவ்வளவு பட்ஜெட்டோடு எடுக்கும் முதல் படம் இதுதானாம். தீபாவளி அன்று வெளியிட முடிவு செய்திருக்கும் இப்படத்திற்கு சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்ய இருக்கிறார்.

## தனுஷின் கொடி எப்போது ?

துரை செந்தில் இயக்கத்தில் தனுஷ் இரட்டை வேடத்தில் நடித்துவரும் படம் கொடி. Escape Artists Motion Pictures P Madan தயாரிக்கும் இப்படத்திற்கான படப்பிடிப்பு பொள்ளாச்சி, பழனி, கோவை போன்ற இடங்களில் படமாக்கப்பட்டு வருகிறது.இப்படத்திற்கான படப்பிடிப்புகளை பிப்ரவரி மாதத்தில் முடித்துவிட்டு, படத்தை ரம்சான் விருந்தாக வெளியிட முடிவு செய்துள்ளனர் படக்குழுவினர்.தனுஷின் வெற்றி படங்களான VIP, மாரி போன்ற படங்கள் ரம்சானில் வெளியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. திரிஷா, ஷாம்லி நாயகியாக நடிக்கும் இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

## அம்மாடியோ தலைமுடி கலர் செய்ய இத்தனை லட்சமா?

அபிஷேக் கபூர் இயக்கத்தில் ஆதித்யா ராய் கபூர், கத்ரீனா கைப் ஜோடியாக நடித்துள்ள படம் ஃபித்தூர். யுடிவி மோஷன் பிக்சர்ஸ் படத்தை தயாரித்த இப்படம் அடுத்த மாதம் வெளியாக இருக்கிறது. இப்படத்தில் கத்ரீனாவின் தலைமுடி சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டுமாம், இதனால் அவர் மும்பையில் தனது முடியை சிவப்பு நிறமாக்கும் நிபுணர்களை தேடியுள்ளார்.மும்பையில் தனக்கு பிடித்த நிபுணர்கள் இல்லை என்பதால் லண்டன் சென்று தனது முடியை கலர் செய்துள்ளார்.படம் முழுக்க சிவப்பு நிறமாக இருக்க வேண்டும் என்பதால் அவர் எடுத்த முயற்சியில், தலைமுடிக்கு மட்டும் ரூபா. 55 லட்சம் செலவு செய்துள்ளார்.அம்மாடியோ ஒரு தலைமுடிக்கா???

## ரஜினி மகளுடன் இணையும் துல்கர் சல்மான்

துல்கர் சல்மான் நடித்த சார்லி படம் பல திரையரங்களில் வெற்றிநடை போட்டு வருகிறது.இவர் அடுத்து பிரதாப் போதன் இயக்கத்தில் ஒரு புதுப்படம் நடிக்க இருக்கிறார். அஞ்சலி மேனன் திரைக்கதை அமைத்து வரும் இப்படத்திற்கான படப்பிடிப்புகள் யூலையில் தொடங்க இருக்கிறது. இந்நிலையில் துல்கருக்கு ஜோடியாக ரஜினியின் கபாலி படத்தில் அவருக்கு மகளாக நடித்துவரும் தன்ஷிகா இப்படத்தில் நாயகியாக நடிக்க கமிட்டாகியுள்ளார்.

## அட்லிக்கு ஷாக் கொடுத்த வடிவேலு

நகைச்சுவை சூறாவளி வைகைப்புயல் வடிவேலு சில வருடங்கள் படங்களில் நடிக்காமல் இருந்து கடைசியில் ஹீரோவாக நடித்து வெளிவந்த எலி மற்றும் தெனாலிராமன் தோல்வியடைந்தது அனைவரும் அறிந்ததே.இந்நிலையில் மீண்டும் காமெடியனாகவே நடிக்கப்போகிறேன் என்ற செய்தி வந்தவுடன் முதலில் போய் நின்றது தெறி பட இயக்குனர் அட்லி.தெறி படத்தின் ஆரம்பகட்டத்தில் விஜய்க்கு டிரைவராக நடிக்கும் வேடம் ஒன்று இருந்ததாம், இதற்கு அட்லி வடிவேலுவை அணுகிய போது எனக்கு ரூபா 4 கோடி சம்பளம் கொடுங்கள் என்று அட்லியை அதிரவைத்துள்ளார். உடனே நான் தயாரிப்பாளரிடம் பேசி விட்டு சொல்கிறேன் என்று அங்கிருந்து எஸ்கேப் ஆனாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE


## இரட்டை லென்ஸ் கமெரா வசதியுடன் iPhone 7 Plus

iPhone 7 Plus இரட்டை லென்ஸ் கமெரா வசதியுடன் வெளியாகவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




அப்பிள் ஐபோன் 7(Apple iPhone 7) மற்றும் ஐபோன் 7 ப்ளஸ்(iPhone 7 Plus) ஆகிய இரண்டு ஐபோன்களும் செப்டம்பர் மாதம் சந்தைக்கு வரவிருக்கின்றன என்ற தகவலையடுத்து, மேலும் இதர தொழில்நுட்ப தகவல்களும் ஐபோன் தொடர்பாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில், ஐபோன் 7 ஆனது, சிங்கிள் லென்ஸ் கமரொ வசதியுடனும், 7 ப்ளஸ் இரட்டை லென்ஸ் கமெராவுடன் வெளியாவிருக்கின்றது. மேலும், iPhone 7 Plus KO HD கொண்ட 1080p Display வசதி கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னர் அப்பிள் நிறுவனத்தின் iPhone 6C அல்லது iPhone 5se 4 இன்ச் டிஸ்பிளே வசதியுடன் மார்ச் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## L'Oreal UV patch and Mc10 BioStamp



Mc10 நிறுவனம் மற்றும் அழகுசாதன பொருட்களை தயார் செய்யும் முன்னணி நிறுவனமான லோரியல் இணைந்து தயாரித்துள்ளமை யூவி பேட்ச் என்ற இந்த கருவி நமது உடல் நலத்தை பேணுவதற்கு உதவியாக உள்ளது.

இதய வடிவில் உள்ள இதை நமது உடலில் எங்கு வேண்டுமானாலும் ஒட்டி கொள்ளலாம். நமது ஸ்மார்ட் போனை இதனுடன் இணைத்து நமது உடலின் சூரிய வெப்பத்தை தெரிந்து கொள்ளலாம்.

OTHER

## உங்கள் தேடுதலை எளிமையாக்கும் கூகுள் INBOX ஆப்



கூகுள் நிறுவனம் பயனாளர்களின் நன்மைக்காக தனது ஜிமெயில் INBOX ஆப்பில் தேடுதலை எளிமையாக்கியுள்ளது. நமது இமெயில் கணக்கில் ஆயிரக்கணக்கான இமெயில்களை டெலிட் செய்யாமலேயே நாம் இருந்துவிடுவோம். திடீரென ஒரு முக்கியமான இமெயிலை தேடும்போது தவித்துபோவோம். இதற்காகவே கூகுள் நிறுவனம் இன்பாக்ஸ் ஆப்பை தயாரித்தது. இதன் மூலம் முக்கிய மெயில்களை நாம் எளிதாக தேர்ந்தெடுக்க முடிந்தது. மேலும் snooze செய்து தேவையான நேரத்தில் மெயில்களை வாசிக்கும் வசதியும் ஏற்படுத்தி கொடுத்தது.

இந்நிலையில் பயனாளர்களுக்கு மேலும் வசதிகயை ஏற்படுத்தி தரும் விதத்தில் கூகுள் நிறுவனம் இன்பாக்ஸ் ஆப்பில் மாற்றம் செய்துள்ளது அதன்படி நீங்கள் ஏதாவது ஒரு முக்கிய தகவலை தேட முயன்றால் அது தொடர்பான தகவல்கள் என பல தகவலை தராமல் நாம் தேடிய தகவலையே அளிக்கும்

எடுத்துக்காட்டாக நீங்கள் உணவகம்(HOTEL) என்று டைப் செய்தால் உங்கள் மெயிலில் உணவகம் தொடர்பாக உள்ள தகவல் முன்னால் வந்து நிற்கும். இதனால் குப்பைபோல் உள்ள இன்பாக்ஸில் நீங்கள் குறிப்பிட்ட மெயிலை தேட தேவையில்லை. இதனால் உங்கள் நேரம் மற்றும் உழைப்பு ஆகியவை மிச்சப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## Ili wearable Translator

Ili நிறுவனம் தயாரித்துள்ள இந்த கருவி வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.


இந்த wearable TranslatorI உங்கள் கழுத்தில் ஒரு சங்கிலியை போல் அணிந்து கொண்டால் போதும். இந்த கருவியில் உள்ள பட்டனை அழுத்தியவாறு உங்கள் மொழியில் நீங்கள் பேசினால் மட்டும் போதும். சில வினாடிகளில் உங்களுக்கு தேவையான மொழியில் உங்களில் வார்த்தைகள் சத்தமாக ஒலிக்கும். இதன் மூலம் மொழி தெரியாமல் தவிக்கும் சூழலை நீங்கள் தவிர்க்கலாம். தற்போது ஆங்கிலம், ஜாப்பனிஸ், சைனீஸ் ஆகிய மொழிகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. விரைவில் மேலும் பல மொழிகளை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.




## Sony Bravia 4K HDR Ultra HD TV

Sony Bravia 4K HDR Ultra HD TV தொலைக்காட்சிகள் இல்லாமல் CES கண்காட்சி இல்லை என்பதற்கு ஏற்ப மிகப்பெரியது, மிக மெல்லியது, 4k திறன் வாய்ந்தது என ஏராளமான தொலைக்காட்சிகள் இந்தாண்டுக்கான கண்காட்சியில் இடம்பெற்றன.

அவற்றில் அனைவரையும் கவர்ந்தது Sony Bravia 4K HDR Ultra HD TV வகைகள் தான். 4k என்பது 1080p வகையை விட 4 மடங்கு தெளிவானதாகும். மற்ற தொலைக்காட்சிகளை விட சிறந்த Colour மற்றும் Contrast வசதிகள் கொண்ட இந்த தொலைக்காட்சி ஒரு திரையரங்கத்தின் அனுபவத்தை தரக்கூடியது என்பது இதன் சிறப்பம்சம்.



## ஸ்கைப் தரும் அதி உயர் பாதுகாப்பு



இலவச வீடியோ சட்டிங் மற்றும் குரல் வழி அழைப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஸ்கைப் சேவையினை வழங்கும் உலகின் முன்னணி இணைய நிறுவனமான மைக்ரோசொப்ட் ஆனது தனது பயனர்களின் பாதுகாப்பை மேம்படுத்த புதிய முயற்சி ஒன்றினை மேற்கொண்டுள்ளது.

இதன்படி ஸ்கைப் அழைப்புக்களை ஏற்படுத்தும்போது ஐீ முகவரிகளை கண்டுபிடிக்க முடியாதவாறு புதிய சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப் புதிய சேவையானது 2012ம் ஆண்டு இடம்பெற்ற சைபர் தாக்குதலை எச்சரிக்கையாகக் கொண்டு ஹேக்கர்களால் தனது பயனர்களின் தகவல்கள் திருடப்படுவதை தடுப்பதற்காக மைக்ரோசொப்ட் நிறுவனம் இவ்வாறு பாதுகாப்பை வழங்க முன்வந்துள்ளது. எனினும் இவ் வசதி ஊடாக அநாமதேய அழைப்புக்கள் மூலம் தனி நபர்களுக்கான பாதுகாப்பு குறைபாடு ஏற்படாலம் என்பதும் இங்கே சுட்டிக்காட்டதக்கது.

## வியக்கவைக்கும் வசதிகளுடன் அறிமுகமாகும் அப்பிள் IPad Air 3

தனது ஒவ்வொரு அறிமுகம் மூலமும் மக்களை திரும்பி பார்க்கவைக்கும் அப்பிள் நிறுவனம் தனது புதிய iPadல் பல்வேறு வசதிகளை புகுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அப்பிள் நிறுவனத்தின் ஐபோன்களை போன்று ஐபேடும் வாடிக்கையாளர்களை நன்கு கவர்ந்துள்ளது. இதன் காரணமாகவே iPad 1, 2,3,4 மற்றும் iPad Air,2 என ஏராளமான வகைகளை அப்பிள் நிறுவனம் அறிமுகம்படுத்தியது. கடைசியாக கடந்த நவம்பர் மாதம் தனது iPad Pro மொடலை அறிமுகப்படுத்தியது அப்பிள் நிறுவனம். ஆனால் அதன் விற்பனை எதிர்பார்த்த அளவிற்கு இல்லாததால் தற்போது அடுத்த மாடலான iPad Air 3யின் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டுவருவதாக தகவல் வெளியாகியுள்ளது.


மேலும் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அப்பிள் நிறுவனத்தின் செய்தியாளர்கள் நிகழ்வின் போது இதை அறிமுகப்படுத்தவுள்ளது என்றும் கூறப்படுகிறது.





வாடிக்கையாளர்களை கவர இந்த புதிய ஐபேடில் நவீன வசதிகள் புகுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மிகவும் துல்லியான வீடியோக்களை பார்க்க உதவும் 4K வசதியுடன் இந்த மொடல் வெளிவரவுள்ளதாக யூகங்கள் நிலவுகின்றன. இதனுடன் 4GB Ram, LED Flash வசதியுடன் கூடிய பின்புற கமெரா ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மேலும் iPad Air 3 உடன் Iphone 5Se, Apple watch ஆகியவையும் அறிமுகப்படுத்தப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இத்தாலியில் ஆப்பிள் செண்டர்



மொபைல்களின் ஜாம்பவனான ஆப்பிள் இத்தாலியில் Development Centre ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

மொபைல் நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்தாலும், ஆப்பிள் ஐபோன்னுக் கென்றே தனி ரசிகர்கள் பட்டாளம் உள்ளது. இந்நிலையில் இத்தாலியில் Development Centre -யை தொடங்கவுள்ளதாக ஆப்பிள் நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. இதுகுறித்து Tim Cook (CEO) கூறுகையில், ஐரோப்பாவில் மிகச் சிறந்த திறமைகளை கொண்ட டெவலெப்பர்கள் உள்ளனர், அடுத்த தலைமுறைக்கு உதவுவதற்காக இதனை தொடங்கவுள்ளோம்.

ஏற்கனவே App Store மூலம் 1.4 மில்லியன் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஐரோப்பா முழுவதுமே வயது வித்தியாசமின்றி மக்களுக்கு சிறப்பான வாய்ப்புகளை வழங்குகிறது. இத்தாலியில் தொடங்கவுள்ள Development Center மூலம் 75,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என தெரிவித்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தந்தையர் - ஒரே மகன்

சிறுகதை



எதிர்பார்த்திருந்ததுதான் என்றாலும், விடுதலை அவ்வளவு சீக்கிரமாகக் கிடைக்கும் என்று மீனாட்சி நினைக்கவில்லை.

குடல் புண்ணாகி இருக்கிறது, உயிருக்கே ஆபத்து, என்று டாக்டர்கள் எச்சரித்தாலும், குடியை அவன் விடவில்லை, இல்லை, குடி அவனை விடவில்லை. ஏதோ ஒன்று!

எத்தனை தடவை தன் தங்க நகைகளை அடகு வைத்து, கணவனை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பாள்! ஆனாலும், அவனுக்குப் புத்தி வரவேயில்லை.

அதெல்லாம் நான் அவ்வளவு சுலபமா சாக மாட்டேண்டி! நான் செத்தா, நீ ஒடனே இன்னொருத்தனை கல்யாணம் பண்ணிக்குவே! அவன் சொல்லும்போதெல்லாம் அவளுக்கு அழுவதா, சிரிப்பதா என்று புரியாது. இவன் ஒருவனையே சமாளிக்க முடியவில்லை. வீட்டிலிருந்தால் ஓயாத ஏச்சுப் பேச்சு. கொஞ்சம் வலுவிருந்தால், அவளைப் போட்டுத் துவம்சம் செய்வான். ஏதோ, மகன் பூபதிமேலாவது அன்பாக இருக்கிறாரே என்று பொறுத்துப்போனாள்.

அவளுக்கு முப்பது வயதுகூட ஆகவில்லை, கணவன் இறந்தபோது. பிறருக்காக அழுத அழுகையைவிட நிம்மதிதான் பெரிதாக இருந்தது.

பிள்ளையாவது, அப்பாவைப்போல் ஆகாமல் இருக்கவேண்டும். அதற்கு, அவனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும்!

பெண்களின் அழகு சாதனங்களை விற்பனை செய்யும் கடையில் வேலைக்குப் போனவள், கடை முதலாளியையே மணக்க நேரிட்டது அதிர்ஷ்டம்தான்.

நீ ஆயுசு பூராவும் இப்படி எதுக்குத் திண்டாடணும்? நான் ஒன்னை ஏத்துக்கிறேன், நீ சரின்னு சொன்னா!

ஏற்றுக்கொள்கிறேன் என்கிறாரே! சும்மா வைப்பாட்டியாக வைத்திருப்பதை அப்படி நாசூக்காகச் சொல்கிறாரோ? மீனாட்சி குழம்பினாள்.

அவளுடைய அழகும், இளமையும் எந்த வினாடியும் ஆபத்தில் கொண்டு விடலாம் என்று உணர்ந்திருந்தாள், கணவன் இறந்த அந்த ஒரு வருடத்திற்குள்.

எனக்கும், உனக்கும் கொஞ்சங்கூடப் பொருத்தம் இல்லேதான். ஆனா, நான் நாப்பத்தஞ்சு வயசாகியும் பிரம்மச்சாரியாவே இருக்கிறது நல்லதுக்குத்தான்னு இப்போ தோணுது! இல்லாட்டி, ஒன்னை மாதிரி ஒரு மனைவி எனக்குக் கிடைக்குமா?

இவரைப்போய் சந்தேகித்தோமே! சந்திரனுடைய வழுக்கைத் தலை, பருமன், தொந்தி இதெல்லாம் மீனாட்சியைப் பாதிக்கவில்லை. ஒரு முறை வெளிப்பார்வைக்கு கவர்ச்சியாக இருந்தவனை மணந்து, அனுபவித்தது எல்லாம் போதாதா?

பெற்ற அப்பா இருந்திருந்தால்கூட பூபதியை அவ்வளவு கட்டுப்பாடாக வளர்த்து, நன்றாகப் படிக்க வைத்திருப்பாரோ, என்னவோ!

ஆனால், பெருந்தன்மையுடன், சட்ட பூர்வமாக அவனைத் தத்து எடுத்துக்கொண்டவர் என்ன செய்தாலும், பூபதி அவரை ஒரு எதிரியாகவே பாவிப்பதை மீனாட்சி உணராமல் இல்லை. சிறுவனாக இருந்தபோது, கண்டித்து இருக்கிறாள். அவன் என்னவோ மாறவில்லை. இரண்டாவது கல்யாணத்திற்குப்பின் தாய்க்குப் பிறந்த தம்பி தங்கைகளைக் கொஞ்சினான். அவர்களைப் பொறுப்பாகப் பார்த்துக் கொண்டான்.

ஆனால், அவர்களுடைய தந்தையை மட்டும் ஏற்கவேயில்லை.

இன்னிக்கு சாந்தா கடைக்கு வந்திச்சு, பிள்ளையோட! சாதாரணமாக, சாப்பிடும்போது மௌனத்தைக் கடைப்பிடிக்கும் சந்திரன் அன்று அதிசயமாகப் பேசினார்.

முகமும் கண்ணும் பாக்கச் சகிக்கல. இப்படியா ஒருத்தன் பெண்டாட்டியைப் போட்டு அடிப்பான்! இவன் குணம் மொதல்லேயே தெரிஞ்சிருந்தா, கல்யாணமாவது கட்டி வைக்காம இருந்திருக்கலாம்!

அப்பனுக்குப் பிள்ளை தப்பாம பிறந்திருக்கான்! என்று சொன்னால், நன்றாக இருக்காது என்று அடக்கிக்கொண்டார். தான் சட்டபூர்வமான அப்பாவாக இருந்தாலும், என்னதான் அன்பைக் கொட்டி வளர்த்தாலும், நினைவு தெரிந்த நாளாகப் பழகிய அப்பாவின் குணம்தான் அவனுக்குள் ஆழமாகப் பதிந்திருக்கிறது என்று புரிய, வேதனையாக இருந்தது.

நீங்க சாப்பிடுங்க. நான் போய் விசாரிக்கிறேன்! மீனாட்சி அவரைச் சமாதானப்படுத்தினாலும், உள்ளுக்குள் பகீரென்றது.

மருமகளைப் பார்த்த மீனாட்சி திடுக்கிட்டாள். என்ன சாந்தா இது! ஒன்மேல கை வைக்கிற அளவுக்குப் போயிட்டானா, அவன்! வரட்டும், பேசிக்கறேன்! என்று கறுவினாள். ஆனால், மனதுக்குள், இவனாவது, பிறர் சொல்றதைக் கேக்கறதாவது! என்ற நிராசைதான் எழுந்தது.

அதிகப் படிப்பில்லாத என்னை விரும்பிக் கட்டினாரேன்னு அப்போ சந்தோஷப்பட்டேன், அத்தே. இப்போ இல்ல தெரியுது! இந்த மாதிரி, கடவுள் பக்தி, பெரியவங்ககிட்ட மரியாதைன்னு இருக்கிறவதான் நாம்ப என்ன கொடுமை செஞ்சாலும் பொறுத்துப் போவாள்னு கணக்குப் போட்டிருக்காரு!

அவனை நீ ஒண்ணும் தட்டிக் கேக்கறதில்லையா?

சொல்லிப் பாத்தேன், அத்தே. நான் ஒண்ணும் மட்டமான தண்ணி எல்லாம் குடிக்கிறதில்ல. நானும் எங்கப்பா மாதிரி சின்ன வயசிலேயே செத்துடுவேன், நீயும் எங்கம்மா மாதிரி இன்னொரு கல்யாணம் செய்துக்கிட்டு மினுக்கலாம்னு கனா காணாதே, அப்படின்னு கன்னா பின்னான்னு பேசறாரு!

மீனாட்சிக்கு வருத்தமாக இருந்தது. பூபதி அவங்கப்பா மாதிரி ஆயிட்டான். நான் அவருக்காக காலமெல்லாம் அழலியேங்கிற ஆத்திரம்!. எதுக்காக போலியா அழறது? அவரு போனது எனக்கு நிம்மதியாத்தான் இருந்திச்சு! மனம்விட்டுப் பேசினாள். நான் அவர்கிட்ட தினம் தினம் அடிபட்டுச் சாகறதை அவன் எவ்வளவோ பாத்திருக்கான். கத்தியால முகத்தில கீறியிருக்கார். ஒரு தடவை, என் முன்பல்லு ரெண்டையும் பேத்து, அப்புறம் பொய்ப்பல் வெச்சுக்கிட்டேன், நினைத்துப் பார்க்கவும் பிடிக்காததை வாய்விட்டுச் சொல்ல வேண்டி வந்துவிட்டதே என்றிருந்தது.

சற்று யோசித்துவிட்டுச் சொன்னாள். அப்போ எல்லாம் பூபதி பயந்து அழுவான்!

பின்னே ஏன் அத்தே அதே தப்பை அவரும் செய்யறாரு?

யாரு கண்டாங்க! பரம்பரைப் புத்தியோ, என்னவோ! நாளைக்கு ஒன் மகனும் தாத்தா, அப்பா மாதிரித்தான் ஆவான்!

ஐயோ! ஒங்க வாயால அப்படிச் சொல்லாதீங்க, அத்தே!

அவன் ஒழுங்கா வளரணும்னா, அதுக்கு ஒரே வழிதான் இருக்கு. நீ ஒன் பிள்ளையைக் கூட்டிட்டு, ஒங்கம்மா வீட்டுக்குப் போயிடு.

ஏதோ, கேட்கக்கூடாததைக் கேட்டுவிட்டதைப்போல சாந்தா வாயைப் பொத்திக்கொண்டாள்.

உன்னோட அருமை, பிள்ளைப் பாசம் இதெல்லாம் அந்தப் பாவிக்குப் புரிஞ்சா, தானே மாறிடுவான். புரியாட்டிப் போவுது! நீயாவது, அடி, ஒதை வாங்காம, நிம்மதியா இருக்கலாம். போயிடு!. அவனாக திருந்தி உன்னை தேடி வருவான்!

வாசலிலேயே நின்றபடி, என்ன ஆச்சு? என்று அக்கறையாக விசாரித்த கணவரிடம், அவனை விட்டுத் தொலைன்னுட்டு வந்தேன்! என்றாள் மீனாட்சி.

வியப்புடன் புருவத்தை உயர்த்தினார் சந்திரன். பின்னே என்னங்க! பொண்டாட்டியை அன்பா, மரியாதையா நடத்தத் தெரியாதவன் எல்லாம் என்ன ஆம்பளை! என்றபடி, அவரைக் காதலுடன் பார்த்தாள்.

# பால்யம் – சினேகம் – காமம்

சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்



எனக்கு வேர்த்து நடுங்கி, வெட்கம் என்னை தின்றுதீர்க்கும்.

மறுநாள் படத்தின் காதற்காட்சிகளைபற்றி பேசுவாள். எனக்கு வெட்கம் பிடுங்கித்தின்றாலும், அவள் மேலும் மேலும் பேசவேண்டும் என்று நினைப்பேன்.

அவளுக்கு என்னைவிட சிலவிடயங்கள் அதிகமாகவே தெரிந்திருந்திருக்கவேண்டும். அடிக்கடி ஒளிந்து பிடித்துவிளையாடும்போது என்னை இழுத்தோடினாள் வீட்டின் பின்புறம் இருந்து நீரேரிக்கு என் தம்பியும் அவளின் தங்கையும் எம்மை தேடிக்களைத்தனர். நாம் அங்கிருந்தபடியே பேசிக்கொண்டிருப்போம்.

அவளின் கைகள் என்னை பற்றி இழுத்ததும் மந்தரித்துவிட்ட மந்திபோன்று அவள்பின்னே ஓடுவேன். என்ன என்னவோ எல்லாம் பேசினோம். எதுவும் நினைவில் இல்லை. நீரோடையை கடந்து சென்ற ஒரு நாள் முதன் முதலாக கபரகொயா என்னும் ஒரு மிருகத்தைக் கண்டோம். அதைக் கண்டு பயந்த அவளை கை பிடித்து அழைத்துவந்தேன். அன்று பெரும் கதாநாயகனைப்போல் உணர்ந்தேன். அதன்பின் அவள் நீரோடைப்பக்கம் வர மறுத்துவிட்டாள்.

என்னிடம் கொய்யா மரக்கிளையில் செய்யப்பட்ட கட்டப்பொல் இருந்தது. அவளை பிரமிக்கவைப்பதற்காக அதை எடுத்துச் செல்வேன். ஒரு நாள் அவளுக்கு குறிபார்த்து அடிக்க கற்றுதர நேர்ந்தது. அவளின் பின்னால் நின்று அவள் கையைப் பிடித்து இப்படித்தான் இதைப்பாவிக்கவேண்டும் என்று கற்றுக் கொடுக்க வேண்டும். அவள் கையினை பிடித்திருந்த எனது கை உணர்ந்த குளிர்ச்சியும், அவளின் அருகாமையும் வந்த காரியத்தை மறக்கடித்தது. கற்பதில் அவளுக்கும், கற்பிப்பதில் எனக்கும் ஆர்வம் இருந்திருக்க நியாயமில்லை என்றே நினைக்கிறேன்.

ஒரு நாள் ஒளிந்து பிடித்துவிளையாடினோம். என் தம்பியும், அவளின் தங்கையும் காவல் அதிகாரிகள், நாம் இருவரும் கள்வர்கள். அவர்களுக்கு தெரியாத ஒரு இருட்டறைக்குள் ஒளிந்துகொண்டோம். மிகவும் குறுகிய இடம். என்னருகில், மிக மிக அருகில் நின்றிருந்தாள். அவளின் முகமும் எனது முகமும் உராய்வதை தடுக்க பெரும்பாடுபட்டேன். அவளின் முச்சு என்னை திணரடித்தது. கொழும்பில் வளர்ந்த அவளோ அதுபற்றி பிரக்ஞை இன்றி இருந்தாள் போன்றே உணர்ந்தேன். உடல் நடுங்கி வியர்த்தது. மறுபுறம் திரும்பிக்கொண்டேன். அப்போதும் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

இதன்பின் எமக்குள் ஏதோ மாற்றம் நிகழ்ந்தது. அவளே எனது நினைவில் இருந்தாள். எப்போதும் 16ம் வாய்பாட்டை பாடமாக்கு என்று பெரும் வில்லனாய் இருந்த எனது தந்தைகூட நினைவில் இருந்து மறந்துபோனார். அவளே யாதுமாய் இருந்தாள். அவளுக்கும் அப்படியாயே இருந்திருக்க வேண்டும். என்னைக் கண்டதும் மயக்கும் புன்னகையால் மயங்கடித்தாள். அதிகமாய் பேச மறுத்தாள். தனியே இழுத்தோடினாள் அதன் பின்பும் நாம் தனியே உரசிக்கொள்ளும் திருடன், போலீஸ் விளையாட்டு நடந்தது. அந்நேரங்களில் எனது தொண்டை காய்ந்து, நா வறண்டு, என் நடுக்கம் சற்றுக் குறைந்து, அவள் சிவந்தது பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை இந்த நிமிடம்வரை.

அந்த வருடம் அவளைப்பிரிவது மிகக்கடினமாய் இருந்தது. அதே வருடம் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஏறாவூருக்கு மாற்றமாகியது. காலப்போக்கில் அவள் நினைவில் இருந்து மறந்துபோனாள். வேறுசிலர் அவளின் இடத்தை கைப்பற்றிக்கொண்டார்கள்.

ஏறத்தாள 35 ஆண்டுகளின் பின்பு....

2013ம் ஆண்டு கோடைவிடுமுறையின்போது இலங்கை வந்திருந்தேன். ஒரு மாலைநேரம் வீடுவந்தபோது, வீட்டில் விருந்தினர் ஒருவர் இருந்தார். அவரை அடையாளம் தெரிந்தது. பிபிலையில் இருந்த அம்மாவின் மேலதிகாரரின் மனைவி அவர். கடந்துபோயிருந்த 35 வருட காலம் அவரை முதுமையினுள் அழைத்துப்போயிருந்தாலும் அவர் முதுமையின் அழகான கம்பீரத்துடன் இருந்தார்: '

நாம் உரையாடிக்கொண்டிருந்தோம். அவர் எப்போதாவது அவரின் சகோதரியின் மகள் பற்றிக் ஏதேனும் கூறுவார் என்று காத்திருந்தேன். மனம் தவியாய் தவித்தது. இதயம் வேகமாய் அடித்தது. அவளின் அருகாமையையும், வெம்மையையும் உணர்ந்தேன். வாய்விட்டுக்கேட்க வெட்கமாய் இருந்தது. எனவே அவளின் தங்கை பற்றிக் கேட்டேன். அப்போது அவர் அவளின் பெயரைக்கூறி, நேற்று அவளைச் சந்தித்தபோது, இன்று உன்னை சந்திப்பதாகக் கூறினேன், உன்னைப்பற்றி மிகவும் விசாரித்தாள் அத்துடன் அவள் உன்னை மிகவும் அன்பாக விசாரித்ததாகவும் கூறச் சொன்னாள் என்று அவர் கூறியபோது அவர் முகத்தில் பெரும்குறும்பும் சிரிப்பும் கலந்திருந்தது. எனது பேரன்பையும் தெரிவியுங்கள் என்றேன் சிங்களத்தில் தலையைக் குனிந்தவாறே.

அன்று மாலை முழுவதும் அவளும் இன்றுவரை என்னை மறக்கவில்லை என்பது என்னை காற்றில் சுமந்துபோய்க் கொண்டிருந்தது. பால்யத்து நினைவுகள் பேரனந்தமானவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவல்துறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதா??

ஜனநாய நாடொன்றின் மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அந்த நாட்டின் படைபிரிவினர்களுக்கும், காவல் துறையினர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பது நாம் சகலரும் அறிந்த விடயமாகும். ஆனால் எமது நாட்டில் அந்த பொறுப்புக்குரியவர்கள் தத்தமது கடமைகளை சீராக புரிவதில்லை என அண்மைக்கால பல துர்அதிர்ஷ்ர சம்பவங்கள் சான்று பகிர்கின்றன.

யுத்த காலத்தில் குறிப்பாக வடக்கு கிழக்கில் படையினர் நடந்து கொண்ட விதத்தை நாம் இங்கு விரிவாக விபரிக்கத்தேவையில்லை. இன்றைய அரசு மக்களின் பாதுகாப்பு குறித்து பொறுப்பு கூறவேண்டியவர்கள் தொடர்பில் மிக கண்டிப்பாக இருந்தும் கூட பல கவலைக்குரிய சம்பவங்கள் நாட்டினுள் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன.

எம்பிலிபிட்டிய இளைஞன் மரணம் தொடர்பாக காவல்துறையினர் நடந்துகொண்டவிதம் அதன்பின்னர் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுடன் நடந்துகொண்டவிதம் ஆகியன அதிதச்சதிகாரமாக அவர்கள் நடந்து கொள்வதை உறுதிப்படுத்துவதில் மாத்திரமல்ல நாட்டினுள் ஜனநாயகத்தை அங்கே குழி தோண்டி புதைத்து விடுவார்களோ என்ற அச்சம் பரவலாக பாமர மக்கள் மத்தியில் இன்று நிலவி வருகின்றது.

அதுமாத்திரமல்ல எம்பிலிபிட்டிய சம்பவத்தை நாட்டின் நலன் விரும்பும் பல பிரசித்த அமைப்புக்கள் பகிரங்கமாக கண்டித்து வருவதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. "அவரவர் தத்தமது கடமைகளை சரியாக புரிய வேண்டுமே தவிர அரசியல் அழுத்தங்கள், செல்வாக்குகள் என்றுமே எந்த துறை மீதும் செலுத்தப்படலாகாது" என ஜனாதிபதி மிக பகிரங்கமாகவே சகல நிர்வாகிகளுக்கும் பதிப்புரை வழங்கியுள்ளார்.

அரசியல்வாதிகள் நீதித்துறையில் என்றுமே தலையிடக்கூடாதென்றும் கடும் உத்தரவையும் பிறப்பித்துள்ளார். அதனால் பல உயர் பதவி வகித்தவர்கள், வகித்துகொண்டிருப்பவர்கள், முன்னைய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகிய பலருக்கு எதிராக தற்பொழுது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நமது நாட்டின் முக்கிய துறைகளில் நீதித்துறையும் ஒன்று. இதன் நடவடிக்கைகள் சற்று மந்தகதியே. இருப்பினும் ஒரே நாளில் வழக்கை விசாரித்து அதே நாளில் தீர்ப்பு கூறுவது என்பது கடினமான காரியமே.

எம்பிலிபிட்டிய விடயத்தில் காவல்துறையினரின் நடவடிக்கை முற்றுமுழுதாக தவறானதென பலரால் சுட்டிக்காட்டப்பட்டாலும் நீதிமன்ற நடவடிக்கைக்கு பல தரவுகள், தடயங்கள், சாட்சிகள், மேலும் இன்னும் எத்தனையோ பதிவுகள் தேவைப்படுகின்றன. ஆனாலும் அரசாங்கம் அவ்விடயத்தில் மிக அவதானமாகவே இருந்து வருகின்றது.. அவ்வாறே எதிர்கட்சிகளும் அந்த சம்பவத்திற்கு எதிராக நாளுக்கு நாள் குரல் கொடுத்த வண்ணமே இருக்கின்றன. காவல்துறை மகா அதிபர் குறித்த அறிக்கைகளை சட்டமகாதிபரின் ஆலோசனைக்கு அமைவாக குற்ற புலனாய்வுத் துறைக்கு சமர்ப்பித்துள்ளார். அந்த நடவடிக்கை தவறானதென பல அமைப்புக்களால் சுட்டிக்காட்டி வருகின்றன.

"B" அறிக்கை கூட ஒழுங்காக தயாரிக்கப்படவில்லை என காவல் துறைக்கு எதிராக நாளுக்கு நாள் பல குற்றச்சாட்டுக்கள் எம்பிலிபிட்டிய இளைஞன் மரணம் தொடர்பாக குவிந்த வண்ணமே உள்ளன.

மேலும் பலர் "முன்னைய அரசுக்கும் இன்றைய அரசுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை" என கடுமையாக தங்கள் எதிர்ப்பை காட்டிவருகின்றனர். ஆமை வேக நிர்வாக நடவடிக்கைகளினால் நல்லாட்சி அரசாங்கம் இன்று பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. நேர்மையாகவும் நீதியாகவும் நடந்துகொள்ள இன்றைய அரசு முன்நோக்கி காலடி எடுத்து வைத்ததாலும் அது மக்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாகி வருகின்றது.

"அன்றைய அரசு படைப் பிரிவினருக்கு வக்காளத்து வேண்டியது. இன்றைய அரசு காவல்துறைக்கு வக்காளத்து வேண்டுகிறது" எனவும் பரவலான புகார்கள் எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்றைய காவல்துறையினரின் விடயத்தில் அரசு கண்டிப்புடன் நடந்து கொள்வதை இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. அன்றைய படைப்பிரிவினர் தொடர்பாக சர்வதேச விசாரணையில் யாரும் குற்றவாளியாக காணப்பட்டால் நிச்சயம் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி பகிரங்கமாக கூறிவருகிறார்.

நாட்டினுள் அவ்வப்போது இடம் பெற்று வரும் பொது ஆர்ப்பாட்டங்கள், பேரணைகள் போன்றவற்றின் போது காவல்துறையினர் கடும் கஷ்டங்களுக்கு உள்ளாகுவது சகஜம். அவர்களில் பலர் காயங்களுடன் வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டும் உள்ளனர். நிலவரங்கள் கட்டுக்கடங்காத வேளையில் கடுமையாக நடந்து கொள்ளாமல் இருக்கவும் முடியாது. HNDA மாணவி ஒருவர் கடுமையாக தாக்கப்பட்ட விடயத்தில் கூட சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டும் உள்ளனர்.

சற்று தாமதமாகவே சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் சம்பவங்கள் இன்று மூடி மறைக்கப்படுவதில்லை. பிரதி காவல்மாதிபர் ஒருவர் கூட தண்டிக்கப்பட்டுள்ளார். ஆனால் முன்னைய அரசின் காலத்தில் இன்று எடுக்கப்படுகின்ற நடவடிக்ககைகள் கூட எடுக்கப்படாது பல பாரிய தில்லு முல்லுகள் மறைக்கப்பட்டு பல பாரிய குற்றங்களில் இருந்தும் பலர் தப்பித்து இருக்கின்றார்கள்.

இன்றைய அரசு அன்று தப்பித்துக் கொண்டவர்களில் பலரை இன்று நீதிமன்றம் முன் நிறுத்தி வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் முழுக்குடும்பத்தினரையும் விசாரணைக்கு அழைக்க உரிய விசாரணைக்குழுக்கள் பின் நிற்கவில்லை. மேலும் இன்னமும் விசாரணைகள் முடிவடையாததால் தீர்பு என்னவென்று அறிய முடியாதுள்ளது. ஐ.தே.கட்சி பா.உ ஹருணிக்கா கூட கைது செய்யப்பட்டு நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டார்.

மேலும் காவல்துறையினரின் அட்டகாசம் இன்றைய அரசின் காலத்தில், சற்று குறைந்துள்ளதென்றே கூற வேண்டும். அன்றைய அரசின் காலத்தில் காவல் நிலையங்களிலே பல சந்தேக நபர்கள் துன்புறுத்தலின் காரணமாக இறந்துள்ளனர். அவ்வாறான பல சம்பவங்கள் இன்று கூட விசாரணைக்கு வரவே இல்லை.

நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை புரிய வேண்டிய நம்நாட்டு காவல்துறை இன்று முழுநாட்டு மக்களும் விமர்சிக்கும் அளவில் நடந்துகொள்வது கவலையானதே. அதுமட்டுமல்ல இன்றைய நல்லாட்சி அரசுக்கும் அதன் நிர்வாகத்திற்கும் சேறு பூசும் அளவுக்கு காவல்துறை நடந்து கொள்வது அதைவிட கவலையானதே.

எம்பிலிபிட்டிய சம்பவத்தில் உயிர்நீத்தவர் தொடர்பாக அவரின் கர்ப்பிணியான மனைவியிடத்தில் கருணையுடன் காவல்துறை நடந்து கொள்ளாது அவர் மனம் விசனப்படும் அளவிற்கு வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது. வாக்குமூலத்தை தங்களுக்கு ஏற்றவாறு தயாரித்து ஒப்பத்தை பெற்றது மல்லாமல் அப் பெண் அச்சுறுத்தவும் பட்டிருந்தார்.

அக்கர்ப்பிணி விதவை குறித்த பிரதேச காவல் நிலையத்தில் நம்பிக்கையில்லாது தானாகவே ஒரு மனுவை தயாரித்து உயர் காவல் துறை அதிகாரிக்கு சமர்பித்துள்ளார். காவல்துறை மனிதாபிமானமின்றி நடந்து கொண்டமை கண்டிக்கப்படவேண்டிய தொன்றாகும். பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒரு கர்ப்பிணி விதவைக்கே நிலைமை இப்படி யென்றால் வேறு இனத்தை சார்ந்த ஒரு பெண்ணுக்கு நிலைமை எப்படி இருந்திருக்கும்?

நாட்டு மக்களை பாதுகாக்கும் முக்கிய கடமைக்குரியவர்கள் இவ்விதம் அராஜகமாக நடந்து கொண்டால் ஏனையவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது? காவல்துறையினர்களோ அல்லது அரசு கடமைகளில் இருப்பவர்களோ மக்களின் விடயங்களில் காட்டு மிராண்டிகள் போன்று நடந்து கொண்டால், நேரடியாக விரல் நீட்டப்படுவது அரசை நோக்கியே. அதுதான் தற்போதைய அரசுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமையாகும்.

நாட்டில் எது நடந்தாலும் சகல துறைகள் சார்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அரசுத் தலைவர்களே. அரசையும் அரசுத்தலைவர்களையும் கலங்கப்படுத்தாது பார்த்துக் கொள்ளுதல் அரச உத்தியோகத்தில் கடமை வகிக்கும் சகல தர ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் அனைவரினதும் பாரிய பொறுப்பாகும்.

இருப்பினும் இரண்டு போத்தல் மதுவுக்காக விலை மதிக்கமுடியாத மனித உயிர் எம்பிலிப்பிட்டியவில் பறிக்கப்பட்டதையிட்டு இந்த நாட்டு பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் வெட்கி தலை குனிய வேண்டியவர்களாக உள்ளோம்.




# பயங்கர விபத்தினால் வீசி எறியப்பட்ட தாயும், மகளும்

**இரட்டைக் கொலைகள்**

**ரிவிர – 24.01.2016**

15 வயது நிரம்பிய மாணவனால் பரிதாபமாக இறந்துள்ளனர் ஓர் தாயும் அவரது மகளும். ஏற்கனவே தந்தையை இழந்த மூத்த மகள் தற்போது தனது தாயையும் சகோதரியையும் இழந்து நிர்க்கதியற்று நிற்கின்றாள்.

தெமடகொடவை பிறப்பிடமாகக் கொண்ட அனுலாகே என்பவர் சமன் என்பவரை திருமணம் முடித்து இரு பெண் பிள்ளைகளுக்கு தாயானவர்.

வழமையாக அனுலாகேவும் அவரது இரண்டாவது மகளான சமாதியும் தெமடகொடையில் உள்ள சமிக்ஞை உள்ள மஞ்சள் கடவையிலேயே வீதியை கடந்து செல்வர்.

என்ன நடந்ததோ தெரியவில்லை அன்று ஜனவரி 16ம் திகதி அவர்கள் வழமையாக கடக்கும் கடவையை விடுத்து பண்டனாகார ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள சமிக்ஞை அற்ற மஞ்சள் கடவையினால் வீதியை கடக்க முற்பட்டுள்ளனர்.

கடந்து கொண்டிருந்த வேளையில் அதி வேகமாக இரண்டு மகிழூர்ந்துகள் போட்டி போட்டுக் கொண்டு வந்தன. இதைக் கண்ணுற்ற சமாதி வாகனத்தை நிறுத்துமாறு தனது கையினால் சைகை காட்டினாள். இருப்பினும் அவர்கள் வீதியை கடந்து முடிக்கும் முன்னர் கண் மூடி கண் திறப்பதற்குள் இருவரையும் அடித்து வீசி எறிந்தது அம்மகிழூர்ந்து. வீசி எறியப்பட்ட இருவரும் சற்று தொலைவில் நிலத்தில் வீழ்ந்தனர். அவ்விடத்திற்கு முன்னிருந்த மதுபானசாலையினுள் இருந்து வந்த நால்வர் அவர்களை உடன் வைத்தியசாலைக்கு கொண்டு சேர்த்துள்ளனர். இருப்பினும் சிகிச்சை பலனளிக்காது இருவரும் உயிரிழந்தனர்.

விபத்து நடந்த மறுகணம் அம்மகிழூர்ந்தை செலுத்தி வந்தவன் தப்பிச் சென்றதாக அங்கு நின்றிருந்தவர்களால் காவல்துறையினரிடத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சம்பவத்தை அறிந்த அப்பிரதேச வாழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு காவல்நிலையத்திற்குச் சென்று தம்மிடம் அக்கொலைஞனைக் காட்டுமாறு கோரியுள்ளனர்.

இருப்பினும் காவல்துறையோ அவனை இன்னமும் பிடிக்க வில்லை பயத்தில் ஒழிந்துவிட்டான் என கூறியுள்ளனர். பின்னர் நாங்கள் பிடித்தோம் எனினும் அவன் காவல்நிலையத்திலிருந்து தப்பிவிட்டான் என தெரிவித்துள்ளனர். பின்னர் மீண்டும் கிராண்ட்பாஸ் காவல்நியத்தில் அவன் உள்ளான் என தெரிவித்துள்ளனர். இதையடுத்து அப்பிரதேச மக்கள் ஊடகத்திடம் காவல்துறை தம்மிடம் பொய்யுரைக்கின்றது என தெரிவித்துள்ளனர்.

இது குறித்து காவல்துறையிடம் கேட்கப்பட்ட போது, தாம் அவனை கைது செய்துள்ளதாகவும். அப்பிரதேச மக்கள் கோப மிகுதியால் அவனை ஏதேனும் செய்து விடுவார்கள், பின் சட்டத்தின் முன் நிறுத்த முடியாது போய்விடும் எனவும் தெரிவித்துள்ளனர். அதே சமயம் அவனுடன் போட்டிக்கு வாகனத்தை செலுத்தியவனையும் அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளதாக தெரியவந்து-ள்ளது.

கைது செய்யப்பட்ட 15 வயதான முகமட் ஷாரிக் ∴பாறூக் மீது

1. கொலை புரிந்தமை
2. மிதமிஞ்சிய வேகம்
3. சாரதிப் பத்திரம் இன்மை

எனும் மூன்று குற்றங்கள் சுமத்தப்பட்டு அடுத்த மாதம் 29ம் திகதி வரை மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் மகனிற்கு மகிழூர்ந்தினை செலுத்துவதற்கு வழங்கியமைக்காக அவனது தாயாரையும் எதிர்வரும் 25ம் திகதி வரை மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனவரி 17ம் திகதி அப்பிரதேச மக்கள் இறந்த அவ்விருவரினது உடலங்களையும் அவர்கள் விபத்துக்குள்ளான மஞ்சள் கடவையில் வைத்து சிறிது நேர அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் அடக்கம் செய்துள்ளனர்.

**மொழியாக்கம் : தன்யா**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## பாவங்களுக்கு பரிகாரமாகும்

# நோன்பு

ஹஜ் அல்லது உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்து நிய்யத்து வைத்தவர் கடலில் மீன் பிடிக்கலாம். ஆனால், தரையில் வேட்டையாட முடியாது. அப்படி வேட்டையாடினால் வேட்டையாடப்பட்ட பிராணிக்குச் சமமான உயிர் பலியிட வேண்டும். எதை வேட்டையாடினால் எந்தப் பிராணியை பலியிட வேண்டும் என்பதை நீதமுடைய இருவர் தீர்ப்புக் கூற வேண்டும். அல்லது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும் அல்லது தான் பலியிட வேண்டிய பிராணிக்குத் தகுதியான அளவு நோன்பு நோற்க வேண்டும் என இந்த வசனம் கூறுகின்றது.



**மனைவியைத் தாய்க்கு ஒப்பிடுதல்:**

உங்களில் எவர் தமது மனைவியரைத் தாய்க்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்களோ, அவர்கள் இவர்களது தாய்மார்கள் இல்லை. இவர்களின் தாய்மார்கள் இவர்களைப் பெற்றெடுத்தவர்களே, நிச்சயமாக இவர்கள் வெறுக்கத்தக்க பேச்சையும், பொய்யையுமே கூறுகின்றனர். நிச்சயமாக அல்லாஹ் பிழைகளைப் பொறுப்பவன் மிக்க மன்னிப்பவன்.

எவர் தமது மனைவியரைத் தாய்க்கு ஒப்பிட்டு, பின்னர் (தாம்) கூறியதிலிருந்து மீண்டு விடுகின்றார்களோ அவர்கள், (கணவன், மனைவியாகிய இருவரும்) ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். இதைக் கொண்டே நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள். மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்.

எவர் (அடிமையைப்) பெற்றுக் கொள்ள வில்லையோ அவர், ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் தொடராக இரண்டு மாதங்கள் நோன்பு நோற்கவேண்டும்.

தொடரும் .. ..

**– இஸ்மையில் –**

# ஜெபம்



**கடவுள் எதற்காக உலகைப் படைத்தார்?**

அன்பே உருவானவர் கடவுள். அந்த அன்பை பகிர்ந்து கொள்ள கடவுள் உலகையும் மனிதனையும் படைத்தார். உலகையும் அதில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் படைத்து இறுதியாக மனிதனையும் படைத்து அனைத்தையும் மனிதனுக்குக் கொடுக்கிறார். இயற்கையோடும், , மற்ற விலங்குகளோடும், மற்ற மனிதர்களோடும் மனிதன் அன்பிபோடும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்து இறைப் பதம் அடையவே கடவுள் உலகைப் படைத்தார்.

அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். - தொடக்கநூல் 1:26

**கடவுள் எவ்வாறு உலகைப் படைத்தார்?**

எந்தப் பொருளையும் நாம் உண்டாக்குவதற்கு எதாவது ஒரு மூலப் பொருள் தேவை. ஆனால் கடவுள் ஒன்றுமில்லாமையிலிருந்து அனைத்தையும் உண்டாக்கினார். கடவுளால் முடியாதது ஒன்றுமில்லை.

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள், "ஒளி தோன்றுக!" என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். -தெடக்கநூல் 1:1-3

**மனிதரின் இரத்தத்தை உறிஞ்சி நோயையும், தூக்கமின்மையையும் ஏற்படுத்துகிற "கொசு"க்களைப் ஏன் கடவுள் படைத்தார்?**

எல்லா உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்ற நியதி இறைவன் கொடுத்த நியதி.

தொடரும் .. ..

www.bible.me

# குறுக்கெழுத்து புதிர் 04

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | | | | ■ | 2 அ | 14 | |
| | | ■ | ■ | ■ | 3 | | | |
| 4 | | | னை | ■ | ளை | 5 | | பு |
| 6 | ரா | 15 | ■ | 16 | | | | ■ |
| 7 | | | | | | 8 | 17 | 18 |
| 9 | | | | | ■ | ■ | | |
| | | 23 | | ஞ் | 20 | ■ | | 19 |
| | 11 | 10 | | 22 | | | 21 | |
| | ■ | ம் | ■ | ■ | | 12 | டு | |

**முடிவுத் திகதி : 04.02.2016**

### இடமிருந்து வலமாக

1. இஸ்லாமிய தீவிரவாதப் படையொன்று
2. உப்பில்லாமல் அவிக்கும் அரிசி
3. மாடு மேய்ப்பவன்
4. இதனை மனம் செய்தால் தீவினை அகன்றிடும் - குழம்பியுள்ளது
5. பெண்கள் கைகளில் அணிவது
6. நீதியின் அடையாளம்
7. அலுவலகம் ஒன்றின் உயர் அதிகாரி
8. குதிரைக்கு ஒத்த சொல்
9. பெரிய நிறுவனங்கள் தம்மை பிரபல்யப்படுத்தச் செய்வது - குழம்பியுள்ளது
10. கட்டபொம்மனின் தலைநகரம்
11. மேளத்துடன் இணைத்து வாசிக்கப்படுவது
12. நெருப்பில் கை வைத்தால்.............
22. கூடுதல் தவத்தினால் கிடைப்பது

### மேலிருந்து கீழாக

1. கலாநிதி ரஜனி திரணகமையினால் போர் தொடர்பாக எழுதப்பட்ட நூல்
2. முட்டையிட்டால் கோழிகள் இதைச் செய்யும்
3. இளவயதினர்
13. இந்தியப் பெண் அரசிகளில் மிகப் பிரபலமானவர்
14. ஆச்சரியத்திற்கு ஒத்த சொல்
15. அதிகாலையில் ஒலிக்கும் இறைவனின் இசை
16. அர்ச்சனை செய்தால் அரைப்பாதி தேங்காயுடன் கிடைக்கும் பிரசாதம் - கடைசிசொல் குழம்பியுள்ளது
17. பர்மாவின் தலைநகரம் - கடைசி எழுத்து குழம்பியுள்ளது
18. இறந்த பின் செல்வது
19. இது இல்லாவிட்டால் சாவில்லை
20. பசுக்கள் புல் மேயும் இடம் 21. குருவிகள் கட்டுவது
23. சிவனொளிபாதமலையில் சிவனது இது இருக்கிறது.

### 03 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ர் | ண | ன் | ■ | 2 அ | கோ | ரி | ■ |
| 3 ந் | 16 ப | த | ய | ம் | 4 ர | 17 ங் | 18 கோ | லி |
| 5 தை | ய | ல் | 6 யா | ன் | ங் | கை | ழை | 19 ப |
| 7 ம் | ண | 20 ம | று | 21 ந | கு | த | 8 கை | லி |
| ■ | ம் | ந் | 9 க | ளி | று | ■ | லா | ■ |
| 10 ச | ந் | தி | ள | ன் | 11 வி | ஜ | ய | ன் |
| ■ | 12 தா | 22 ர | வ | ம் | 13 லா | பு | ம் | ■ |
| ■ | தி | ம் | ம் | 14 நை | ட் | ரை | ட | ர் |
| 15 கே | ப் | பா | பி | ல | வு | ■ | ■ | ■ |

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159ஏ,***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

# இவ்வார இராசி பலன்

**மேஷம்** : புதிய உத்தியுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். வியாபாரத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**ரிஷபம்** : எதிர்பார்த்த நன்மை தாமதமின்றி வந்து சேரும். பணவரவுக்கேற்ப தாராளமாக செலவு செய்வீர்கள். வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்** : மனதில் நம்பிக்கை வளரும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். சமூகத்தில் நற்பெயர் தேடி வரும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்** : செயல்களில் மனிதாபிமானமும் நேர்த்தியும் வெளிப்படும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சியடைவீர்கள்.

**சிம்மம்**: மனதில் ஆன்மிக எண்ணம் வளரும் படிப்பிலும் முன்னேறுவர். வியாபார வளர்ச்சிக்கு கடினமாக உழைப்பீர்கள். நிபந்தனை கடன் பெறுவதை தவிர்க்கவும்.

**கன்னி** : தாரள பணவரவு கிடைக்கும். ஆரோக்கியம் நலமாக இருக்கும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற புதியவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்** : மனதில் இனம்புரியாத சஞ்சலம் ஏற்படலாம். பொதுவிடயத்தில் அமைதி காக்கவும். வியாபாரம் வளர கடின உழைப்பு தேவை. பணிச்சுமை ஏற்படலாம்.

**விருச்சிகம்** : மனதில் இருந்த தயக்கம் விலகும். பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். பகைவர் தொந்தரவு மறையும். மாணவர்கள் பாராட்டு பெறுவர்.

**தனுசு** :செயல்களில் நிதானம் நிறைந்திருக்கும். குடும்பச் செலவு அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரம் சுமாராக இருக்கும்.

**மகரம்** :உங்கள் நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். சேமிப்பு கூடும். முயற்சியுடன் படித்தால் முன்னேறலாம்.

**கும்பம்** : பேச்சில் உண்மை நிறைந்திருக்கும். கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். வருகின்ற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்தால் சிறப்பாக அமையும்.

**மீனம்** :மனதில் உற்சாகமும் செயல்களில் புத்துணர்வும் வெளிப்படும். பணவரவு அதிகரிக்கும். சேமிப்பு அதிகரிக்கும். எதிரியால் இருந்த தொந்தரவு மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 13

01 மலேசியா அமைந்திருப்பது இலங்கைக்கு?
1. வடக்குத் திசையில்
2. கிழக்குத்திசையில்
3. மேற்குத் திசையில்
4. தெற்குத் திசையில்

02. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

குப்பன் வீடு ஒன்றைக் கட்ட விரும்பினார். அவரது நண்பர்கள் தோல் கொடுக்க முன்வந்தனர். அவர் முகம் மலர்ந்தார். உடனடியாகவே வீடு கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிக்க எண்ணினார். அவர் வீடு கட்டப் போவதை அறிந்த சிலர் வயிற்றெரிச்சல் அடைந்தனர். அதனைப் பொருட்படுத்தாமல் முன்னுக்கு வருதலே சிறந்தது என்று நண்பர்கள் ஆலோசனை கூறினர்.

1. குப்பன் யாது செய்ய விரும்பினார்? ............................................
2. அவரது நண்பர்கள் எதற்காக முன்வந்தனர்? ............................................
3. எண்ணினார் என்ற சொல்லின் கருத்து யாது? ............................................
4. முகம் மலர்தல் என்ற மரபுத் தொடரின் கருத்தினை எழுதுக. ....................

03. **கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்குக.**

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தர்மம் ஒன்றே பெரியது

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போல
கருமம் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

1. அறம் என்ற கருத்தைத் தரும் சொல் எது? ............................................
2. தொண்டுகளில் பெரியது என்று கவிஞர் கருதுவது எதனை? ....................
3. உள்ளம் கசிதல் என்பதன் பொருள் யாது? ............................................
4. நாம் நினைத்தோம் என்பதனை ஒருமையில் மாற்றி எழுதுக. .............
5. தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல்லை எழுதுக. ..........................
6. பசுவின் இளமைப் பெயர் யாது? ............................................
7. இப்பாடலில் இடம்பெறும் உயர்திணை பெண்பாற் பெயர்ச்சொல் யாது?

............................................

8. இங்கு இடம்பெறும் முன்னிலை பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.

............................................

9. கவிஞர் கன்றை யாருக்கு ஒப்பிடுகின்றார்? ............................................
10. பருவம் பார்த்து கயிர் செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி எது?

............................................

04. சதுவிடம் உள்ள பணத்தை விட நான்கு மடங்கு பணம் குரவிடம் உள்ளது. சதுவுக்கு ரூபா 150 கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணத்தொகை சமமாகும். இப்போது இருவரிடமும் உள்ள பணத்தொகை எவ்வளவு?

............................................

05. 1கி.கி தேயிலையின் விலை ரூபா 300உம், 1கி.கி சீனியின் விலை ரூபா 70 உம் ஆகும். 250கிராம் தேயிலையும், 500 கிராம் சீனியும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

............................................

06. ஒரு தெருவில் 21 மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரு மின்கம்பங்களுக்கிடையிலான தூரம் 15மீ. எனின், முதல் மின் கம்பத்திற்கும் கடைசி மின் கம்பத்திற்கும் இடையிலான தூரம் எவ்வளவு?

............................................

**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**



# சிறுவர் முரசு





சிறுவர்களுக்கான குட்டிக் கதை

## புதையல்

**பே**ராசைக்காரன் ஒருவன் எந்த பொருளை பார்த்தாலும் அதைத் தான் அடைய வேண்டும் என நினைப்பான்.

ஒரு நாள், வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான். வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக் கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?" என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் நடுங்கும் குரலில், "ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான்" என்றது அந்தக் குரல்.

"உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்" என்றது அந்தக் குரல். என்னதான் நடக்கிறது பார்ப்போமே என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான். விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்... என்றான் அவன்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

ஆ! இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான் தான், என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே! என்ன செய்வது? என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

உனக்கு என்ன வேண்டும்? என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது என்று கேட்டான்.

அப்படியே ஆகட்டும் என்று குரல் வந்தது.

வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் ஓடினான், தன் மனைவியிடம் இனி நாம் வறுமையில் வாட வேண்டாம். நாமும் செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் கொண்டு வந்துள்ளேன்! என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே என்றாள்.

வண்டியை நன்றாகப் பார் என்றான்.

நன்றாகப் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன் என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான்.

வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான். அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருட்களும் கீழே கொட்டிச் சிதறின.கிடைத்த விலை மதிப்பற்ற பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான்.




**பேராசைப் பட்டால் எதையும் எட்டமுடியாது!!!**

### சிந்திக்க .. ..

சோம்பலுக்கு ஒருநாளைக் கொடுத்தால்
அது அடுத்த நாளையும் திருடிக் கொள்ளும்

மலைமுரசு



**பாராட்டு பெறுவோர்**

*வீ.டினுஷன், 152, காந்திபுரம், திருகோணமலை*

*ம.ஜெகு குரூஸ், நிலாவெளி, திருகோணமலை*

தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ. கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு கோடாத தாயக்கட்டையும், ஒரு நாணயமும் ஒரே தடவையில் சுண்டப்படுகின்றன.
   அ. இம் மாதிரிவெளியை நெய்யரியில் குறித்துக் காட்டுக.
   ஆ. இரட்டை எண்ணும் தலையும் கிடைப்பதற்கான நிகழ்ச்சியை A எனக் கொண்டு மூலகங்களை குறித்துக் காட்டி நிகழ்தகவை காண்க.
   இ. இலக்கம் மூன்று கிடைப்பதற்கான நிகழ்ச்சியை B எனக் கொண்டு நிகழ்தகவைக் காண்க.
   ஈ. ஒரு ஒற்றை எண் கிடைப்பதற்கான நிகழ்தகவை காண்க
   உ. இந்நிகழ்ச்சிகளுள் தம்முள் புறநீக்கும் நிகழ்ச்சிகளை சோடிகளாக்கவும்.

02. கூட்டல் விருத்தியின் n ஆம் உறுப்பு $7n-2$ எனின், பொது வித்தியாசத்தையும், $n+1$ ஆம் உறுப்பையும் காண்க.

03. தீர்க்க. $2x = 5-3x$

04. பொது மடங்குகளில் சிறியதைக் காண்க. $8x$, $12xy$, $3y$

05. 3 இற்கும் 19 இற்கும் இடையே மூன்று கூட்டல் இடைகளைக் காண்க.

06. தொடைகள் A, B என்பவற்றில் $n(A) = 12$, $n(B) = 9$, $n(AUB) = 15$ எனின், $n(AnB)$ ஐக் காண்க.

07. குறித்த ஒரு தொகைப் பணமானது லலித், கமல் என்போரிடையே 2 : 3 என்றவாறும் லலித், பண்டார என்போரிடையே 1 : 2 என்றவாறும் பங்கிடப்பட்ட போது கமல் ரூபா 1200 ஐப் பெற்றுக் கொண்டான்.
   அ. லலித், கமல், பண்டார என்போரிடையே தொகையாது பங்கிடப்பட்ட சேர்த்தி விகிதத்தைக் காண்க.
   ஆ. பங்கிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு ?

08. $y = 2x - 1$ என்னும் நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0,3) எனும் புள்ளியினூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது ?

09. சாய்சதுரம் ஒன்றின் மூலைவிட்ட நீளங்கள் 8cm, 6cm ஆகும். அதன் சுற்றளவைக் காண்க.

10. 1, 2, 2, 3, 4, 4 என இலக்கங்கள் இடப்பட்ட ஒழுங்கான சதுரமுகித் தாயக்கட்டை ஒன்றும் 1, 2, 3, 4 என இலக்கங்கள் இடப்பட்ட ஒழுங்கான நான்முகித் தாயக்கட்டை ஒன்றும் ஒருமித்து உருட்டப்படுகின்றன.
அ. இதற்கான மாதிரி வெளியை நெய்யரி ஒன்றின் மூலம் காட்டுக.
ஆ. பின்வருவனவற்றின் நிகழ்தகவுகளைக் கணிக்க.
   1. இரண்டிலும் இரட்டை எண் கிடைத்தல்
   2. இரண்டிலும் ஒரே இலக்கம் கிடைத்தல்
   3. இலக்கங்களின் கூட்டுத்தொகை 5 இலும் அதிகமாக இருத்தல்.

11. ஒரே அடியிலான இரு எண்களும் அவற்றின் கூட்டுத்தொகையும் இங்கு காட்டப்பட்டுள்ளன இவ்வெண்களின் அடி யாது? $12_x + 12_x = 30_x$

## பாடம் : வரலாறு

01. வர்சேல்ஸ் உடன்படிக்கையின் படி ஜேர்மனி நாட்டிற்கு பணிக்கப்பட்ட தண்டனைகளுள் பிழையான கூற்று?
   1. ஜேர்மனி நாட்டு படை வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்
   2. ரஷ்ய நாட்டுக்கு பெருந்தொகையான பணத்தினை நட்ட ஈடாக செலுத்த வேண்டும்
   3. போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் பாவிப்பது தடுக்கப்பட வேண்டும்
   4. கட்டாய இராணு சேவை தடுக்கப்பட வேண்டும்.

02. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த இடமான சித்தலபப்பத காணப்பட்ட பிரதேசம்
   1. ருகுணு பிரதேசம் 2. இரஜரட்டை பிரதேசம்
   3. தம்மன்னா பிரதேசம் 4. நாகதீப பிரதேசம்

03. அசோக பேரரசினை ஏற்படுத்தி அசோக சக்கரவர்த்தி இந்திய சமூகத்தவர்களுக்கு அசோக பேரரசின் சிறப்பினை எடுத்துக்காட்டிட மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய சமர் செய்த இடம்?
   1. மகதம் 2. அவந்தி 3. கலிங்க 4. காஷ்மீர்

04. கோட்டை இராசதானி மன்னன் 6ம் பராக்கிரமபாகு மன்னனின் வளர்ப்பு மகனான சப்மல்குமாரனை அழைத்தது?
   1. கனகசூரிய 2. குமார இளவரச
   3. செம்பகப்பெருமாள்
   4. வெண்டு அறிட்டகி பெருமாள்

05. வானொலி, தொலைபேசி, மின்குமிழ் ஆகிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட விஞ்ஞானிகளை முறையே காட்டும் விடைத்தொகுதி
   1. மார்க்கோணி, கிரகம்பெல், ஹம்பிறிடேவி
   2. அலெக்ஸாண்டர் கிரகம்பெல், மார்க்கோணி, தோமஸ் அல்வா எடிசன்
   3. மார்க்கோணி, கிரகம்பெல், தோமஸ் அல்வா எடிசன்
   4. ஹம்பிறிடேவி, மார்க்கோணி, அலெக்ஸாண்டர் கிரகம்பெல்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

பதம் என்பது ஓர் எழுத்தாலாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலாயினும் அமைந்து பொருள் தந்து நிற்பது ஆகும். சொல், பதம், கிளவி, மொழி என்பன ஓர் பொருளை உணர்த்துவன. சொல்லை ஆக்கக் கூறுகளாகப் பகுத்தாயும் இலக்கணப் பகுதி பதவியல் எனப்படும்.

ஓரெழுத்துச் சொற்கள்

எடுத்துக்காட்டு: கோ (அரசன்)
பூ (மலர்)
ஆ (பசு)

ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலான சொற்கள்

எடுத்துக்காட்டு: தாய், தந்தை, கடவுள், பூந்தோட்டம்

**சொற்கள் பகாப்பதம் பகுபதம் என இருவகைப்படும்.**

**பகாப்பதம்**

பகுதி, விகுதி முதலான உறுப்புக்களாகப் பகுக்க முடியாத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டு:

| | | |
|---|---|---|
| பெயர்ப் பகாப்பதம் | : | இலங்கை, நிலம், மரம், மாடு |
| வினைப் பகாப்பதம் | : | சிரி, வா, போ, நட, ஓடு |
| இடைப் பகாப்பதம் | : | மற்று, கொல், ஏ |
| உரிப் பகாப்பதம் | : | உறு, தவ, நனி |

**பகுபதம்**

பகுதி விகுதி முதலிய சொல்லாக்கக் கூறுகளை இனங்காணத்தக்க சொல் பகுபதம் எனப்படும். பெயர்ச்சொல் வினைச்சொல் எனும் இருகைச் சொற்கள் பகுபதங்களாக அமையும்.

ஒரு பகுபதத்தில் இடம் பெறும் கூறுகளை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். ஆவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப்படும். ஒரு பகுபதத்தில் இந்த ஆறு உறுப்புக்களும் கட்டாயம் அமையும் என்பதில்லை. ஆனால் பகுதி விகுதி என்னும் இரு உறுப்புக்களும் குறைந்தபட்சம் அமையும்.



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

01. கழிவுப் பொருள்கள் என்பன உடலின் உயிரசாயனச் செயன்முறைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேவையற்ற பொருள்களாகும். இதற்கேற்ப மனிதனின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருளாக அமையாதது?
   1. தோலிலிருந்து வெளியேறும் வியர்வை.
   2. சிறுநீரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சிறுநீர்
   3. சுவாசத் தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீர்
   4. உணவுக் கால்வாயிலிருந்து வெளியேற்றப்படும் மலம்.

02. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
   1. தைத்தேனியம் ஒட்சைட்டு 2. ஈயகுரோமேற்று
   3. குரோமியம் ஒட்சைட்டு 4. காபன்

03. 1955 ஆம் ஆண்டில் வில்பத்து சரணாலயத்தில் வாழ்ந்த மான்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 550 எனின், அம்மான்களின் கூட்டத்திற்கு வழங்கும் மிகப் பொருத்தமான பெயர் எது?
   1. இனம் 2. சூழல் தொகுதி 3. சாகியம் 4. குடித்தொகை

04. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாக கருதப்படுவன யாவை?
   1. சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகியன 2. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியன
   3. சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியன 4. நீலம், பச்சை, மஞ்சள் ஆகியன

05. நீர், காற்று, விலங்குகள் ஆகியவற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் முறையே
   1. வாதுமை, முருங்கை, மரமுந்திரிகை
   2. அல்லி, ஆடையொட்டி, பருத்தி
   3. தென்னை, இறப்பர், மா மரம்
   4. எருக்கலை, ஒகிட், ஒட்டுப்புல்

06. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
   1. கம்பமேலணி 2. கனமேலணி
   3. படைகொண்ட மேலணி 4. பிசிர் மேலணி

07. யூரியா $[CO(NH_2)_2]$ இலுள்ள காபனின் சதவீதத்தை சரியாகக் குறிப்பது எது? $(C = 12, O = 16, N = 14, H = 1)$
   1. 26.6% 2. 20% 3. 30% 4. 23.3%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை வதை...

பிடிக்கப்பட்டது.

சர்வதேச கண்காணிப்பாளர் குழுவின் வருகையை அடுத்து உலகிற்கு வெளிச்சமிடப்பட்ட இந்த வதைமுகாம் நிலத்தடி வதைமுகாமாகப் பேணப்பட்டு வந்துள்ளது.

கண்காணிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட இவ்வதை - முகாமிலிருந்து மிட்சுபிசி-டொல்பின் ரக 6021 என்ற இலக்கம் இடப்பட்ட வானொன்றையும் குற்றப் - புலனாய்வாளர்கள் கைப்பற்றி - யிருந்தனர்.

இவ்வாகனத்தின் அடிச்சட்ட இலக்கத்தின் அடிப்படையில் புலனாய்வை மேற்கொண்டபோது குறித்த வாகனம் கொட்டாஞ் - சேனையைச் சேர்ந்த ஜோன் ரீட் என்பவருக்குச் சொந்தமானது என்பதுடன் அவ்வாகனம் களவாடப் - பட்டுள்ளதாகக் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் புலனாய்வாளர்கள் நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த வதைமுகாமில் கடத்தப்பட்ட பதினொருபேர் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த வதைமுகாமானது கடந்த 22.04.2015 முதல் குற்றப்புலனாய்வினரால் சட்டப்படி முத்திரையிட்டு மூடப்பட்டுள்ளது என்றும் அவர்கள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கன்சைட் வதைமுகாம் தொடர்பாகப் பதிலளித்த பொலிஸ் பரிசோதகர் நிஸாந்த சில்வா, உண்மையில் வெளி நாட்டு மேற்பார்வையாளர்களுடன் திருமலையில் உள்ள கடற்படை தளத்தின் கன்சைட் எனும் நிலத்தடி இரகசிய முகாமுக்கு சென்றிருந்த போது சில எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை தற்போது கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரியின் ஆய்வுகளுக்காக அனுப்பட்டுள்ளன. அது குறித்து இன்னும் அறிக்கை கிடைக்கவில்லை. என்னை பொறுத்தவரை அது விலங்குகளின் எழும்புகளாக இருக்க வேண்டும். எனினும் அறிக்கை கிடைக்கும் வரை எதனையும் கூற முடியாது. என்றார்.

இதன் போது இடை மறித்த நீதிவான் கிஹான் பிலபிட்டிய எத்தனை எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன என கேள்வி எழுப்பினார்.

அவை எலும்புக் கூடுகள் என்பதை விட எலும்புத் துண்டுகள் என்பதே சரியாக இருக்கும். சுமார் 10 எலும்புத் துண்டுகள் இவ்வாறு மீட்கப்பட்டன.

வத்தளையில் வைத்து கடத்தப்பட்ட ஜோன் ரீட் என்பவரின் வேன் கடற்படையின் அடையாளத்துடன் 6021 என்ற இலக்கத்துடன் கடற்படையின் சமுத்திரவியல் விஞ்ஞான பீடத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து நாம் முன்னெடுத்த விசாரணைகளில் கடற்படையினரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அந்த வாகனத்துடன் பொருந்தவில்லை. டொல்பின் ரக குறித்த வாகனத்தின் இயந்திரத்தின் இலக்கமும் செஸி இலக்கமும் ஒன்றுடன் ஒன்று வித்தியாசப்படுவது உறுதியாகின்றது. இது குறித்து அரச இரசாயன பகுப்பாய்வாளர் தற்போது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். எனவே விசாரணைகள் தொடர்கின்றன என்று தெரிவித்துள்ளார்.

குறித்த வழக்கானது எதிர்வரும் 18ம் திகதி மே மாதம் மீளவும் மன்றிற்கு முன்நிலைப்படுத்தப்படுமென நீதிபதி அறிவித்துள்ளார்.

## பெப்ரவரி....

மேற்கொள்ள வுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அண்மையில் கிளிநொச்சியில் சந்தித்தபோதே இத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இத் தீர்மானத்தின் படி வடக்குகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் நாலாம் திகதி அமைதியான பகிஸ்கரிப்பு - க்களை நடாத்த காணாமலாக்கப் - பட்டோரின் பிரதிநிதிகள் ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிகின்றது.

காணாமலாக்கப்பட்டவர்கள் எவரும் உயிருடன் இல்லை என ஸ்ரீலங்காவின் பிரதமர் அறிவித்ததை அடுத்து அவசரமாகக் கூடியுள்ள பிரதிநிதிகள் பிரதமரின் இக்கூற்றை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அப்படி இறந்திருந்தால் இராணுவத்திடம் சரணடைந்த, ஒப்படைந்தவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் மற்றும் முகாம்களிலும், வீடுகளிலும் வைத்து கடத்திச் செல்லப்பட்டவர்கள் என்ன நடந்தது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### மாடறுப்பு...

தடைசெய்யப்பட்டால் அது இலங்கையின் பொருளாதாரம், இயற்கை சமநிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனை ஜனாதிபதி , பிரதமர் உட்பட அரசின் முக்கிய அமைச்சர்களுக்கு தெளிவூட்டவேண்டிய பொறுப்பு எனக்குள்ளது என்றும் தெரிவித்தார்.

### மூதூர்....

பணியாற்றும் சிரேட்ட அலுவலர் ஒருவரை அப்பதவிக்கு நியமிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சரியான காரணங்களின்றி அமையவுள்ள இவ்விடமாற்றமானது இரண்டு வருடங்களுக்கு முன்னர் அப்பதவியில் இருந்த தமிழ் கல்விப் பணிப்பாளர் எவ்வாறு ஆளுனரின் அனுசரணையில் இடமாற்றப்பட்டாரோ அதே வகையில் நிகழும் ஆபத்துள்ளதாக கல்வி அலுவலர்க - ளிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

முறையற்ற இவ்விடமாற்றம் தொடர்பாகத் தமிழ்த் தரப்பினர் கல்வி அமைச்சருக்குத் தெரியப்படுத்தியுள்ள போதும் இடமாற்றம் தடையின்றி முன்னெடுக்கப்படுவதை அறிந்த பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கத்திற்கும் இத்தகவலை தெரிவித்துள்ளனர்.

எனினும் நடவடிக்கைகள் தாமதப்படுவதை அடுத்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிற்கும் குறித்த தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

புதிதாக வலயக்கல்விப் பணிப்பாளராக அனுப்பப்படவுள்ள முஸ்லிம் சிரேட்ட அதிகாரியும் பல தடவைகள் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாகியவர் எனத் தெரிகின்றது. அத்துடன் தற்போது விசாரணை - களுக்குப் பொறுப்பாகவுள்ள அவர் வளைந்து கொடுக்காத பண்புடன் நடந்துகொள்பவர் என்றும் கல்முனையிலிருந்து இடமாற்றப்பட்ட அவர் ஏற்கனவே மூதூர் கல்வி வலயத்தில் சில காலம் பணியாற்றிய பின்னரே கல்வி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## உடற்பாக...

பொது வைத்தியசாலை மருத்துவப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சதுர்முகன் ஆகியோர் சிறுவனின் மரணம் தொடர்பில் உடனடியான முடிவுக்கு வரமுடியவில்லை என்றும் தேவையான ஆதாரங்களை திரட்டியதன் பேரிலும் பல்வேறு பரிசோதனைகளையும் ஆய்வுகளை மேற்கொண்டதன் பேரிலுமே மரணத்துக்கான காரணத்தைக் கூற முடியும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கொல்லப்பட்ட சிறுவன் தனது இறுதிச் சுவாசத்தை கிணற்றுக்குள்ளேயே மேற்கொண்டிருப்பதற்கான தடயங்கள் காணப்படுவதாகவும் அதனடிப்படையில் மயக்கமுற்ற நிலையிலேயே சிறுவன் கிணற்றுக்குள் கல்லுடன் கட்டிப் போடப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரியவந்துள்ளது.

குறித்த கல்லானது சுமார் மூன்று கிலோ எடையுள்ளது என்றும் அக்கல்லை இராணுவ பூட்சுக்குப் பயன்படுத்தும் நீண்ட நாடாவைப் பயன்படுத்தி முதலில் சிறுவனின் உடலைச்சுற்றிப் பிணைத்த பின் மற்றொரு சுற்றிலேயே கல்லைப் பிணைத்திருப்பதானது கொலையாளிக்குப் போதமான நேரம் உள்ளதை வெளிப்படுத்தியுள்ளது.

குறித்த சிறுவனின் வீட்டிற்கு வடக்குப் புறமாக உள்ள குடியேற்றப்படாத உடைந்து கிடக்கும் வீடொன்றிலிருந்தே சிறுவனின் செருப்பை காவல்துறையின் மோப்ப நாய் மீட்டுள்ளது. அப்பகுதியில் நடைபெற்ற சம்பவமொன்றைச் சிறுவன் கண்டிருப்பின் அதற்கான சாட்சியமாக அவர் உருவாகியிருப்பாராயின் அச்சாட்சியத்தை அழிப்பதற்காக இக்கொலை மேற்கொள்ளப் - பட்டிருப்பதற்கான சாத்தியங்களிருப்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுவனின் உடலில் பலமான காயங்களோ அல்லது புறவெளிப்பயன்பாடுகளோ ஆய்வின் போது கண்டுபிடிக்கப்படாததை அடுத்தே இச் சந்தேகம் எழுந்துள்ளது.

தாயின் மீது அதீத பற்றுக்கொண்ட சிறுவன் தாயை விடுத்து மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிக்குள் செல்வதற்குத் தூண்டிய விடயம் என்னவென்பத தொடர்பாகவும், அவரை அவ்வாறு அழைத்துச் செல்ல காரணியானவர் யார் என்பது தொடர்பாகவும் தகவல்கள் வெளியாகவில்லை.

### கல்முனை...

நாட்டின் மொத்த தேசிய வருமானத்திற்கு கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு நல்ல நிலையில் உள்ள போதும் அதனை மேலும் அதிகரிக்க கிழக்கு மாகாண முதலமைச்சர் எடுக்கின்ற நடவடிக்கையினை பாராட்டுகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மூலம் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்கான தொழில் பேட்டைகள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகள், நகரை அழகுபடுத்தல் இது போன்ற பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளது என பிரதமர் இதன்போது தெரிவித்ததாக பிரதி அமைச்சர் ஹரீஸ் மேலும் தெரிவித்தார்.

## 292 பேரைத்...

யுத்தம் முடிந்து நிராயுதபாணிகளாக அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வருகை தந்தபோது கைதான போராளிகள், அவர்களுடன் சந்தேகத்திற்கிடமானவர்கள் என்ற கண்ணோட்டத்துடன் கைதான பொது மக்கள், தடைமுகாம்களுக்குள் வைத்திருந்த வேளையில் இராணுவத்தினரால் ஒலிபெருக்கி மூலம் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தலறிவிப்பை அடுத்து சிறிய உதவிகளைச் செய்தவர்கள் என்ற வகையில் தாமாகவே முன்வந்து கைதான தமிழ் மக்கள் ஆகியோரில் தற்போதுவரை விடுவிக்கப்படாத தமிழ் மக்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

பலர் சரணடைந்தமை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அடுத்த ஒருவருடம் உயிருடன் தடுப்பு முகாம்களில் வைத்திருக்கப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. நீங்கள் சொல்கின்றீர்கள் இறந்துவிட்டார்கள் என" என்ற கெள்வி முடியும் முன்னரே " அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதால் அவர்கள் பெரும்பாலும் இறந்து விட்டார்கள்" என பதிலளித்த பிரதமர் அவ்வாறு ஏன் நடந்தது என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போது "காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறியும் விசேட சபை, காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கச் சபை ஆகியவை இதற்காகவே அமைக்கப்படுகின்றன. இவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும். ஆகக் குறைந்தது மக்களுக்கு ஒரு பதிலாவது தெரிய வேண்டும். அதனைச் செய்யும் பொறுப்பை நாங்கள் கொண்டுள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் "ராசபக்சாக்கள் செய்தவை குற்றங்களாக அடையாளப் படுத்தப்படுமானால் அவர்களும் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவார்கள். ஆனால் ஸ்ரீலங்காவில் பெரும்பாலான அதிகாரப் பிறள்பிரயோகங்கள் (துஸ்பிரயோகம்) குற்றங்களாக வகைப்படுத்தப்படுவதில்லை என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தமிழ்...

ஆயினும் குறைந்தது 05 தமிழ் ஊடகவியலாளர்களின் நீதி விசாரனையையாவது நீதி மன்றத்திற்கு எடுத்து விசாரனையை ஆரம்பித்தாலேயே நாட்டில் ஊடகப்பணியில் பணியில் ஈடுபடும் ஊடகவியலாளர்களுக்கு நம்பிக்கை ஒன்று ஏற்படும் எனவும் யாழ் ஊடக மையத்தின் ஒருங்கிணைப்பாளர் தயாபரன் தனது உரையில் தெரிவித்தார்.

### காணாமற் போன...

சுட்டிக்காட்டியுள்ளார்.

நாங்கள் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்திய அமர்வுகளின் போது பலர் எமது விசாரணை அமர்வுகளை புறக்கணித்ததாக செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால் இந்த அமர்வுகளின் போது எங்களுக்கு 300 புதிய முறைப்பாடுகள் கிடைத்தன என்பதை தெரிவிக்கின்றோம்.

எமது ஆணைக்குழுவுக்கு இரண்டு ஆணையாளர்கள் மேலதிகமாக இணைக்கப்பட்டனர். இப்போது எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள அனைத்து முறைப்பாடுகளுக்கும் நாங்கள் அடுத்த 12 மாதங்களில் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்பது எமது நம்பிக்கை என அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு




காலங்கள் கடந்து போய்கொண்டு இருக்கிறது. உலகங்கள் காலத்தைக் கடத்திக் கொண்டு இருக்கிறது. தமிழர்களின் இன்றைய இருப்பு கேள்விக்குள்ளாகிக் கொண்டு இருக்கிறது என்பது மட்டும் புரிகிறது. ஆனால் இதனை தமிழர்கள் உணர மறுக்கிறார்கள், அல்லது அதனை சிந்திக்க தவறுகிறார்கள். சிந்திக்கும் காலம் வருமா? அல்லது நாமும் பெரும்பான்மை இன நீரோட்டத்தில் கலந்து எமது அடையாளங்களை இழந்து போவோமா? புதிய ஆண்டில் இவற்றிற்கான விடைகள் கிடைக்குமா?

எமது பயணத்தில் இப்பொழுது வியட்நாமுக்குள் நிற்கிறோம். வாருங்கள் தொடர்ந்து போகலாம். இந்த இடத்தில் வியட்நாம் சுதந்திரம் அடைவதற்கும், வியட்நாம் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை உடைத்தெறியவும் ஆணிவேராக நின்ற ஹோசிமின் பற்றி அறிந்து கொண்டு போகலாம். அவர் இல்லாத வியட்நாமை சிந்தித்தே பார்க்க முடியாது !

நடுத்தர உயரத்தையும், மெல்லிய உடல் தோற்றமும், ஒட்டிய கன்னம், குழிவிழுந்த கண்கள் என்றாலும் ஊடுருவும் பார்வை, உதடுகளை சுற்றும் நீண்ட மீசை, நாடியை கூர்மைப்படுத்தும் அழகான ஆட்டுத்தாடி கொண்ட இவரது பிறந்த தினங்களில் பல குழப்பநிலைகள் இருந்தாலும் 1890ம் ஆண்டு பிறந்தார் என்பது மட்டும் தகவலாக நமக்கு போதும். தனது ஒன்பதாவது வயதிலேயே அப்பொழுது ஆட்சி செய்த கைப்பொம்மை அரசுக்கு எதிராக போர் செய்த சிறிய போராட்டக் குழுவிற்கு தகவல் கொண்டுசேர்க்கும் உளவாளியாக அல்லது தரகராக பணிசெய்தார். காலப்போக்கில் இளைஞனாக மாறிய பொழுது வியட்நாம் விடுதலைக் கனவை சுமந்து நடந்தார். ஒரு பன்முகப்படுத்தப்பட்ட ஆளுமை கொண்ட ஒரு மனிதன். உலகம் சுற்றிய வாலிபன். உலக அறிவு, உலக அரசியலை தேடிக் கற்ற ஒருவர். கிடைக்கும் பொழுதெல்லாம் எதோ ஒன்றை கற்றுக்கொண்ட ஒரு அறிவாளன். பட்டம் விடுதலிலும், மீன் பிடித்தலிலும் ஆர்வம் கொண்ட இவர் கப்பல் சமையல் உதவியாளராக உலகம் முழுக்க சுற்றியவர். இவரது இளமைப் பருவ, காலங்களில் வியட்நாம் பிரான்ஸ் காலனியாக இருந்ததாலும், கல்வி கற்றது பிரான்ஸ் கல்லூரிகளில் ஆனால் அவர் பின்பற்றியது என்னவோ கன்பூசியஸ் கொள்கைகளை. அவரது இளமைக்காலத்திலேயே பிரான்ஸ்க்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டார். சில இடங்களில் தலைமையும் ஏற்றார். பின்னர் கல்வி கற்க என பிரான்ஸ் போனபொழுது, அங்கே இவரது விண்ணப்பங்கள் பல்கலைக் கழகங்களால் நிராகரிக்கப்பட்ட பொழுதில்தான் சமையல் உதவியாளராக கப்பலில் பணிபுரிய ஏறிக்கொண்டார்.

இப்படியே கப்பலில் சுற்றியவர் 1912-13 காலப்பகுதிகளில் அமெரிக்காவில் கூட அவர் தற்காலிகமாக வாழ்ந்து. சிலநாட்கள் அங்கே ஒரு விடுதியிலும் பணியாற்றியிருக்கிறார். அப்பொழுது அவர் நினைத்தே இருக்கமாட்டார் இந்த அமேரிக்கா என் நாட்டுக்கு வந்து என்ன பாடுபடப் போகுதோ? என்று. ஆனால் இங்கே ஒரு விடயத்தை தொட்டுச் செல்கிறேன். இந்திய தமிழர் தரப்பு போராளிகளுக்கு பயிற்சி கொடுத்த காலத்தில், பயிற்சி வழங்கிய இந்திய இராணுவத்தினருடன் நெருங்கிப் பழகிய போராளிடம், தலைவர் சொன்ன விடயம் "எல்லாம் அளவோட இருக்க வேணும், இதே இந்திய படையினருடன் நாம் ஒருகாலம் மோதிக்கொள்ள வேண்டி வரும்" இங்கே இதனை ஏன்? சொல்கிறேன் என்றால் தொலை நோக்குப் பார்வையும், தீர்க்க தரிசன சிந்தனையும் கொண்ட ஒருவரை தமிழினம் பயன்படுத்த தவறிவிட்டது. சுயநல போக்கில் நின்ற, நிற்கின்ற தமிழினம் அதனை உணரும் காலம் வெகு விரைவில் வரும். காத்திருங்கள்.

அமெரிக்காவிற்கு அடுத்து பிரித்தானியாவில் இறங்கிய ஹோசிமின் அங்கேயும் ஒரு உணவுவிடுதியில் கோப்பைகள் கழுவுபராக பணிசெய்து பலற்றி தயாரிப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார். பின்னர் அங்கிருந்து மீண்டும் பிரான்ஸ் க்குள் நுழைந்த ஹோசிமின் அங்கே வியட்நாம் விடுதலையை

---

# நிகழ்வுகள்

## "யாழ்ப்பாண நினைவுகள்"

### அறிமுக நிகழ்வு




வேதநாயகம் தபேந்திரனின் "யாழ்ப்பாண நினைவுகள்" பாகம் - 02 நூல் அறிமுக நிகழ்வு நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை யேசுவிட் ஆங்கில கலாசாலையில் 31.01.2016 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையினை கலாச்சார உத்தியோகஸ்தர் வி.குணபாலாவும், நூலாசிரியர் அறிமுகத்தினை அதிபர் ப.மதிபாலசிங்கமும் வாழ்த்துரைகளை எழுத்தாளர்களான நந்தினி சேவியர், ஷெல்லிதாசன், திருமதி.பிரகலா சுதர்சன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு இலக்கியவாதிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கின்றனர் ஏற்பாட்டுக் குழுவினர்.

## நூல் வெளியீட்டு விழா

**ஜே.பிரோஸ்கானின் காக்கைச் சிறகினிலே நந்தலாலா (சிறுவர் பாடல்கள்)** மற்றும் **பேனா காலாண்டு – இலக்கியச் சஞ்சிகை** எனும் இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா பொது நூலகக் கட்டிடத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வினை முன்னாள் நகரசபை பிரதித் தலைவர் கிண்ணியா சபருள்ளா அவர்கள் தலைமை தாங்கவுள்ளார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அப்துல்லா ம.ஃரூப் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் பலரும் அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொள்ள இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நூல்களின் முதற் பிரதியை கவிஞர் ம.புவிலக்ஷி அவர்கள் பெற்றுக் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேனாவின் மொழியோடு பேசிக் கொள்ள அனைவரையும் அழைக்கின்றனர் விழா ஏற்பாட்டாளர்களும் நூலின் ஆசிரியர் அவர்களும்.

## மட்டக்களப்பில்

### மகுடம் அனுசரணையில் "கண்ணாடி" அறிமுக நிகழ்வு

திருகோணமலையிலிருந்து ஸ்ரீராம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட தமிழ் மாத இதழான "கண்ணாடி" யின் அறிமுக நிகழ்வு மகுடம் கலை இலக்கிய வட்டத்தினரால் மட்டக்களப்பில் இன்று மாலை 4.00 மணியளவில் இடம்பெறவுள்ளது. இம் மாத சஞ்சிகையானது ஒவ்வொரு மாதமும் பதினைந்தாம் திகதிகளில் வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பெரும்பாலான விடயங்களை சுமந்து ஒரு சனரஞ்சகமான இதழாக, வாசகர்களை ஈர்க்கக் கூடியதாக வெளிவருகின்றமை கண்கூடு.

இந்நிகழ்வினை கவிஞர் மைக்கல் கொலின் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின், மொழித்துறை தலைவியாக இருக்கும் திருமதி.ரூபி வலண்டினா பிரான்சிஸ் அவர்கள் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் விழா ஏற்பாட்டுக் குழுவினர்.

---

பௌர்ணமி நிகழ்வின் தொடர் அமர்வு - 17

"மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்"

மட்/ மாநகரசபையின் அனுசரணையுடன்

**மகுடம்**

கலை இலக்கிய வட்டம் நடாத்தும்

**கண்ணாடி**

தமிழ் மாத இதழ்

அறிமுக நிகழ்வும் – சிறப்புரையும்

**சிற்றிதழ்கள் செய்தவையும் — செய்யவேண்டியவையும்**

**சிறப்புரை**
திருமதி.ரூபி வலண்டினா பிரான்சிஸ்
(தலைவர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

காலம் : 30.01.2016 சனிக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி
இடம் : மட்/பொதுநூலக கேட்போர் கூடம்

**முன்னிலை**
திரு. மா. உதயகுமார்
(மாநகர ஆணையாளர், மாநகரசபை, மட்டக்களப்பு)

**வரவேற்புரை**
கவிஞர். வி. மைக்கல் கொலின்
(தலைவர், மகுடம் கலை இலக்கிய வட்டம்)

**தலைமை**
செல்வி. தங்கேஸ்வரி கதிராமன்
(தொல்லியல் ஆய்வாளர்)

**முதல் பிரதி பெறுபவர்**
கவிஞர். முகில்வாணன் (ஜேர்மனி)

**வெளியீட்டுரை**
கவிஞர். செங்கதிரோன்

**விமர்சனவுரை**
கலாபூசனம் செ. எதிர்மன்னசிங்கம்
(முன்னாள் வடகிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர்)

**நன்றியுரை**
திரு. ஸ்ரீஞானேஸ்வரன்
(ஆசிரியர் – கண்ணாடி)

நிகழ்ச்சித் தொகுப்பு : ஆ.கி. பிரான்சிஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

---

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

Trinco vision அமைப்பினூடாக Bright Ann White Resturant, Honda Yamaha Service dealer உரிமையாளரான போல் ராஜ் மற்றும் Reo Ceremic நிறுவனத்தின் நிதியுதவியில் திருகோணமலை பன்குளம் தி.ஔவை நகர் தமிழ் வித்தியாலயத்திற்கு பன்குளத்தை சேர்ந்த சிவரஞ்சன் தர்மலிங்கம் அவர்களால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 1ம் ஆண்டு தொடக்கம் 5ம் ஆண்டு வரையான 61 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

எம் மாணவர்களின் கல்வி வளர்ச்சி என்பது மிக முக்கயமான ஒன்று எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## விழிப்புணர்வு வீதி நடைபவனி

- நிக்கி -

விளையாட்டு மற்றும் உடல் நல மேம்படுத்தல் தேசிய வாரம் இம்மாதம் 25ம் திகதி முதல் 30ம் திகதி வரை தேசிய அளவில் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு வீதி நடை பவனி கடந்த 25.01.2016 காலை 8.30 மணிக்கு கிழக்கு மாகாண விளையாட்டு மற்றும் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தலைமையில் திருகோணமலை உட் துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகண சபை கட்டடத்தொகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

இந்நடைபவனியின் போது நகரின் முக்கிய சந்திகளில் உடற்பயிற்சி செய் முறைகளை குறித்த உத்தியோகத்தர்கள் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.




### தம்பலகாமத்தில் ....

- முள்ளிப்பொத்தானை நிருபர் -

விளையாட்டு, உடல் மேம்பாட்டு தேசிய வாரத்தை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே.சிரிபதி அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்திருந்த உடல் மேம்பாட்டு ஊர்வலம் கடந்த வியாழன் காலை ஒன்பது மணியலவில் முள்ளிப்பொத்தானை சமுர்த்தி வங்கி முன்னால் ஆரம்பிக்கப்பட்டு பிரதேச முன்னால் வரையிலான கண்டி பிரதான வீதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே. விஷ்னு, பிரதேச காவல் அதிகாரி, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் உட்பட சுமார் 180 மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.





# விளையாட்டு முரசு

## மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி
### சாய்ந்தமருது பிளைங்ஹோஸ் அணி வெற்றி

ஜனாதிபதி செயலகம், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் முகாமைத்துவ அமைச்சின் அறிவுறுத்தல்களுக்குமைய விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கிய விருத்தி தேசிய வாரத்தினை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கல்முனை காவல்துறை நடாத்திய 10 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த வியாழக்கிழமை காவல்துறை அணிக்கும், சாய்ந்தமருது பிளைங்ஹோஸ் அணிக்கும் இடையில் சாய்ந்தமருது கடற்கரை பொளசி ஐக்கிய மைதானத்தில் கல்முனை காவல் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.எம்.கப்பார் தலைமையில் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளைங்ஹோஸ் விளையாட்டு கழகத்தினர் 10 ஓவர்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களை பெற்றனர். 97 என்ற இலக்கினை அடைய கலம் புகுந்த கல்முனை காவல்துறை அணி 9.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். எனவே சாய்ந்தமருது பிளைங்ஹோஸ் அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

## மைலோ கப் தேசிய மட்ட உதைப்பந்தாட்ப் போட்டி
### கிண்ணியா மத்திய கல்லூரி இரண்டாம் இடம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

மைலோ கப் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. வெற்றி பெற்ற மாணவர்களை கிண்ணியாவில் உள்ள அனைத்து வீதி ஊடாக வாகன பேரணியாக வரவேற்கும் நிகழ்வு கடந்த 26-01-2016 அதிபர் எம்.அ.அனிபா தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் ஆசிரியர், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## விராட்டின் ரசிகருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனை

கிரிக்கெட்

இந்தியா-அவுஸ்ரேலியா இடையே நடைபெற்ற 20-20 கிரிக்கெட் போட்டியில் விராத் கோஹ்லி சிறப்பாக விளையாடினார். இதனை கொண்டாடும் விதமாக பாகிஸ்தானை சேர்ந்த அவரது ரசிகர் உமர் தனது ஹீரோ அவுஸ்ரேலிய பந்துவீச்சை விளாசி தள்ளியதாலும், அதனால், இந்திய அணி வெற்றி பெற்றதாலும் தனது வீட்டின் மேல் இந்திய தேசியக் கொடியை பறக்க விட்டுள்ளார். இது குறித்து அயலவர் காவல்துறைக்கு தகவல் அளித்தமையை தொடர்ந்து உமர் வீட்டுக்கு வந்த காவல்துறை இந்திய தேசியக் கொடியை கீழே இறக்கி கைப்பற்றியதுடன் வீட்டில் இருந்த விராட் கோலியின் படங்களையும் கைப்பற்றியதுடன் கைது செய்யப்பட்ட உமரிற்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஆசியக்கிண்ண போட்டித்தொடர் பெப் 24இல்

கிரிக்கட்

13வது ஆசியக் கிண்ணப் போட்டிகள், எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி, இந்திய, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளன. இப்போட்டிகள், பங்களாதேஷில் இடம்பெறவுள்ளதோடு, பிரதான தொடரில், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவற்றோடு, தகுதிகாண் போட்டிகளின் மூலமாக, துணை அங்கத்துவ நாடொன்றும், பங்குபற்றவுள்ளது. தகுதிகாண் போட்டிகள், பெப்ரவரி 19ம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், இப்போட்டிகளில், ஆப்கானிஸ்தான், ஓமான், ஹொங் கொங், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் மோதவுள்ளன. இம்முறை போட்டிகள், இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடராக அமையவுள்ளது.



## அரையிறுதிக்குள்....

டென்னிஸ்

இடம்பெற்றுவரும் அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில், ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டிகளுக்கு, ஐக்கிய இராச்சியத்தின் அன்டி மரே தகுதிபெற்றுள்ளார். அவரது அரையிறுதிப் போட்டியில், கனடாவின் மிலோஸ் றாவோனிக், பிரான்ஸின் காயெல் மொன்பில்ஸ் இருவரில் ஒருவரையே சந்திக்கவுள்ள நிலையில், அப்போட்டியில் அவர் வெற்றிபெறுவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அவர், அடுத்த அரையிறுதிப் போட்டியில், நொவக் ஜோக்கோவிச்சும் ரொஜர் பெடரரும் மோவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 20 ஆண்டுகள் தண்டனை

கிரிக்கட்

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான குலாம் போடி 20 ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற உள்ளூர் 20 க்கு 20 போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட முயற்சித்தாக முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்தே இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## 19இற்குட்பட்ட உலக கிண்ண போட்டி

19 வயதிற்கு உட்பட்ட உலக கிண்ண கிரிக்கட் போட்டிகளில், இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள், பிஜி - சிம்பாபே மற்றும் நபிபியா ஸ்கோட்லாந்து அணிகள் நேற்று மோதின. கடந்த வியாழன் இடம்பெற்ற போட்டிகளில் இலங்கை அணி, கனடா அணியை வீழ்த்தி, 196 ஓட்டங்களினால் வெற்றியீட்டியதுடன், இந்திய மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் இந்தியா அணி 79 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது. பங்களாதேஸ் அணி 43 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.



## 21 வாக்குகளால் பதக்கத்தை வென்றார் டேவிட் வார்னர்

அவுஸ்திரேலியாவின் உயரிய கௌரவமான அலன் போர்டர் பதக்கம் (Allan Border Medal) இந்த வருடம் டேவிட் வார்னருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஸ்டீவன் ஸ்மித், மிச்செல் ஸ்டார்க் ஆகியோரை பின்தள்ளியே டேவிட் வார்னர், அலன் போர்டர் பதக்கத்திற்கு பாத்திரமாகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் உயரிய கௌரவமான அலன் போர்டர் விருது வழங்கல் விழா மெல்பேர்னில் நடைபெற்றது. வாக்குகளின் அடிப்படையில் 21 வாக்குகள் வித்தியாசத்தில் டேவிட் வார்னர், அலன் போர்டர் பதக்கத்தைத் தட்டிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாடறுப்பு ஒரு தேசிய பிரச்சனை

ஹலீம்

மாடறுப்பு தடை இலங்கையின் பொருளாதாரம், இயற்கை சமநிலை சார்ந்த ஒரு தேசிய பிரச்சினை என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கிண்ணியாவில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் அண்மையில் இலங்கையில் இறைச்சிக்காக மாடறுப்பது தடைசெய்யப்பட்டு தேவையான இறைச்சிகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தான் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் கூறியிருப்பதாக தை பொங்கல் விழாவில் ஜனாதிபதி கூறியிருந்ததும் ஜனாதிபதியுடனான பொதுபலசேனாவின் சந்திப்பும் தற்போது முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் நல்லாட்சியைச் சந்தேக கண் கொண்டு பார்க்க தூண்டியுள்ளது.

மாடறுப்பு இலங்கையில் 17



# காணாமற்போனவர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றனர் -மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு-

காணாமல் போனதாகக் கூறப்படும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் வெளிநாடொன்றில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக காணாமல் போனோர் குறித்து தேடியறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர், ஓய்வுபெற்ற நீதியரசர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

குறித்த நாட்டுடன் பேச்சு நடத்தி அவர்களை விடுவிப்பது குறித்து ஆராய்ந்து பார்க்குமாறு வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ள - தாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் 40 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் வெறும் மாயையாகும் என்றும் அவர் 17

# தமிழ் ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பான நீதி விசாரணை எங்கே???

அச்சுதன்

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட 44 ஊடகவியலாளர்களில் 41 பேர் தமிழ் ஊடகவியாளர்கள். 03 பேர் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள்.

ஆயினும் 03 பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் தொடர்பில் நீதி விசாரனை ஆரம்பித்தள்ளபோதும் 41 தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் எவ்வித விசாரனையும் இன்றுவரை ஆரம்பிக்கப் படவில்லை என யாழ் ஊடக மையத்தின் ஒருங்கிணைப்பாளர் தயாபரன் தெரிவித்தார்.

திருகோணமலையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்த-ராஜனின் 10வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 24ம் திகதி கல்முனை வை.எம்.சீ.மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது தழிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பாகக் காவல் மா அதிபரிடம் தாம் கோரிக்கையை முன் வைத்த போது தமிழ் ஊடகவியலாளரின் தலைவர் என்று கூரும் பெருமைக்குரிய, படுகொலை செய்யப்பட்ட சிவராம் அவர்களை யார் என்று காவல் மா அதிபர் வினவுகிறார்? அவருடைய வழக்கு இலக்கத்தை கூட அவர்களின் குடும்பத்தாரிடம் இருந்து பெற்றுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் தான் இன்று கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளரது படுகொலை தொடர்-பான விசாரணை காணப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படுகொலை செய்ய-ப்பட்ட ஊடகவியலா-ளர்களுக்கான நட்ட ஈடு வழங்குவதாக தெரிவித்துள்ளார். 17

# கல்முனை நகர அபிவிருத்திக்கு பிரதமர் அழைப்பு

**கிழக்கில் முதலிடுவோம் மாநாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு**

கல்முனை புதிய நகர அபிவிருத்தி திட்டத்திற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்களது உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்ததாக விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

"கிழக்கில் முதலிடுவோம்" வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மாநாடு நேற்று (28) வியாழக்கிழமை கொழும்பு கலதாரி ஹோட்டலில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அங்கு தெரிவித்ததாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

பிரதமர் அங்கு கருத்து வெளியிடுகையில்,

புதிய நல்லாட்சி அரசாங்கம் நாட்டிலுள்ள நகரங்களை சகல வசதிகளுடன் கூடிய நகரமாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தினை முன்னெடுத்து வருகிறது. இதில் கிழக்கு மாகாணத்திலுள்ள கல்முனை நகரமும் ஒன்றாகும். இதனை சகல வசதிகளும் கொண்ட நகரமாக அபிவிருத்தி செய்ய இந்த மாநாட்டுக்கு ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ள முதலீட்டாளர்கள் தங்களது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். 17


நன்றி - அவந்த ஆர்டிகல

## மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளரை மாற்ற முயற்சிகள் முன்னெடுப்பு

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அகிலா கனகசூரியம் அவர்கள் அப்பதவியில் இருந்து அரசியல் பழிவாங்கலால் இடமாற்றப்-படவுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

மூதுஸர் கல்வி வலயத்தினை நிர்வாக ரீதியில் அகில இலங்கையின் இரண்டாவது இடத்திற்கு உயர்த்திய குறித்த கல்விப் பணிப்பாளர் தாமாகவே குறித்த பதவியிலிருந்து விலகத்தக்க வகையில் மேலதிகாரிகளின் பல்வேறு அழுத்தங்களை.....

எதிர்கொண்டு வருவதாக நம்பத்தகு செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்னும் இரண்டு வருடங்களைக் கூட நிறைவு செய்யாத மேற்படி அலுவலரை மாற்றி தற்போது கல்வி அமைச்சில்......... 17

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி,
திருகோணமலை.
0777 555 738

விளம்பரங்கள் செய்ய உதவி வேண்டுமா? நாங்கள் தயாராக உள்ளோம்....!

உங்களுக்குத் தேவையான அனைத்து விளம்பரங்களையும், அனைத்துப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்த எங்கள் உதவியை நாட முடியும்....!

உங்கள் வீடு, காணி, வாகனம், வியாபாரத் தேவைகள். வாடகை, விற்பனை மற்றும் கொள்வனவு செய்வதற்கு IKMAN.LK இணையத்தளத்தில் பதிவேற்றுவதற்கு நாம் உதவுகின்றோம்

தொடர்பு
077 11 28 299
rebevijith@gmail.com

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 30.01.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org